விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்; இருபத்தெட்டு — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 பங்குனி 22 திங்கட்கிழமை (05.04.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 107

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாந் தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சிமெந்து
RAMCO

## ஐ.நா. நிபுணர்கள் குழுவுடன் அரசு ஒத்துழைக்காதாம்!

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனால் இலங்கை விவகாரம் தொடர்பில் முன்மொழியப்பட்ட நிபுணர் குழு அமைக்கப்பட்டால் அரசு அதனுடன் ஒத்துழைக்கமாட்டாது என வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இது பற்றி வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகம மேலும் தெரிவித்துள்ளதாவது,

அவ்வாறான குழுவொன்று நியமிக்கப்பட்டால் அக் குழுவுக்கு எந்த ஒத்துழைப்பையும் வழங்கமாட்டோம். அதனை ஏற்கனவே நாம் நிராகரித்து விட்டோம்.

ஐக்கிய நாடுகள் சபையானது இலங்கை விடயத்தில் நிபுணர் (28 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ விசாரணைக்கு எதிராக வழக்குத் தொடர ஐ.தே.மு. திட்டம்

(கொழும்பு)

ஜெனரல் சரத் பொன்சேகாவின் இரண்டாவது நீதிமன்ற விசாரணைக்கு எதிராக ஜனநாயக தேசிய முன்னணி வழக்குத் தாக்கல் ஒன்றைச் செய்யவுள்ளது.

இரண்டாவது இராணுவ நீதிமன்ற விசாரணை நீதிமன்றத்தை அவமதிப்பதாகவுள்ளது எனக் கூறி ஜனநாயக தேசிய முன்னணி வழக்குத் தாக்கல் செய்யவிருப்பதாக நேற்றைய தினம் ஊடகவியலாளர்கள் மாநாட்டில் ஜனநாயக தேசிய முன்னணியின் உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க கூறினார்.

ஜெனரல் சரத் பொன்சேகாவின் இரண்டாவது இராணுவ (28 ஆம் பக்கம் பார்க்க)

# பொதுத் தேர்தல் வன்முறைகளில் உட்கட்சி மோதல்களே அதிகம்!

## ஆறு இலங்கை அகதிகள் தனுஷ்கோடியில் கைது

(கொழும்பு)

இலங்கை அகதிகள் ஆறு பேர் தமிழ்நாட்டிருந்து வெளியேறும் பொழுது தனுஷ்கோடி கடற்கரைப் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் அகதி முகாம்களிலிருந்து வெளியேறும் போது குறிப்பிட்ட மாவட்டத்தின் அதிகாரிகளின் அனுமதியைப் பெறவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

தமிழ்நாட்டிலுள்ள கரூர், ஈரோடு, திருச்சிராப்பள்ளி, (28 ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்பு அமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுத் தேர்தல் வன்முறைகளில் கட்சிகளுக்கிடையிலான வன்முறைகளை விட உட்கட்சி மோதல்களே வரையறையின்றி இடம்பெற்றுள்ளதாகப் பொதுத் தேர்தலைக் கண்காணிக்கும் அமைப்பு தெரிவித்தது. இதில் பலர் காயமடைந்துள்ளதாகவும் அவ் அமைப்பு தெரிவித்துள்ளது. (28 ஆம் பக்கம் பார்க்க)

## பௌத்த மத குருமாரின் உண்ணாவிரதம் தொடர்கிறது

(கொழும்பு)

ஜெனரல் சரத் பொன்சேகாவை விடுதலை செய்யுமாறு கோரி பௌத்த மதக் குருமார்கள் ஆரம்பித்த சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டம் 2 ஆவது நாளாக நேற்றும் தொடர்ந்தது.

சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ள இந்த பௌத்த மத குருமார்கள் மக்கள் விடுதலை முன்னணி சார்பு அணியைச் சேர்ந்தவர்கள் எனக் கருதப்படுகின்றனர். (28 ஆம் பக்கம் பார்க்க)

## சட்டவிரோத ஆயுத பாவனைக்கு எதிராக பொலிஸார் நடவடிக்கை

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் ஆயுதங்களைப் பேணுவோருக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

சட்டவிரோதமான முறையில் தனிப்பட்ட நபர்கள் ஆயுதங்களை வைத்திருக்கக் கூடாதெனவும் அவ்வாறு பேணும் நபர்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தேர்தல்களுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மாஅதிபர் காமினி நவரட்ண தெரிவித்துள்ளார்.

கட்சி ஆதரவாளர்கள் ஆயுதங்களைப் பயன்படுத்து (27 ஆம் பக்கம் பார்க்க)

## முகாம்களுக்கு செல்லும் வேட்பாளர்கள் அங்குள்ள மக்களை அச்சுறுத்துகின்றனராம்

(கொழும்பு)

இடைத்தங்கல் முகாம்களுக்கு பல்வேறு கட்சிகளையும் சுயேட்சைக் குழுக்களையும் சேர்ந்தவர்கள் பிரசாரத்திற்காக வந்து செல்கின்றனர்.

அவர்களில் சிலர் தம்மை அச்சுறுத்தும் வகையில் நடந்து கொள்வதாகவும் கூறுகின்றனர்.

யுத்த மோதல்கள் இடம்பெற்ற சூழலில் வாக்களிக்கும் உரிமையையிழந்திருந்த தாம் இந்தத் தேர்தலில் வாக்களிப்பதற்கு மிகவும் ஆர்வமாக இருப்பதாக முகாம்களில் உள்ள மக் கள் தெரிவித்துள்ளனர்.

அன்றாடப் பிரச்சினைகள் தொடங்கி அரசியல் பிரச்சினைகள் வரையில் அனைத்திற்கும் தீர்வு (27 ஆம் பக்கம் பார்க்க)

இன்றைய
இயல்பு வாழ்க்கை
நீங்கள் பெற்ற வெகுமதி

இனிவரும் நாட்களில்
அரசியலுரிமை, அபிவிருத்தி
புனர்வாழ்வை வென்றெடுக்க

இந்தத் தேர்தலைப்
பயன்படுத்துவோம்.



X 9

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)



தமிழ் மக்களுக்காக தன்னுயிரை தியாகம் செய்தவர் மகேஸ்வரன். அவரது படுகொலைக்கு கண்டனம் தெரிவிக்க வேண்டியது எமது கடமை. இதற்கான சந்தர்ப்பம் எதிர்வரும் 8ஆம் திகதி எமக்கு கிடைத்துள்ளது. அன்றைய தினம் யானைச் சின்னத்திற்கு நேராகவும் 8ஆம் இலக்கத்திற்கு மேலாகவும் புள்ளடியிட்டு எமது கண்டனத்தை பறைசாற்றுவோம்.

திருமதி விஜயகலா மகேஸ்வரன்
(முதன்மை வேட்பாளர்)

X 8

ஐக்கிய தேசிய கட்சி

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## மயக்கமுற்ற சிறுமி உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

திடீரென மயக்கமுற்ற குழந்தை யாழ். போதனாவைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளது.

இச்சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது. இதில் அச்சுவேலியைச் சேர்ந்த ந.சஜிதா (வயது 4) என்ற குழந்தையே உயிரிழந்துள்ளார்.

இக் குழந்தைக்கு காலை உணவுடன் அன்னாசிப்பழம் சேர்த்து கொடுத்ததாகவும் அதனை உண்ட குழந்தை சிறிது நேரத்தில் மயக்க முற்றதாகவும் கூறப்பட்டது. மயக்கமடைந்த அவர் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துவரும்வழியில்உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ச-30)

# குமுதினி போன்ற புதிய படகொன்றை கொள்வனவு செய்ய இணக்கம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு மக்களின் போக்குவரத்துக்கென குமுதினி படகுகள் போன்ற புதிய படகு ஒன்றை கொள்வனவு செய்வதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி முன்வந்துள்ளதாக யாழ். அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

நெடுந்தீவு மக்களின் போக்குவரத்துக்கு பயன்படுத்தப்பட்டு வந்த குமுதினி படகு பழுதடைந்துள்ளதால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந் நிலையில் குமுதினி படகை போன்றதொரு படகை கொள்வனவு செய்வதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி முன்வந்துள்ளது.

இப்படகை கொள்வனவு செய்யும் வரையும் குமுதினி படகைத்திருத்தி அதனை சேவையில் ஈடுபடுத்துமாறும் ஆசிய அபிவிருத்தி வங்கி கூறியுள்ளது.

நெடுந்தீவு-குறிகாட்டுவான் போக்குவரத்துக்கென நெடுந்தீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் படகொன்றும் தனியாரின் படகொன்றும் சேவையில் ஈடுபடுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு

(மிருசுவில்)

மிருசுவில் றோ.க.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை முதல்வர் எவ்.ரீ.எடிசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக பாடசாலையின் முன்னாள் அதிபரும், தற்போதைய யா/நாவாந்துறை றோ.க.வித்தியாலய அதிபருமாகிய எவ்.எக்ஸ்.அன்ரன் அவர்கள் கலந்து கொள்வார். (ச-3)

## யாழ். பல்கலையில் நினைவுப் பேருரை

(யாழ்ப்பாணம்)

பட்டமளிப்பு வைபவத்தினைத் தொடர்ந்து இடம் பெறும் நினைவுப் பேருரை நிகழ்வு வரிசையில் சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரை இன்று காலை 10 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் துணை வேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் தலைமையில் இடம்பெறும்.

உயர் கல்வியில் பெண்கள் சமூக பொருளாதார அணுகுமுறை என்ற பொருளில் கல்வியியற்துறை பேராசிரியர் மா.சின்னத்தம்பி நினைவுப் பேருரையினை வழங்கவுள்ளார். (ச-3)


## பாராளுமன்றத் தேர்தல்-2010

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி

அன்பான வாக்காளப் பெருமக்களே!

என்றென்றும் யாழ். மக்களோடு இருந்து சேவையாற்றும் எங்கள் தோழர்களுக்கே வாக்கை அளியுங்கள்



6

தோழர் கமல்



10

தோழர் கி.பி



9

தோழர் டக்ளஸ் தேவானந்தா

அளவெட்டி வாழ் மக்கள்

(1024)



## காணி விற்பனைக்கு

நல்லூர்க் கோவிலுக்கு அருகாமையில் உள்ள மருதடி வீதியில் வீட்டுடன் கூடிய 8பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புக்கு: T.P.: 077 2363537

(சி-4979)



## ஆனந்தி திருமணசேவை

றோமன் கத்தோலிக்க சமய சகோதரர்களுக்கு உள்நாட்டில் மணமக்களை நாடுகின்றோம். சகோதரி 1984ம் ஆண்டு பூரட்டாதி நட்சத்திரம் ,செவ்வாய் தோஷமில்லை.கிரக பாவம் 52 1/4 ,அழகும் கவர்ச்சியும் கொண்டவர்.உயரம் 5 அடி 4 அங்.,சகோதரன் 1979- ல் பிறந்தவர்.அஸ்வினி நட்சத்திரம் உயரம்5 அடி 8 அங். உதயச் செவ்வாய் .கிரகபாவம் 22. இருவரும் கனடா பிரஜா உரிமை பெற்றவர்கள் (N) நேரடியாக, கடித மூலம், தொலைபேசி 0212228708 வாயிலாக தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி,V.A. சிவராசா ,சோதிடர், 56, அம்மன் றோட் கந்தர் மடம்.யாழ்ப்பாணம்.

(1119)



## சுயேட்சைக்குழு-10



கலைமாணி, கல்வியியல் முதுமாணி, கல்வியியல் கலாநிதி

**ச.நா.தணிகாசலம்பிள்ளை**

(முன்னாள் கல்விப் பணிப்பாளர்)

(முதன்மை வேட்பாளர்)

(சி-5100)



## பாராளுமன்றத் தேர்தல்-08.04.2010

(இலங்கைத் தமிழரசுக் கட்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

### இறுதி நாள் பொதுக்கூட்டம்

நாள்: 05.04.2010 திங்கட்கிழமை
நேரம்: மாலை 5.00 மணி
இடம்: நல்லூர் சட்டநாதர் சிவன் கோவில் தெற்கு வீதி.
தலைமை: திரு. பெ. கனகசபாபதி (தலைவர் இலங்கைத் தமிழரசுக் கட்சி யாழ். மாவட்டக் கிளை)

அனைத்து யாழ் .மாவட்டத் தேர்தல் வேட்பாளர்களும் கலந்து கொண்டு கருத்துரையாற்றுவார்கள்

அன்பர்கள், ஆதரவாளர்கள், அனைவரையும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.



யாழ்ப்பாணம்
04.04.2010

இலங்கைத் தமிழரசுக் கட்சி
நல்லூர் தொகுதி கிளை.

(1019)



## பாராளுமன்றப் பொதுத் தேர்தல் - 2010 யாழ் மாவட்டம்

கடமைகளுக்காகத் தன்னைக் கருவியாக்கியவர்....

அப்பாத்துரை விநாயகமூர்த்தி LL.B

(சிரேஷ்ட சட்டத்தரணி,
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)



1



தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு
(இலங்கை தமிழரசுக்கட்சி)

# இன்று ஒரு தகவல்

## புயல்

''அந்த மரத்துக்கு அடியில் கொஞ்சநேரம் உட்கார்ந்திருந்தேன். காற்று சுகமாக வீசியது. ஆனந்தமாக இருந்தது" என்று சொல்வதுண்டு.

காற்று மெதுவாக வீசினால் அது சுகமாகத்தான் இருக்கும். அதுவே புயலாக வீசிவிட்டால்... அது சுகமாகவா இருக்கும்?.

கடற்கரைக்குப் போவது எதற்காக? காற்று வாங்குவதற்காகத்தான். புயல் வாங்குவதற்காக இல்லை.

புயல் வாங்குவதற்காக 'பீச்'சுக்ப் போகிறேன் என்று சொன்னால் இவர் புய்லை வாங்க முடியாது. புயல் இவரை வாங்கிக் கொண்டு போய்விடும். தூக்கிக் கொண்டு போய் கடலில் போட்டுவிடும். அதன் பின் தட்டுத்தடுமாறி நீச்சலடித்து கரைக்கு வந்து சேர வேண்டும்.

உயிர் வாழ்வதற்கு காற்று மிகவும் அவசியம் தான். அது மெதுவாக இருந்தால் தவழ்கிறது என்போம். சுமாராக இருந்தால் வீசுகிறது என்போம். புயலாக இருந்தால் சீறுகிறது என்போம். வித்தியாசம் என்பது இங்கே வேகத்தைப் பொறுத்தது.

புயல்... 'நான் இத்தனை மணிக்கு இந்த இடத்துக்கு வரப்போகிறேன். எல்லோரும் ஜாக்கிரதையாக இருங்க என்று சொல்லிவிட்டு வருவதில்லை' ஆனாலும் சில அறிகுறிகளை வைத்து ஓரளவுக்கு அதைக் கண்டுபிடிக்க முடியும்.

கடற்பகுதியில் வேகமான காற்று உருவாகும். அதன் காரணமாக உண்டாகும் கடல் அலைகள் நாலாதிசைகளிலும் சஞ்சரித்து சாதாரணமாக காற்று அடிக்காத பகுதிகளில் கூட கடுமையாக அலைகள் உண்டாகும். இதை ஸ்வெல் (Swell) என்று சொல்கிறார்கள்.

சாதாரண நாட்களில் கடலின் உட்பகுதியில் காணப்படும் இந்த 'ஸ்வெல்'கள் பரவி படர்ந்து கடற்கரையோரத்திலும் தென்பட ஆரம்பித்தால் அங்கே புயலை எதிர்பார்க்கலாம்.

மேகங்களில் பலவகை உண்டு. அதில் சைரஸ் (Cirrus Clouds) என்பது நார்கள் மாதிரி அமைந்திருக்கும். இது வானத்தில் தெரிந்தாலும் அது புயலுக்கு ஒரு அறிகுறிதான்!

புயல் மையம் இருக்குமல்லவா, அதற்குச் செங்குத்தான உயரத்தில் இந்த மேகங்கள் தென்படும்.

புயல் தீவிரமாகும் போது... (Cirro status) மேகம் வானத்தை மூடிக் கொள்ளும். ஆதவன் உதயமாகும் நேரம்,மறையும் சமயங்களில் வானம் பிரகாசமான சிவப்பு நிறத்தில் இருக்கும்.

புயல் காற்று நூறாவது மைலில் வீசும் போதே நாம் இருக்கும் இடத்தின் காற்றின் திசையில் மாற்றம் ஏற்படுகிறது. காற்றழுத்தம் திடீரென்று கூடும், குறையும். அடுத்தடுத்து காற்றழுத்தம் குறைந்து கொண்டே போனால் புயல் நம்மைத் தேடி வந்து கொண்டிருக்கிறது என்று அர்த்தம்.

சாதாரணமாக வீசிக் கொண்டிருக்கும் காற்றின் திசை அடிக்கடி மாறும் . வேகமும் அதிகரிக்கும். புயல் வருவதற்கு முன் உள்ள சூழ்நிலை புழுக்கமாகவும் வறண்டும் இருக்கும்.

சலனமில்லாமல்...சூனியமா இருந்தால் கொஞ்சம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டியது தான். புயலுக்குப் பின் அமைதி என்கிறோமல்லவா... அதேபோல் அமைதிக்குப்பின் புயல்.

மைக்ரோ– சீஸ்மோ கிராப் என்ற கருவியில் புயல் காற்றை உண்டாக்கும் சிறு சலனம் கூட பதிவாகிவிடும்.

செயற்கைக் கோள்களும் இதற்கு உபயோகமாக உள்ளது. புயலின் வேகத்தைக் குறைப்பதற்கு அமெரிக்காவில் ஒரு சோதனை நடந்தது.

ஒரு வேவு விமானம் புயலின் திசையை நோக்கிப் பறந்து சில்வர் அயோடைட் குண்டுகளைப் பொழிந்ததாம். இதனால் காற்றின் சக்தியை 31 சதவீத அளவுக்குக் குறைக்க முடிந்ததாம்.

என்னதான் சொல்லுங்க. இயற்கையை ஜெயிக்கிறது கஷ்டம் என்று தான் தோன்றுது. உலகத்தை அழிக்கக்கூடிய அணுகுண்டை மனிதனால் தயார்பண்ண முடிகிறது. ஆனால் அழிக்க வரும் புயலைத் தடுத்து நிறுத்த முடியவில்லையே!

'புயல் வேகம்' பொன்னம்பலம் என்று ஒருத்தர் இருந்தார். அவர் பேசினாலே இடி இடிப்பது போலிருக்கும். அவருடைய பேச்சைக் கேட்பவர்கள் எல்லாம் நடுநடுங்கிப் போய் விடுவார்கள்.

அவர் ஒருநாள் மனைவியைக் கூப்பிட்டு''இதே பார்... புயல்வேகப் பிரசாரத்துக்காக புறப்பட்டுப் போகிறேன். திரும்பிவர ஒரு வாரமாகும்" என்று சொல்லிவிட்டு போனார்.

ஆனால் 15 நிமிடத்தில் அதே வேகத்தில் திரும்பி வந்துவிட்டார்.

" என்ன விடயம்?" என்று கேட்டார் மனைவி.

"நிஜமாகவே புயல் வரப்போகிறதாம். அதுதான் பேச்சை கான்சல் பண்ணிவிட்டுத் திரும்பி வந்து விட்டேன்" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தேசிய கலை,இலக்கியப் போட்டி முடிவுகள்–2010

கலாசார அலுவல்கள் திணைக் களத்தினால் தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் நடத்தப்பட்ட தேசிய கலை ,இலக்கிய போட்டியின் முடிவுகள்–2010 தென்மராட்சி பிரதேச செயலகத்தினால் வெளியிடப்பட்டுள்ளன.

**தமிழ் மொழி மூலம்**

**கட்டுரை**

*கனிஷ்ட பிரிவு*

கு.றதீபா–(மட்டுவில் கமலாசினி வித்தி), க.தர்மிதா, ர.தேனுசன்–(மீசாலை வீர்சிங்கம் மகா வித்தி),

*சிரேஷ்ட பிரிவு*

சி.லக்சியா–(மீசாலை வீரசிங்கம் மகா வித்தி), வ.சசிகலா– (சாவகச் சேரி டிறிபேர்க் கல்லூரி), ச.குகப்பிரியா–(சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

**கவிதை**

*கனிஷ்ட பிரிவு*

ஜெ.ஜெயகீதன், ப.நிதுஷன், இ.ஷமீதா– (சாவ/இந்துக் கல்லூரி),

*சிரேஷ்ட பிரிவு*

பா.கிரிருஸா– (மீசாலை வீரசிங்கம் மகா வித்தி), தௌ.கார்த்திகா–(சாவ.டிறிபேர்க் கல்லூரி ), ஸ்ரீ.றம்யா–(சாவகச்சேரி. இந்துக்கல்லூரி)

*திறந்த போட்டி*

வ.சின்னப்பா, ந.ரஞ்சனா, ச.அகிலன் –(சாவகச்சேரி),

**சிறுகதை**

*கனிஸ்ட பிரிவு*

ப.நிதர்சன்– (சாவ.இந்துக் கல்லூரி), சி.லக்சியா –(மீசாலை வீரசிங்கம் மகா வித்தி),

*சிரேஷ்ட பிரிவு*

யோ.கிரிசாந்தி –(கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தி), பா.கிரிஸா,க.மனோசா –(மீசாலை வீரசிங்கம் மகா வித்தி),

*திறந்த போட்டி*

ந.ரஞ்சனா– (சாவகச்சேரி), க.சோமசேகரம், ந.பிருந்தாவனிதை–(சாவகச்சேரி வடக்கு),

**பாடலாக்கம்**

*கனிஷ்ட பிரிவு*

மு.அபிராமி –(மீசாலை வீரசிங்கம் மகா வித்தி,.

*சிரேஸ்ட பிரிவு*

பா.கிரிஸா–(மீசாலை வீரசிங்கம் மகா வித்தி),

*திறந்த போட்டி*

ந.ரஞ்சனா –(சாவகச்சேரி), திருமதி.இ.சூரியகுமாரி –(மீசாலை), வ.சின்னப்பா–(சாவகச்சேரி),

**ஆங்கில மொழி மூலம்**

**கவிதை**

*கனிஷ்ட பிரிவு*

மு.அபிராமி –(மீசாலை வீரசிங்கம் மகா வித்தி),

*திறந்த போட்டி*

வ.சின்னப்பா , அன்ரனிஸ்ரன், லோ.கபாலினி –(சாவகச்சேரி),

**சிறுகதை**

*திறந்த போட்டி*

வ.சின்னப்பா– (சாவகச்சேரி)

**பாடலாக்கம்**

*திறந்த போட்டி*

கே.ஜெயப்பிரதாயினி, ம.விவேகானந்தன், திருமதி.ச. உருத்திரா தேவி – (சாவகச்சேரி). (6)

# வாகன வசதி இன்மையால் பல்வேறு அசௌகரியம்

## யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத் தலைவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். விழிப்புலனற்றோர் சங்கம் தனது அலுவலக செயற்பாடு களை மேற்கொள்வதற்கு வாகன வசதி இல்லாததனால் பெரும் சிரமங்களை எதிர் கொண்டுவரு வதாக சங்கத்தின் தலைவர் ஆசைப்பிள்ளை மகேந்திரன் தெரிவித்துள்ளார்.

கடந்த காலத்தில் சங்கத்திற்கென முன்னாள் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் மூச்சக் கர வண்டி ஒன்றை வழங்கியதாகவும் இவ் வண்டியில் அதிகளவான சங்க உறுப்பினர்கள் பயணிக்க முடியா துள்ளது எனவும் தமது நிலையை கருத்திற் கொண்டு கூடுத லானவர்கள் பிரயாணிக்கக்கூடிய வாகனங் களை அன்பளிப்பாக வழங்க விரும் புபவர்கள் சங்க அலு வலகத்துடன் தொடர்பு கொள்ளு மாறு அவர் கேட்டுக் கொள்கின்றார். (6–30)



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் 11 ஆவது இல்ல மெய்வல்லுனர் போட்டியில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமாகாண கல்வி ,பண்பாட்டலுவல்கள் ,விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் வெற்றி பெற்ற இல்லத்திற்கான கேடயத்தை வழங்குவதையும் அருகில் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# இராசி பலன்

05.04.2010
(பங்குனி 22, திங்கட்கிழமை)
சப்தமி பின்னிரவு 5.35 மணிவரை
மூலம் பின்னிரவு 12.11 மணிவரை
இராகுகாலம் 7.39–9.09 மணிவரை
சுபநேரம் 12.09–1.39 மணிவரை
நயினாதீவு வீரகத்தி விநாயகர் கொடி, நுணாவில் கொல்லக்கிராய் விநாயகர் கொடி,நெடுந்தீவு நெழுவினிற் பிள்ளையார் கொடி, நான்காம் பங்குனித் திங்கள்.

| | |
|---|---|
| மேடம் | சரீரப்பிரயாசை,பிரயாண நன்மை, தந்தை வழி உறவு, அதிக செலவு. |
| இடபம் | எதிர்பாராத பகை, தொழில் நன்மை, பணக்குறைவு,முயற்சி தாமதம். |
| மிதுனம் | மனோ தைரியம்,காரிய சித்தி, குடும்ப மகிழ்ச்சி, தனலாபம். |
| கடகம் | தொழில் விருத்தி, முயற்சி கைகூடும், தெளிந்த சிந்தை, மன மகிழ்ச்சி. |
| சிங்கம் | பணக்குறைவு, அஜீரண ரோகம், முயற்சி தாமதம், தாழ்ந்த சுபாவம். |
| கன்னி | மனச்சஞ்சலம், ரோகநிலை, சுப செலவு, அதிக பிரயாசை. |
| துலாம் | கூட்டு முயற்சி, தனவருவாய், போசனசுகம், நற்கீர்த்தி. |
| விருச்சிகம் | தனவிரயம், ரோகநிலை, போசன சுகக் குறைவு, வீண்பகை. |
| தனுசு | வெகுமானம், போசனசுகம், நல்லமுயற்சி, தெய்வசிந்தை. |
| மகரம் | காரிய அலைச்சல், தனவிரயம், தொழில் நன்மை, அமைதிக் குறைவு. |
| கும்பம் | தெய்வ சிந்தை, குடும்ப சுகம், தனலாபம், காரிய நன்மை. |
| மீனம் | அதிகாரம், தொழில் நன்மை, எடுத்த காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை. |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 70 | 40 |
| உருளைக்கிழங்கு | 50 | 60 | 50 |
| பச்சைமிளகாய் | 60 | 70 | 80 |
| தக்காளி | 50 | 60 | 30-40 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 30 | 40 |
| கோவா | 30 | 40 | 40 |
| கரட் | 100 | 110 | 100 |
| பூசணி | 30 | 35 | 40 |
| புடோல் | 40 | 50 | 40 |
| வாழைக்காய் | 30 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 50 | 60 | 50 |
| பெரிய வெங்காயம் | 60 | 60 | 60 |
| பாகற்காய் | 80 | 90 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 50 | 40 |
| கரணைக் கிழங்கு | 30 | 40 | 50 |
| பயிற்றங்காய் | 50 | 60 | 40 |
| லீக்ஸ் | 80 | 90 | 80 |
| பீற்றூட் | 30 | 40 | 50 |
| கறிமிளகாய் | 60 | 70 | 80 |
| முருங்கைக்காய் | 250 | 300 | 300 |
| போஞ்சி | 60 | 70 | 80 |
| கத்தரிதம்புள்ள | 40 | 50 | 40 |
| கீரை – 1 பிடி | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 100 | 110 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 35 |

# மரண அறிவித்தல்

## தம்பையா கந்தசாமி (பெரிய அங்கிள்)



சிவன் வீதி, ஆவரங்கால் மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா கந்தசாமி நேற்று (04.04.2010) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலம் சென்ற தம்பையா பார்வதி தம்பதியினரின் மூத்த புதல்வனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், தங்கமுத்து, காலம் சென்றவர்களான சின்னையா, மகேஸ்வரி மற்றும் சுப்பிரமணியம் செல்வராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் விஜயகுமாரி, பத்மநாதன், அருளானந்தன், பரமேஸ்வரன், கணேசமூர்த்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும், விக்னேஸ்வரன், ஞானேஸ்வரி, ஜெயராணி, பிரவீணா, தனுசா ஆகியோரின் மாமனாரும், சாரங்கன், றமேஸ், சங்கீதா, கிரிசாந், அஜந்தன், கபினயா, அரிசுதன், ஸ்ரீறியன், தேஜன், ரஸ்ணா ஆகியோரின் அன்புப் பேரனும், சண்முகம், செல்லம்மா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிவன் வீதி,
ஆவரங்கால் மேற்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

(1121)


**+ Royal Veterinary Clinic +**
**(Private)**

**றோயல் கால்நடை வைத்திய நிலையம்**
**(தனியார்)**

மேற்படி நிலையம் தனது சேவையை பின்வரும் முகவரியில் ஆரம்பித்துள்ளது.

**பழைய தபால் நிலையம்,**
**திருநெல்வேலிச் சந்தி, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.**

இந்நிலையம் சனி, ஞாயிறு உட்பட விடுமுறை தினங்களிலும் திறந்திருக்கும்.

(985)


# பொதுத் தேர்தலின் பின்னரான வன்முறைகளை தடுக்க வேண்டும்

## அஸ்கிரிய பீடாதிபதி வேண்டுகோள்

(கண்டி)

பொதுத்தேர்தலின் பின்னர் வன்முறைகளை தடுக்க ஜனாதிபதி முன்வர வேண்டும் என அஸ்கிரிய பீடாதிபதி கேட்டுள்ளார்.

நடைமுறையிலுள்ள தேர்தல் முறையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும் மக்களின் ஒத்துழைப்பு அவசியம் என்றார்.

மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென அஸ்கிரிய பீடாதிபதி, உடுகம ஸ்ரீ, புத்திரஜித்த தேரர் தெரிவிக்கின்றார். மூன்றில் இரண்டு மக்களாணையின் மூலம் இலங்கைக்கு உகந்த புதிய அரசியல் யாப்பொன்றைத் தயாரிப்பதே ஜனாதிபதியின் எதிர்பார்ப்பு.

மூன்று தசாப்த காலத்திற்கு மேல் இடம்பெற்ற யுத்தம், முப்படைத் தளபதியான ஜனாதிபதியின் தலைமையின் கீழ் முடிபுக்கு கொண்டு வரப்பட்டதனால் மக்கள் அச்சம் சந்தேகமின்றி மகிழ்வுடன் வாழ்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளதென, அஸ்கிரிய பீடாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதியின், இடமறிந்து செயற்படும் தன்மை மற்றும் அரசியல் திறமைகள் காரணமாகவே ஒரு போதும் தோற்கடிக்க முடியாது எனக் கருதப்பட்ட பயங்கரவாதத்தை வெற்றிகொள்ள முடிந்ததாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் சூடுபிடித்துள்ள நிலையில் வேட்பாளர்களின் ஆர்வம், குரோதம், பகைமை என்பன வெளிப்பட்டுள்ளதால் மக்கள் ஆச்சரியத்திற்கு உள்ளாகி உள்ளதாக மகாநாயக்க தேரர் கூறியுள்ளார். (ச-30)


**பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி**
**மக்கள் சின்னம் மெழுகுவர்த்தி**



**மக்களுக்காக உழைக்கும் தோழன்**
**உரிமைகளுக்காகப் போராடும்**
**தலைமைப் போராளி**
**ஸ்ரீதரனுக்கே உங்கள்**
**வாக்கு. மெழுகுதிரிக்கே**
**உங்கள் புள்ளடி**

**தி.ஸ்ரீதரன் (சுகு)**



X | 6

(ச-5102)



# எம் உயிர் இருக்கும்வரை தமிழ்த் தேசியக் கொள்கைகளை கைவிடப்போவதில்லை

## விலைபோனவர்களும் இணக்க அரசியல் நடத்துபவர்களும் உண்மையான தமிழ் தேசியம் பேசுவதில்லை



**செல்வராஜா கஜேந்திரன்**
பாராளுமன்ற உறுப்பினர்
யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய முன்னாள் தலைவர்

**தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி**
**பாராளுமன்றப் பொது தேர்தல் 2010**
**அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்**



X | 12

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டதின் ஒரு வடிவம் சிங்கள பௌத்த பேரினவாதிகளால் பிராந்திய சக்திகளின் முழுமையான அனுசரனையுடன் முள்ளிவாய்க்காலில் அழிக்கப்பட்டுவிட்டது. எனினும் தமிழ் மக்களின் உரிமைகள் பெறப்படும் வரை எமது உரிமைக்கான பயணம் முற்றுப்பெறப் போவதில்லை.

மாறிவரும் சர்வதேச சூழலில் பிராந்திய பூகோள போட்டி காரணமாக இலங்கை அரசுக்கும் மேற்குலகத்துக்கும் இடையேயான இராஜதந்திர இடைவெளி அதிகரித்து வருகின்றது. இந்நிலையில் மேற்குலகம் இலங்கை அரசின் மீது அழுத்தங்களை பிரயோகிப்பதற்கு தமிழ் மக்களின் உரிமைக்கான கோரிக்கையை கையில் எடுத்துள்ளது.

இந்த நிலையில் அடிப்படைத் தமிழ் தேசியக் கொள்கைகளில் நாம் உறுதியாக இருந்தால் எமது சுயநிர்ணய உரிமை, தனித்துவமான இறைமையுள்ள தேசம் என்பன அங்கீகரிக்கப்படுவதற்கான சாத்தியம் அதிகரித்துவருகின்றது.

இந்தியா ஒருபோதும் இலங்கை அரசின் விருப்புக்களுக்கு மாறாக தமிழ் மக்களின் அடிப்படை அபிலாசைகளை பூர்த்தி செய்யும் தீர்வு விடயத்தை முன்னெடுக்க அனுமதிக்கப்போவதில்லை என்பதனைத் நன்றாகத் தெரிந்திருந்தாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியாவின் பிராந்திய நலனைத் திருப்திப் படுத்தும் வகையில் தமிழ்த் தேசியத்தின் அடிப்படைக் கொள்கைகளைக் கைவிட்டு அரைகுறையான தீர்வுத்திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கொள்கைகளை கைவிட்டு தயாரித்துள்ள தீர்வுத்திட்டத்தை மக்களுக்குத் தெரியாமல் மறைத்துவைத்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தாம் தமிழ்த் தேசியக் கொள்கைகளை கைவிடவில்லையென தேர்தல் மேடைகளில் கூறிவருகின்றது. இது தேர்தலுக்காக பேசப்படுகின்ற வார்த்தைகளே அன்றி தேர்தலின் பின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ்த் தேசியக் கொள்கைகளை முன் கொண்டு செல்லப்போவதில்லை.

தேர்தலின் பின்னர் மீண்டும் தான் தயாரித்துள்ள அரைகுறையான தீர்வுத்திட்டத்தையே கூட்டமைப்பு முன்னெடுக்க உள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தமிழ்த் தேசியத்துக்கு விரோதமான இந்தச் செயற்பாடுகள் கூட்டமைப்பில் தற்போது உள்வாங்கப்பட்டுள்ள புதிய வேட்பாளர்களுக்கும் கூட்டமைப்பிற்கு சார்பாகச் செயற்பட்டு வருகின்ற பத்திரிகையாளர்களுக்கும் நன்கு தெரிந்திருந்தும் கொள்கைகளைக் கைவிட்டு தமது தேர்தல் வெற்றியை மட்டும் நோக்காகக் கொண்டு கூட்டமைப்பின் துரோகச் செயற்பாடுகளை மூடிமறைத்து வருகின்றனர்.

கூட்டமைப்பில் இருந்து வெளியேற்றப்பட்டவர்கள் மூவர் தமிழ்த் தேசியக் கொள்கைகளில் உறுதியாக இருக்கின்றனர் என்று தெளிவாகத் தெரிந்தும் அவர்கள் விலை போனவர்கள் எனவும் அரசுடன் ஒப்பந்தம் செய்தவர்கள் எனவும் உண்மைக்குமாறான பொய்யான செய்திகளை தமது பத்திரிகையில் பிரசுரித்து வருகின்றமை தமிழ்த் தேசியத்தைச் திட்டமிட்டுச் சிதைக்கின்ற ஒரு செயற்பாடு.

ஆகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தலுக்காக பேசுகின்ற வார்த்தைகளை நம்பி வாக்களித்து தமிழ்த் தேசியத்தை படுகுழியில் தள்ளும் நாசகார முயற்சிக்குத் துணைபோகாதீர்கள்.

முள்ளிவாய்க்கால் பேர் அழிவுக்கப் முன்னரும் பின்னரும் தமிழ்த் தேசியக் கொள்கைகளில் உறுதியாக நின்று ஒரு கூட்டாக தமிழ்த் தேசியத்துக்கான மக்கள் முன்னணியில் இணைந்து சைக்கிள் சின்னத்தில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களுக்கு உங்கள் வாக்குகளை அளித்து தமிழ்த் தேசியத்தை சீரழிக்க இடம் அழிக்கமாட்டோம் என்பதனை உங்கள் வாக்குகளால் நிருபியுங்கள்.

நாடாளுமன்றப் பொதுத் தேர்தல்

2010





9 X 3

அல்லலுற்று ஆற்றாது அழுது கண்ணீர் சிந்தி எம்
செல்வமெல்லாம் இழந்து சிதறிப் பறந்தடித்து எங்கெங்கோ
எல்லாம் ஏதிலிகளாக வாழும் நம்மவர்க்கு எல்லாம் நம்
பிக்கை ஒளி ஊட்டி மீண்டும் நம் மண்ணில் வாழ வழி செய்யும்

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

அவர்களுக்கும் கூடவே இருந்து எம் குறை தீர்க்கும்
பண்பாளன் மண்ணின் மைந்தன்

தோழர் ரங்கன்

அவர்களுக்கும் (ஜயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன்) எமது
வாக்குகளை அளித்து அமோக வெற்றி
பெறச் செய்வோம்.

1 2 3 4 5 6 7 8 9 10 11 12

- வடமராட்சி கிழக்கு மக்கள்

(1023)

# சூறாவளியில் சிக்கிய இலங்கை தமிழர் முகாம்

## 96 வீடுகள் சேதம்

சிறுமுகை சுற்றுவட்டாரத்தில் வீசிய சூறாவளியால் வேடர் காலனி இலங்கைத் தமிழர் முகாமில் 96 வீடுகள் சேதமடைந்தன.

மேட்டுப்பாளையம் அடுத்த சிறுமுகை வேடர்காலனி இலங்கை தமிழர் முகாமில் 250 குடும்பத்தினர் வசிக்கின்றனர். அவர்களுக்காக 18 ஆண்டுக்கு முன் 16 க்கு 11 அளவில் தார் ஷீட் போட்ட வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. காலப்போக்கில் பெரும்பாலான வீடுகளில் மேற்கூரை சேதமுற்றது. அதன்பின் முதல் கட்டமாக 40 வீடுகள் புதிதாக கட்டப்பட்டன. தற்போது 136 வீடுகள் கட்டப்படுகின்றன.

இதேவேளை கடந்த வெள்ளிக்கிழமை மாலை இப்பகுதியில் வீசிய பலத்த சூறாவளி காரணமாக பல வீடுகளின் கூரைகள் தூக்கி வீசப்பட்டன. புதிதாக கட்டிவரும் நான்கு வீடுகள் முற்றிலும் இடிந்து விழுந்தன. வீட்டின் மேற்கூரை சரிந்து சுவர் இடிந்து விழுந்ததில் பலர் இடிபாடுகளில் சிக்கினர். அவர்களை முகாமில் உள்ளவர்கள் காப்பாற்றினர் . சூறாவளி காற்றால் மொத்தமாக முகாமில் 96 வீடுகள் சேதமடைந்தன. இதுகுறித்து மேட்டுப்பாளையம் தாசில்தார் மணிமேகலை கூறுகையில், அகதிகள் தங்குவதற்கு விரைவில் தற் காலிக ஷெட் போட்டுக் கொடுக்கப்படும். பாதிக்கப்பட்டவர்களுக்கு புதிய வீடுகள் கட்டிக் கொடுக்க அரசுக்கு பரிந்துரை செய்யப்படும் என்றார். (6)

மங்களகர அறிமுக



விற்பனை விழா

தில்லையம்பலம் மோட்டோர்ஸ்
ஸ்தாபனத்தின்
*ஸ்டேன்டர்ட் உழவு இயந்திரத்தினை*

அறிமுகப்படுத்தி விற்பனை செய்யும் விழா இன்று (05.04.2010) திங்கட்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் 10.30 மணி வரையுள்ள சுப தினத்தில் மங்களகரமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

சிறப்பு விருந்தினர்கள்

- எஸ். நித்தியானந்தன் (முகாமையாளர், மக்கள் வங்கி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்)
- S.B. அரசகுமார் (முகாமையாளர், BOC, சுன்னாகம்)

- முதல் இயந்திர கொள்வனவாளர் தர்மராஜா தர்மசீலன் (வாணி ரான்ஸ்போட், ஊரெழு, சுன்னாகம்)
- கந்தசாமி கமலேஸ்வரன் (ஊரெழு கிழக்கு, சுன்னாகம்)
- S. நல்லையா (S.N.V. ரான்ஸ்போட், அளவெட்டி)



அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

தில்லையம்பதி மோட்டோர்ஸ்

114, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

தொ.பே. 021 222 5710 Fax :-021 222 4542
E-mail:-Tmotorslnyahoo.Com

(6/4978)

பாராளுமன்றப் பொதுத் தேர்தல்-2010



புதிய அரசியல் தளத்தை நோக்கி எமது பயணத்தை தொடர...
புதியதொரு சமூக அபிவிருத்தியை பெற்றுக் கொள்வதற்காக...
தேர்தலுக்காக மாத்திரம் உங்களோடு நிற்பவர்கள் அல்ல நாம்
கடந்த அவலங்களிலும் உங்களுடன் நின்றவர்கள், நிற்பவர்கள்
எங்களின் வெற்றி உழைக்கும் மக்களின் வெற்றி
உங்கள் வாக்குகளை பந்துச் சின்னத்திற்கு நேரே
புள்ளடியிட்டு எம்மை வெற்றி பெறச் செய்யுங்கள்.

(1016)

சுயேட்சைக்குழு-09 X 3

கனகசபை நடராசா (பாரதி)
சமூகசேவையாளர்

'எமது வெற்றி உழைக்கும் மக்களின் வெற்றி'

சுரேஷ் க. பிறேமச்சந்திரன்



எம் மண்ணில் நாம் வாழ,
எம் மண்ணை நாம் ஆள
தளராது குரல் கொடுப்போம்.

X

3

(6-5080)

இலங்கை தமிழரசுக் கட்சி

தமிழ் தேசியக் கூட்டமைப்பு

# பாராளுமன்றப் பொதுத் தேர்தல்-2010

தந்தை செல்வாவின், தளபதி அமிர்தலிங்கத்தின் அரசியல் பாசறையில்
உடனிருந்து பயின்ற எங்கள் அரசியலின் மூத்த தலைவர்
பிரதேசவாத சிந்தையில் பிறளும் தமிழினத்தை வழிப்படுத்தக்கூடிய
எங்கள் யாழ்ப்பாண மண்ணின்
மூத்த அரசியல் தலைவன்; வீர மறவர்
கிளிநொச்சியின் ஆணிவேர்
எங்கள் ஆனந்தசங்கரியை
பாராளுமன்றம் அனுப்புவோம்.
துணிந்த வீரன்; துயர்ப்பட்ட போது
உரத்த குரலில் கர்ச்சித்த சிங்கம்
போலிக் கோசங்களால் மயங்கி
இம்முறையும் தவறுவிட்டால் ஆண்டவன்
எங்களை எப்படி மன்னிப்பான். தமிழர்
விடுதலைக்கூட்டணியின் உதயசூரியன்
என்று மறைக்கப்பட்டதோ அன்று முதல்
எங்களுக்கு இருட்டல்லவா!
ஆதவன் உதிக்கட்டும் அதுவே எங்கள்
தமிழருக்கு ராசி.
ஆனந்தசங்கரி பாராளுமன்றம்
செல்லட்டும் அவரின் கர்ச்சிப்பில்
அரசியல் அனுபவத்தில்
உலகு அங்கீகரிக்கும் அவர்
ஆளுமைத்திறத்தில் எங்கள்
இனப்பிரச்சினை தீரட்டும்.
உங்கள் வாக்குகள் உதயசூரியனுக்கே!


**யாழ்ப்பாண மக்கள்**



## தமிழர் விடுதலைக் கூட்டணி

X X 1

# பாராளுமன்றத் தேர்தல் 2010



3

ஐயாத்துரை
ஸ்ரீரங்கேஸ்வரன்
(தோழர் ரங்கன்)
வடமராட்சி வலய
அமைப்பாளர்




4

அலெக்ஸாண்டர்
சூசைமுத்து
(தோழர் சார்ள்ஸ்)
தென்மராட்சி வலய
அமைப்பாளர்




6

கந்தசாமி
கமலேந்திரன்
(தோழர் கமல்)
தீவக வலய
அமைப்பாளர்



8

சந்திரகுமார்
முருகேசு
(தோழர் அசோக்)
முன்னாள்
பாராளுமன்ற
உறுப்பினர்



10

பசுபதி
சீவரட்ணம்
(தோழர் கி.பி -ஜீவா)
தேசிய
அமைப்பாளர்



11

முருகுப்பிள்ளை
சிறீபதி
முன்னாள்
ஹாட்லிக்
கல்லூரி அதிபர்



12

சில்வெஸ்த்திரி
அலென்ரின்
(தோழர் உதயன்)
யாழ் மாவட்ட
அமைப்பாளர்

**எனது அன்புள்ளம் கொண்ட வடபகுதியைச் சேர்ந்த இளம் சமுதாயத்தினருக்கு,**

ஏப்ரல் 1ம் திகதி ஜனாதிபதி யாழ்ப்பாணம் வந்தபோது 5,000 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்குவதாக நேரடியாக எமக்கு உறுதியளித்துள்ளார் என்ற நற்செய்தியை இந்தத் தருணத்தில் உங்களுக்கு அறியத்தருவதில் பெருமகிழ்ச்சி கொள்கிறோம்.

5 ஆடைத் தொழிற்சாலைகள் வடபகுதிக்கு வரவிருக்கின்றன என்பதுடன், இலங்கை மத்திய அரசினால் வழங்கப்படும் வேலைவாய்ப்புக்களில் மூன்றில் ஒரு பகுதியை வடபகுதி வாழ் மக்களுக்கு 2 ஆண்டுகளுக்கு அரச நிர்வாகங்களில் வழங்குமாறும், உள்வாரி, வெளிவாரி பட்டதாரிகள் மற்றும் பொதுப் பரீட்சைகளில் நல்ல பெறுபேறுகளைப் பெற்றவர்களுக்கு இதில் முன்னுரிமை அளிக்குமாறும் மத்திய அரசிடம் நாம் முன்வைத்த கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இன்னும், இளம் சந்ததியினராகிய உங்கள் எதிர்கால நலன் கருதி நாம் முன்னெடுக்கவுள்ள திட்டங்களை இங்கே உங்கள் முன் வைக்கிறேன்.

- இளம் சமுதாயத்தினருக்கான தொழிற்பயிற்சிகளை மிகப் பரந்தளவில் விரிவாக்கும் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும்.
- வட பகுதியில் வேலையற்றோர் பிரச்சினைக்கு 2 ஆண்டுகளில் நிச்சயமாக முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்பதை உறுதியிட்டுக் கூறுகின்றோம்.
- கொழும்பு நகருக்கு ஈடான பொழுதுபோக்கு மையங்கள், பூங்காக்கள், நீச்சல் தடாகங்கள், நவீன திரையரங்குகள் குடாநாட்டில் அமைக்கப்படும்.
- குடாநாட்டின் ஒவ்வொரு பிரதேசத்துக்கும் நவீன கணினி கற்கை மையங்கள் அமைக்கப்படும்.
- யாழ் பல்கலைக்கழகத்தை விரிவுபடுத்தி, அபிவிருத்தி செய்யும் பணிகள் முழுமைப்படுத்தப்பட்டு, பொறியியல் பீடம் அமைப்பதற்கான முழு ஒழுங்குகளும் உடனடியாகச் செய்துமுடிக்கப்படும்.
- பிரதேச ரீதியாக உள்ளூர் பாரம்பரிய கலைஞர்கள், இசைக்குழுக்கள், பாடகர்கள், நவீன சினிமாக் கலைத்துறை ஆர்வலர்களை ஊக்குவிப்பதற்கான முழு அளவிலான ஒரு திட்டத்தை ஆரம்பித்தல்.
- உலகத்தரம் வாய்ந்த ஊடகக் கல்விக்கூடம் ஒன்றை வடபகுதியில் அமைத்து, ஊடக ஆர்வலர்கள், தொழில்சார் ஊடகவியலாளர்களின் தொழிற்திறன் மற்றும் பொருளாதார மேம்பாட்டுக்கான செயற்திட்டங்களை முன்னெடுத்தல்.
- சிறு கைத்தொழிலையும் இளம் தொழில் முயற்சியாளர்களையும் ஊக்குவிப்பதற்கான புதிய திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும். இதற்கான மத்திய வங்கியின் குறைந்த வட்டியிலான 200 இலட்சத்துக்கு உட்பட்ட கடன்களை வங்கிகளினூடாக நீங்கள் பெற்றுக்கொள்ள முடியும்.
- குடும்பத் தலைவர்களை இழந்த குடும்பங்களுகளுக்கு அவர்களின் குறைபாடுகள், தேவைகள் இனங்காணப்பட்டு அவற்றுக்கான திட்டங்களை முன்மொழிந்து நடைமுறைப்படுத்துவோம். வீட்டு வசதி, கல்வி வசதி மற்றும் முன்னேற்றத்துக்கான வழிவகைகள் செய்துகொடுப்போம்.



எதிர்வரும் 5 ஆண்டுகளையும் வட பகுதி வாழ் மக்களின் நன்மை கருதியும், எமது பிரதேச இளம் சமுதாயத்தின் முன்னேற்றம் கருதியும், வெற்றிலைச் சின்னத்தக்குப் புள்ளடியிட்டு, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி வேட்பாளர்களின் இலக்கங்களுக்கு உங்கள் மூன்று விருப்பு வாக்குகளையும் அளித்து ஒரு மாற்றத்தை ஏற்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

## கௌரவ அமைச்சர்
## கே.என். டக்ளஸ் தேவானந்தா

9

(செயலாளர் நாயகம், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி)




X

## ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு
## ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)

(சி-5089)







தெங்கு, பனம் பொருள் அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகக் கேட்போர்கூடத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் சர்மா ஆகியோர் உரையாற்றுவதையும், தெங்கு, பனம்பொருள் அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-குமார்)

## வடமாகாண தபாலகங்களுக்கு புதிய தளபாடங்கள்

(பொன்னாலை)

வடமாகாணத்திலுள்ள தபாலகங்களுக்கு புதிய தளபாடங்கள் விநியோகிக்கப்படவுள் ளன.

இதற்கென 4 இலட்சத்து 35ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக அஞ்சல் திணைக் கள அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை குடாநாட்டு தபாலகங்களில் நீண்டகாலமாக தபாலக தளபாடங்களுக்கு பற்றாக்குறை நிலவியமை குறிப்பிடத்தக் கது. (6-49)

## யாழிலிருந்து அம்பாந்தோட்டைக்கு சைக்கிளோட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதியின் மகனும் அம்பாந்தோட்டை மாவட்ட வேட்பாளருமான நாமல் ராஜபக்ஷ வின் 24ஆவது பிறந்த தினத்தை முன் னிட்டு அவருக்கு வாழ்த்து தெரிவிக்கும் முகமாக யாழ்ப்பாணத்தில் இருந்து அம்பாந் தோட்டைக்கு சைக்கிளோட்டப் போட்டி இடம் பெறவுள்ளது.

ஸ்பேஸ் றொக்கட் கழகத்தின் பணிப் பாளர் ஆர்.ஆர். குணசேகர தலைமையில் 25பேர் கொண்ட குழுவினர் பயணத்தை மேற்கொள்ளவுள்ளனர்.

நாளை செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் துரையப்பா விளையாட்டரங் கில் இருந்து ஆரம்பிக்கப்பட்டு மறுநாள் வவுனியாவில்இருந்து அனுராதபுரத்திற்கும் மூன்றாம் நாள் அனுராதபுரத்தில் இருந்து கொழும்புக்கும் நான்காம் நாள் கொழும்பில் இருந்து மாத்தறை வரைக்கும் இறுதி நாளான 10 ஆம் திகதி நாமல் ராஜபக்ஷவின் பிறந்த நாள் அன்று மாத்தறையில் இருந்து தங்காலை வரை சென்று அம்பாந்தோட்டை யில் அவரது வீட்டில் யாழ்.மாவட்ட உற்பத் தியை பிரதிநிதித்துவப்படுத்தும் பொருளை வழங்கி பிறந்தநாள் வாழ்த்து தெரிவிக்கப் படவுள் ளது. (6-7)

## குளிர்த்தி உற்சவம்

(மருதங்கேணி)

மந்திகை கண்ணகை அம்மன் ஆலயத்தின் வருடாந்த குளிர்த்தி அபிஷேகம் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

தொடர்ந்து பகல் ஒரு மணிக்கு விஷேச பூசைகள் நடைபெற்று அடியார்களுக்கு நீர்ப்பாளையம் வழங்கப்படும். (6-35)




## ஸ்பேஸ் றொக்கட் கழகத்தினால் பெண்களிற்கான சைக்கிளோட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

மௌண்ட் வவுனியா ஸ்பேஸ் றொக்கெட் விளையாட்டுக்கழகம் நடத்தும் பெண்களிற் கான சைக்கிளோட்டப் போட்டி நாளை செவ் வாய்க்கிழமை காலை 6 மணிக்கு துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் வெற்றிபெறும் போட்டி யாளர்களிலிருந்து முதல் இருபது பேர் தெரிவு செய்யப்பட்டு யாழ்.மாவட்ட பெண்கள் சைக்கிளோட்ட அணி உருவாக்கப்படவுள் ளது.

இப்போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் நேற்று காலை 6 மணி முதல் யாழ். துரை யப்பா விளையாட்டரங்கில் பதிவுகளை மேற் கொள்ளுமாறு பயிற்சியாளர் ஆர்.ஆர். குண சேகர அறிவித்துள்ளார்.

போட்டியில் வெற்றி பெற்றவர்களிற்கான பரிசளிப்பு வைபவம் செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது.

போட்டி தொடர்பான மேலதிக விபரங் களை 0777650965 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம். (6-14)

## மாநகர சபையின் மாதிரி முன்பள்ளி கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம்

(யாழ்ப்பாணம்)

ஹேமாஸ் நிறுவனத்தின் அனுசரணை யுடன் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள மாநகர சபையின் மாதிரி முன்பள்ளிக்கான அடிக்கல் நாட்டு விழா இன்று திங்கட்கிழமை நண்பகல் 12.09 மணி முதல் 1.34 மணி வரையுள்ள சுபவேளையில் நல்லூர் பண்டாரமாளிகை வளவிலுள்ள மாநகரசபை வளாகத்தில் நடை பெறவுள்ளது.

யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி. யோ.பற்குணராஜா தலைமையில் நடை பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இந்நிகழ்வில் யாழ். மாநகரசபை செய லாளர் இ.இரத்தினசிங்கம் வரவேற்புரை நிகழ்த்தவுள்ளதுடன் நல்லை ஆதீன முதல் வர் ஆசியுரை வழங்கவுள்ளார்.

தொடர்ந்து மாநகர ஆணையாளர் மு.செ. சரவணபவ,யாழ்.அரச அதிபர் கே.கணேஸ், வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, மாகாண கல்வி, கலாசார அலுவல்கள் அமைச் சின் செயலாளர் இ.இளங்கோவன், சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் அதிகார மளிப்பு அமைச்சின் பணிப்பாளர் திருமதி. ஜமுனா பெரேரா,உதவிப் பணிப்பாளர் ஜயந்த பீரிஸ், ஹேமாஸ் நிறுவன முகாமையாளர் திருமதி சிறோமி மசக் கொரல ஆகியோர் சிறப்புரையாற்றவுள்ளனர். (6)

## வயோதிப தம்பதிகளை ஏமாற்றிய திருடன்

(யாழ்ப்பாணம்)

சித்தன்கேணி பிள்ளையார் கோயிலுக்கு சமீபமாகவுள்ள வீடொன்றில் அண்மையில் விசித்திரமான திருட்டுச் சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.


இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதா வது, சிவராத்திரி தினத்தன்று வீட்டிலுள்ள வர்கள் ஆலயம் சென்றிருந்த வேளை வயோதிபத் தம்பதிகள் தனித்திருந்தனர்.

இருட்டு நேரம் பார்த்து எவருக்கும் தெரி யாது வீட்டினுள் நுழைந்த திருடன் கட்டிலின் கீழே சென்று உறங்கியுள்ளான். திருடன் வந்தது தெரியாத தம்பதிகள் வீட்டுக் கதவை பூட்டிவிட்டு உறங்கினர்.

நள்ளிரவு வேளை திருடன் எழுந்து அங் கிருந்த உடுபுடவை, நகை என்பனவற்றைக் கொள்ளையடித்துக் கொண்டு வீட்டின் பின் கதவை திறக்க முற்பட்டான். சத்தம் கேட்டு எழுந்த தம்பதிகள் திருடனை கண்டபோது அவன் ஓடி மறைந்துள்ளான். (6-30)

## முதலீட்டுச் சபையின் யாழ் வருகை பலருக்கு வேலைவாய்ப்பைத் தரும்

### அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



இலங்கை முதலீட்டுச்சபை யாழ்ப்பாண த்தில் அதன் கிளைக் காரியாலயத்தை திறந் திருப்பதானது வரவேற்கக் கூடிய முக்கிய அம்சம் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் இலங்கை முதலீட்டுச் சபையின் கிளைக் காரியாலயத் திறப்பு விழாவில் பிரதம விருந்தி னராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித் துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக் கையில், இன்றைய நாளிலே வடபகுதியில் முக்கியமாக யாழ்ப்பாணத்தில் இலங்கை முதலீட்டுச் சபை கிளைக் காரியாலத்தை திறந்து வைத்திருப்பதில் மகழ்ச்சியடை கிறேன்.

இந்தக் கிளைக் காரியாலத்தை திறந்து வைக்க முழு ஒத்துழைப்பும் ஒத்தாசையும் வழங்கியுள்ள ஜனாதிபதி அவர்களுக்கு முதலீட்டுச் சபையின் தலைவர் தம்மிக்க பெரேராவுக்கு என் வாழ்த்துக்களையும் நன்றி யையும் தெரிவித்துக் கொள் கிறேன்.

இன்று திறக்கப் பட்டுள்ள காரியால யம் மூலம் 03 ஆண் டுகளில் 5000 பேரு க்கு வேலைவாய்ப் பளிக்கவும் விவசா யம், மீன்பிடி உள்ளிட்ட துறைகளில் எதிர்கா லத்தில் மேலும் விருத்தியடையவும் கூடிய வாய்ப்புகள் உண்டு என்றார்.

இலங்கை முதலீட்டுச் சபையின் தலைவர் பெரேரா உரையாற்றுகையில்,

இந்தப் பணி மனை மூலம் அதிகமானோ ருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படவுள் ளதாகவும் இதன்மூலம் குடாநாடு மேலும் அபிவிருத்தி அடைய வாய்ப்புள்ளதெனவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் யாழ் மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ், யாழ்.மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா உட்பட அரச பிரமுகர்களும் சமயத் தலைவர்களும் முதலீட் டாளர்களும் கலந்து கொண்டனர். (ந)

## அதியுயர் பாதுகாப்பு வலயமான வலி. வடக்கிலுள்ள சில பாடசாலைகளை மீள ஆரம்பிக்க நடவடிக்கை

(பொன்னாலை)

அதியுயர் பாதுகாப்பு வலயமான வலி. வடக்கில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் உள்ள சில பாடசாலைகளை இயங்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

இதில் வீமன்காமம் மகாவித்தியாலயம், கொல்லன்கலட்டி சைவத் தமிழ் வித்தியால யம், மாவிட்டபுரம் வடக்கு அ.மி.த.க. பாட சாலை ஆகிய பாடசாலைகளே மீள ஆரம் பிக்கப்படவுள்ளது.

மேலும் இந்த பாடசாலைகளுக்கு ஏற் பட்ட சேத விபரத்தை மதிப்பீடு செய்து அவற்றை புனரமைப்புச் செய்து தருமாறு பிரதேச செயலாளர் ஊடாக யாழ். அரச அதிபருக்கு கோரிக்கை விடப்பட்டுள் ளது.

இதேவேளை 1990 ஆம் ஆண்டு முதல் இப்பாடசாலைகள் வேறு இடங்களில் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (6-49)

# தேர்தலுக்கான சகல பணிகளும் பூர்த்தி; தேர்தல் திணைக்கள அதிகாரி தெரிவிப்பு

(கொழும்பு)

நாடாளுமன்றத்தின் புதிய அமர்வுக்காக உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் தேர்தல் எதிர்வரும் 8 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

அதற்கான .பணிகள் யாவும் பூர்த்தியடைந்துள்ளதாக தேர்தல் திணைக்கள அதிகாரியொருவர் தெரிவித்தார்.

196 ஆசனங்களுக்காக நடைபெறும் இத் தேர்தலில் 22 மாவட்டங்களிலும் 36 அரசியல் கட்சிகளும் 301 சுயேட்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன.

இலங்கையில் இடம்பெற்ற பொதுத் தேர்தலொன்றில் அதிக எண்ணிக்கையிலானோர் போட்டியிடும் தேர்தலாக இது கருதப்படுகிறது.

பெப்ரவரி மாதம் 9 ஆம்திகதி ஜனாதிபதியினால் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு புதிய நாடாளுமன்றத் தேர்தலுக்காக வேட்புமனுக்கள் பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை கோரப்பட்டிருந்தன. இதற்கமைய அரசியல் கட்சிகளின் 366 வேட்பு மனுக்களும் சுயேட்சைக் குழுக்களின் 370 வேட்பு மனுக்களுமாக 736 விண்ணப்பங்கள் கிடைத்திருந்ததாக தேர்தல்கள் ஆணையாளர் உத்தியோகபூர்வமாக அறிவித்திருந்தார்.

நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்குள் தவிர, கட்சிகள் ஊடாகவும் , சுயேட்சையாகவும் இந்தத் தேர்தலில் 7 ஆயிரத்து 620 பேர் போட்டியிடுகின்றனர்.

இந்தத் தேர்தலுக்கான சகல பிரசார நடவடிக்கைகளும் இன்று திங்கட்கிழமை நள்ளிரவுடன் முடிவடைகிறது. அத்துடன் நாளை செவ்வாய்க்கிழமை நள்ளிரவுடன் தமது பிரதான கட்சி அலுவலகத்தை தவிர ஏனைய கட்சி அலுவலகங்களை மூடிவிட வேண்டுமெனவும் கட்சிகளுக்குப் பணிக்கப்பட்டுள்ளது.

இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் ஆகக் கூடுதலான சுயேட்சைக் குழுக்கள் போட்டியிடும் மாவட்டமாக திகாமடுல்ல உள்ளது.

மிக நீளமான வாக்குச் சீட்டுக்கள் இந்த மாவட்டத்துக்கென அச்சிடப்பட்டுள்ளதுடன் வாக்குப் பெட்டிகளிலும் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. ஏழு ஆசனங்களை மட்டும் கொண்ட இந்தத் தேர்தல் மாவட்டத்தில் 49 சுயேட்சைக் குழுகள் போட்டியிடுகின்றனர். சுயேட்யையாகப் போட்டியிடுவோர் எண்ணிக்கை 490 ஆகும். 17 அரசியல் கட்சிகளின் ஊடாக 170 பேர் போட்டியிடுகின்றனர். மொத்தமாகப் போட்டியிடுவோர் எண்ணிக்கை 660.

வாக்களிப்பு எதிர்வரும் 8ஆம்திகதி காலை 7. மணிக்கும் 4 மணிக்குமிடையில் நடைபெறும். ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல் அவசியமாக்கப்பட்டுள்ளது. தேர்தல் திணைக்களத்தினால் குறிப்பிடப்படும் எட்டு ஆவணங்களில் ஒன்றைக் காண்பித்து வாக்களிக்க முடியும்.

இது தவிர கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் தேர்தல்கள் செயலகத்தினால் வழங்கப்பட்ட தற்காலிக அடையாள அட்டை மற்றும்இடம்பெயர்ந்தோர் தாம் முகாம்களில் தங்கியிருந்தபோது படையினரால் வழங்கப்பட்ட அடையாள அட்டைகளையும் பயன்படுத்தி வாக்களிப்பில் பங்கேற்க முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்த சுமார் 45 ஆயிரத்து 967 பேர் இம்முறை வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். வவுனியா மெனிக் பாம் அகதி முகாமிலுள்ள மக்கள் வாக்களிப்பதற்கு வசதியாக 17 வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. இதற்கு வெளியே வவுனியா மாவட்டத்தில் வவுனியா தமிழ் வித்தியாலயத்தில் 16 வாக்குச்சாவடிகளும் அமைக்கப்பட்டுள்ளன. இந்த வாக்குச் சாவடிகளில் மீளக்குடியமர்த்தப்படாத நிவாரணக் கிராமங்களை சாராதோர் வாக்களிக்க முடியும்.

இதுதவிர நாட்டின் வேறு பல மாவட்டங்களிலும் இடம்பெயர்ந்து வாழும் வாக்காளர் வாக்களிப்பில் கலந்துகொள்ளும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. புத்தளம் மாவட்டத்தில் 37 நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அனுராதபுரம் மாவட்டத்தில் -6, கம்பஹா மாவட்டத்தில் -6, யாழ்ப்பாணம் -4, களுத்துறைமாவட்டத்தில் -2, கொழும்பு மாவட்டத்தில் ஒன்றுமாக இடம்பெயர்ந்தோருக்கான வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. (6)

# சிறப்பு பட்டிமன்றம்

(மருதங்கேணி)

சாவகச்சேரி நுணாவில் மேற்கு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய மஹோற்சவ காலத்தின் இரண்டாம் திருவிழா சிறப்பு நிகழ்வாக இன்று திங்கட்கிழமை இரவு 9 மணிக்கு அகில இலக்கிய கலை சங்கத்தின் பட்டி மன்ற பிரிவு வழங்கும் சிறப்பு பட்டி மன்ற நிகழ்வு பேச்சாளர் பொன். சுகந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது. (6-35)

## செம்மணி இந்துமயானப் பகுதியில் கழிவுகள் கொட்டப்படுவதால் பெரும் சுகாதாரச் சீர்கேடு

(பொன்னாலை)

செம்மணி இந்துமயானப் பகுதியில் கழிவுகள் கொட்டப்படுவதால் அப் பகுதியால் பயணம் செய்யும் போது துர்நாற்றம் வீசுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மேலும் இறைச்சிக்காக வெட்டப்படும் கால்நடைகளின் கழிவுகள் மற்றும் இறந்து போன நாய் போன்ற விலங்குகளின் கழிவுகளும் இங்கு போடப்படுகின்றது.

எனவே இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (6-49)

# வன்னித் தேர்தல் மாவட்டத்தில் இரண்டடி நீள வாக்குச்சீட்டு

வன்னித் தேர்தல் வரலாற்றில் என்றுமில்லாதவாறு இம்முறை வாக்குச் சீட்டு சுமார் இரண்டு அடி நீளத்தில் அமைந்துள்ளதாக தெரிய வருகின்றது.

இதன் காரணமாக வாக்களிப்பதில் வாக்காளர்கள் காலதாமதத்தை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

இடம்பெற இருக்கும் பொதுத்தேர்தலில் வன்னித் தேர்தல் மாவட்டத்தில் 16 அரசியல் கட்சிகளும் 12 சுயேட்சைக் குழுக்களும் களம் இறங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)



# SEWALANKA FOUNDATION

## CALLING OF PUBLIC COMPETITIVE TENDER

**SEWALANKA FOUNDATION** is a National Non -Govermental Organization which has been in existence for the last fifteen years serving the needy and the deserving, severely affected either by natural disasters or by internal conflict across the entire country, and generously funded by the

**1) BMZ through Welthungerhilfe**

the tender document can be collected from 7 th of April 2010 from Sewalanka Foundation, Sewa Illam, No. 54/2, Palaly Road, Kondavil.

Sealed Tenders are invited for the following supplies up to 15 th April, 2010 at 03.30 p.m. and will be opened on 16 th of April, 2010 at 3.00pm at Sewalanka Foundation, Sewa Illam, No 54/2, Palaly Road, Kondavil. The bidders or their authorized representatives are invited to be present at the occasion.

The Validity should be offered for 15 days from the time of opening of bids and 10 days from the binding of contract agreement.

The quantities of items envisaged in the projects advising to quote to the Goods and services as per the specifications on procurement codes are as follows.

| Procurement code | Narration | Non-refundable Deposit in LKR |
|---|---|---|
| SLF/WHH/BMZ/1077-09/LIVE/01 | Hardware items including carpentry tools | 500/= |
| SLF/WHH/BMZ/1077-09/LIVE/02 | Fisheries equipments | 500/= |
| SLF/WHH/BMZ/1077-09/LIVE/03 | Aluminium Fixtures and Fittings, poultry shed and wooden utilities. | 250/= |
| SLF/WHH/BMZ/1077-09/LIVE/04 | Grocery items | 250/= |
| SLF/WHH/BMZ/1077-09/LIVE/05 | Bicycles | 250/= |
| SLF/WHH/BMZ/1077-09/LIVE/06 | House hold items | 250/= |

**The supplier shall be followed the following special terms & conditions**

1. The offers have to be sealed for the above tender.
2. Total quantity has to be delivered before 30th of April, 2010.
3. All necessary shipping & transport arrangement is made by the supplier and confirmation letter on the requirement of item only will be issued by SewaLanka Foundation.
4. Transport arrangement should be made by supplier to deliver to the Sewalanka Foundation Stores at Nallur, Jaffna. Sri Lanka and SLF site at Pungudutivu Jaffna Sri Lanka bye Quoting per lorry load at the list of BOQ.
5. Advance payment is available at submission of the Mobilization Advance Guarantee Bond and part payment can be made at 80% of value of the satisfactory delivered items at the submission of Performance Bond.
6. Quality will be checked by the Sri Lankan Goods & Service Standard (SGS).
7. You are strictly requested to undergo the Instructions to Bidders in the tender document.

Prepared Tenders adhering to all the conditions specified in the Tender Documents should be put into the tender box at Sewalanka Foundation, Sewa Illam, Palaly road, Kondavil, Jaffna, Sri Lanka sent by registered post addressed to: The Chairman, Procurement Committee, Sewa Lanka foundation, Sewa Illam, No. 54/2, Palaly Road, Kondavil, Jaffna, Sri Lanka to receive on or before 15 th April 2010 at 3.30 pm and please insert the tender code in the top of the envelop.

If you have any clarification, don't hesitate to contact or Fax. +94 21 222 9850 or + 94 217451760 E-mail to jaffna @ sewalanka. org on or before 15 th of April, 2010 at 10.00 am.

The tender document could be collected at the above mentioned office address depositing the Non refundable deposit directly or to the account holder SEWALANKA FOUNDATION Current A/C No. 030 100150001489 (Swift Code PSBKLKLX023) at people's Bank, Stanley Road Branch, Jaffna, Sri Lanka and attaching the scanned paying -in -slip then the document will be mailed to your E-mail address or could be collected directly from the above mentioned addresses.

Any expenses arising on the preparation of tender document and submission should not be reimbursed.

Late Tenders will not be accepted.

**Secretary,**
**Procurement Committee, District office,**
**SEWALANKA FOUNDATION,**
**SEWA ILLAM,**
**No.54/2, Palaly Road,**
**Kondavil.**
**Jaffna.**

(C-4975)

# குடும்பத்தினருடன் தொலைபேசியில் உரையாட இலங்கை மாலுமிகளுக்கு கடற்கொள்ளையர் அனுமதி

(கொழும்பு)

சோமாலியக் கடற்கொள்ளையர்களால் பணயக் கைதிகளாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ள இலங்கை மாலுமிகள் இரண்டாவது அணியைச் சேர்ந்த 20 பேருக்கு கடந்த சனிக்கிழமை தொலைபேசியில் உரையாட அனுமதி வழங்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தமது உறவினர்களுடன் உரையாட ஒவ்வொருவருக்கும் இரண்டு நிமிட அவகாசம் வழங்கப்பட்டதாக மாலுமிகளின் தேசிய சங்கத்தைச் சேர்ந்த பாலித அத்துகோரள தெரிவித்துள்ளார்.

எம்.வி.சங்கா ர் என்ற கப்பலில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 20 மாலுமிகளுக்கும் இலங்கையிலுள்ள தமது குடும்பத்தினருடன் உரையாட தலா இரண்டு நிமிட நேர அவகாசம் வழங்கப்பட்டதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

நாளாந்தம் அடிப்படையில் அவர்களது நிலைமையை அவதானித்து வரும் அத்துகோரள அவர்கள் நல்ல ஆரோக்கியத்துடன் உள்ளனர். ஆனால் தமது விடுதலை குறித்து ஆவலுடன் காத்திருக்கின்றனர் என்றனர்.

மேலும் இவர்களின் விடுதலை தொடர்பாக சர்வதேச கடல் போக்குவரத்து காப்புறுதி நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் கப்பல் உரிமையாளர்களுடன் பேரப் பேச்சுக்கள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (6)

# தமிழ் வர்த்தகர்களிடம் கப்பம் கோரிய மூவர் ஹட்டன் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

ஹட்டனில் மூன்று பிரபல தமிழ் வர்த்தகர்களிடம் சுமார் 4 கோடி ரூபா கப்பம் கோரிய குழுவைச் சேர்ந்த மூவரை கடந்த வெள்ளிக்கிழமை மடக்கிப் பிடித்த ஹட்டன் பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கப்பம் கோரிய குழுவைச் சேர்ந்தவர்களில் இரு ஆண்களையும் ஒரு பெண்ணையும் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். இந்த மூவரும் மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி, வாழைச்சேனை பகுதிகளைச் சேர்ந்தவர்களெனத் தெரியவருகிறது. இவர்கள் நீண்டகாலமாக இவ்வாறான செயல்களில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

இவர்கள் கடந்த 23 ஆம் திகதியிலிருந்து இந்தத் தமிழ் வர்த்தகர்களிடம் தொலைபேசியூடாக கப்பம் கோரியுள்ளதுடன், பணத்தைத் தராவிட்டால் குடும்பத்துடன் கடத்திக் கொலை செய்யப் போவதாக அச்சுறுத்தியுமுள்ளனர்.

இதையடுத்து மூன்று வர்த்தகர்களும் ஹட்டன் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுவர்ணசிங்கவின் கவனத்திற்குக் கொண்டு வரவே பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலான பொலிஸார் கடந்த சிலதினங்களாக இரகசிய நடவடிக்கையொன்றை மேற்கொண்டனர்.

இதற்கமைய கப்பம் கோரியவர்களை ஹட்டன் நகரில் ஓரிடத்திற்கு வருமாறும் அங்கு வைத்து பணத்தைத் தருவதாகவும் வர்த்தகர்கள், கப்பம் கோரியவர்களிடம் தெரிவிக்கவே வெள்ளிக்கிழமை மூவர் அவ்விடத்திற்கு வந்துள்ளனர்.

அவர்களிடம் வர்த்தகர்கள் பணத்தை ஒப்படைப்பது போல் சென்றபோது அப்பகுதியில் பதுங்கியிருந்த பொலிஸார் கப்பக்காரர்கள் மூவரையும் மடக்கிப்பிடித்து கைது செய்தனர். இவர்களிடமிருந்து ஐந்து கையடக்கத் தொலைபேசிகளும் பல சிம் அட்டைகளும் கைப்பற்றப்பட்டன.

இவர் கள் தொ ட ர்பாகவும் இவர்களுடன்தொடர்புடைய ஏனையோர் குறித்தும் பொலிஸார் தீவிர விசாரணைகளைநடத்தி வருகின்றனர். (6)

தமிழரசுக் கட்சி

தமிழரிடையே நல்ல அரசியல் கலாசாரத்தை வளர்த்தெடுப்போம்.
பேராசிரியர்
இரா.சிவசந்திரன்
X 5

பாராளுமன்றப் பொதுத் தேர்தல் -2010
தகைமை உடையவர்களையே எமது பிரதிநிதிகளாக்குவோம்


உங்கள் ஆன்ம விருப்பான ஒற்றுமையை மீண்டும் கட்டியெழுப்ப...
கல்வியும் செல்வமும் விளையும் யாழ். மண்ணின் விவேகமான, தகுதியான தெரிவு.
எளிமை, அர்ப்பணிப்பு, தகைமை.
கலாநிதி. கென்னடி விஜயரத்தினம் M.A, Ph.D)
( முன்னாள் ஆங்கில விரிவுரையாளர்-கிழக்குப் பல்கலை)
தமிழத் தேசியத்திற்கான மக்கள் முன்னணி
(அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்)
X 7
இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்
(6-5074)

# பதற்றத்துடன் வாழும் இடம்பெயர்ந்த மக்களைக் காப்பாற்றுங்கள்

**10.04.2009 அன்று வீ.ஆனந்தசங்கரியினால் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதம்**

**மேன்மை தங்கிய மஹிந்த ராஜபக்ஷ,**
**ஜனாதிபதி,**
**அலரிமாளிகை.**



***மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்கட்கு,***

இராணுவம் தொடர்ந்து முன்னேறுவதை தடுத்து நிறுத்துங்கள் என என்னால் விடப்பட்ட கோரிக்கைகளுக்கு நீங்கள் செவிசாய்க்காமை எனக்கு மிகுந்த மன வருத்தமளிக்கிறது. யுத்தம் கடைசி கட்டத்தை அடைந்துள்ள இவ்வேளை விடுதலைப் புலிகள் மக்களை மனித கேடயங்களாக பாவிப்பதற்காக சூனியப் பிரதேசத்துக்குள் மக்களுடன் கலந்திருப்பதாலும் பாதிப்புக்குள்ளான அப்பாவி மக்களின் எண்ணிக்கை பல மடங்காக உயர்ந்துள்ளது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் சூனியப் பிரதேசமாகிய புதுமாத்தளன் பகுதியில் வாழும் இரண்டு இலட்சத்துக்கு மேற்பட்ட மக்களின் உயிர் ஊசலாடுகிறது. யுத்த விதிகளுக்கமைய புலிகள் நடப்பார்கள் என்பதை நாம் எதிர்பார்க்க முடியாது. ஆனால் அரச படைகளால் அது முடியும். தமது பல தோழர்களை பலிகொடுத்து மிகச் சிரமப்பட்டு மிகக் குறைந்த மக்களின் பாதிப்போடு நற்பெயரை சம்பாதித்ததோடு இந்த யுத்தத்தின் கடைசி கட்டத்தில் சொற்ப நாட்களில் அந்த நற்பெயரை இழக்கக்கூடிய சூழ்நிலை காணப்படுகிறது.

மிகமிக இக்கட்டான நிலை நாளுக்கு நாள் மோசமடைந்து கொண்டு போகிற இவ் வேளையில் தங்களின் தாமதமற்ற தலையீடு அவசியமாகிறது. ஒருநாள் இன்று நடப்பனவற்றை உலகம் அறியும் வேளை முழு உலகும் அரசையும் புலிகளையும் குற்றம் சுமத்தும் இவ் ஆலோசனைகளை நான் தனிப்பட்ட இலாபம் கருதி கூறவில்லை என்பதை நம்புங்கள்.

பல நம்பிக்கையான வட்டாரங்கள் மூலம் கிடைத்த செய்திகளின் படி ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி மட்டும் 296 பேர் காயமுற்று ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர்களில் 47 பேர் குழந்தைகள் உட்பட இறந்துள்ளனர்.

இந்த யுத்தத்தில் ஒரேநாளில் இறந்தோரின் மிகக் கூடிய தொகை இதுவாகும். மறுநாள் காயமுற்றோரின் எண்ணிக்கை 200 ஐதாண்டியது. இறந்தவர்கள் 30 இற்கு மேற்பட்டவர்கள். ஆனால் அன்று போயா தினமாகும். வைத்தியசாலைக்கு வராமலேயே பலர் வெளியில் இறந்துள்ளதாக அறியப்படுகிறது. அவற்றிற்கு எதுவித ஆவணங்களும் கிடையாது. இந்த மக்கள் யாருடைய தாக்குதலுக்கு இலக்காகி பலியானார்கள் என சர்வதேச சமூகம் கேட்காது. ஆனால் அரசையே குற் றவாளியாக்கும் சர்வதேச சமூக அமைப் புக்கள் ஒவ்வொன்றும் தாம் விரும்புவது போல் கண்டிப்பது எதிர்பார்த்ததற்கு மாறான பலனையே தரும் மனிதாபிமான அடிப் படை யிலும் நாட்டின் நற்பெயரையும் காப் பாற்ற வேண்டுமானால் நீங்கள் எடுக்கவேண்டிய உடனடிநடவடிக்கைபின்வருவனவாகும் என நான் கருதுகிறேன்.

1.உடனடியாக செல் தாக்குதலை அரச படைகள் நிறுத்த வேண்டும்.

2. விடுதலைப் புலிகளின் பிரதேசத்தில் அல்லது அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் ஒரு இடத்தை யுத்தத்திற்குள் அடங்காத பகுதியாக பிரகடனப்படுத்தி மக்களை அங்கே வர வைக்க வேண்டும்.

3. ஒவ்வொரு பிரஜையையும் பாதுகாக்க வேண்டிய கடமை அரசாங்கத்தினதே. ஆகவே நான் உங்களை வேண்டுவது ஐக்கிய நாடுகள் சபையில் உதவிகளை வெற்றோ அல்லது நட்பு நாட்டின் அல்லது நாடுகளின் உதவியை நாடலாம். அமெரிக்காவும் இந்தியாவும் அத்தகைய உதவியளிக்க முன் வந்ததாக அறிகிறோம். அது உண்மையாயின் அவர்களின் உதவியினூடாக மக்களை மீட்டெடுக்கலாம். ஒரு தனி உயிரை காப்பாற்ற பல நாடுகள் வெரும் தொகை பணத்தை செலவழித்துள்ளன.

4.அங்கே மக்கள் பட்டினிச் சாவை எதிர் நோக்குகின்றனர் என்ற நிலைப்பாட்டை ஏற்றுக்கொண்டு இரண்டு இலட்சத்துக்கு மேற்பட்ட அம் மக்களுக்கு போதிய உணவை அனுப்பி வையுங்கள். தாய்மார் பிள்ளைகளுக்கு பாலூட்ட சக்தியற்றவர்களாக தேநீர் பருக கொடுக்கின்றனர். பிள்ளைகளுக்கு வேண்டிய பால்மா மற்றும் தேவையானவற்றை ஆகாயமார்க்கமாக அனுப்பி வைக்கவும்.

5.உடனடியாக ஐக்கிய நாடுகள் குழு ஒன்றை அனுப்பி அங்குள்ள மக்களின் எண்ணிக்கை, தேவைகளை கண்டறிய வையுங்கள்.

வீ. ஆனந்தசங்கரி
தலைவர்- த.வி.கூ

**தமிழ் மக்களின் பிரச்சினையை துணிச்சலுடன் உலகறியச் செய்த மூத்த அரசியல் தலைவர் வீ.ஆனந்தசங்கரிக்கு உங்கள் வாக்கை அளியுங்கள்.**

**தமிழர் விடுதலைக் கூட்டணி**

X 1

(சி/5086)

# எம் மக்களின் நல்வாழ்வுக்காகவே வெற்றிலையில் போட்டியிடுகின்றோம்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விளக்கம்



பேச்சு சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் என்பவற்றுடன் கூடிய சுதந்திரத்துடன் எமது மக்கள் வாழவேண்டும் என்பதே எமது அரசியல் அபிலாசை என சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற மாவட்ட தனியார் பேருந்துக்கழக உறுப்பினர்களுடனான சந்திப்பிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், மக்களுக்கு சரியான வழியைக் காட்டுவதுடன் மக்கள் சமூகத்தில் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதுமே எமது முக்கிய நோக்காக இருக்கிறது.

ஒரு மனிதன் தனது கருத்தை பயமில்லாமல் கூறக்கூடிய கருத்துச் சுதந்திரம் அதேபோன்று சரியானதையும் உண்மையானதையும் எடுத்துக்கூறக் கூடிய பேச்சு சுதந்திரம் உள்ளிட்ட அனைத்து சுதந்திரத்துடனும் எமது மக்கள் சமூகத்தில் வாழவேண்டும்.


மக்களுக்கான உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதுடன் வளமானதாகவும் சுதந்திரமானதாகவும் வாழக்கூடிய சூழலை தோற்றுவிக்க வேண்டும்.மக்களின் நல்வாழ்வுக்காகவும், அபிவிருத்திக்காகவுமே எமது கட்சி யாழ்.மாவட்டத்தில் வீணைச் சின்னத்தில் போட்டியிடாது வெற்றிலைச் சின்னத்தில் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதுடன் ஆளும் அரசுடன் இருந்து கொண்டு தான் மக்களுக்கான உரிமைகளையும் வென்றெடுக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

எல்லோரும் ஓரணியில் திரண்டு எமக்கு அதிகப்படி யான வாக் குகளைத் தருவதன் மூலமே உரிமைகளை வென்றெடுக்கக் கூடிய வாய்ப்புகள் உருவாகு மென்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட தனியார் பேருந்துக் கழகத் தலைவர் தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் கழகத்தை சேர்ந்த உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர். (ந)

# பல்கலைக்கழக மாணவர்களே! தீயசக்திகளை இனங்காணுங்கள்

## த.வி.கூட்டணித் தலைவர் வீ. ஆனந்தசங்கரி ஆலோசனை



நான் உங்கள் பெற்றோருக்குச் சமமானவன். பத்து ஆண்டுகள் ஆசிரியராகக் கடமையாற்றிப் பல பட்டதாரிகளையும், உயர் பதவிகள் வகித்த, வகித்துக்கொண்டிருக்கின்ற பலரையும் உருவாக்கிய எனக்குப் பட்டதாரி ஆகவேண்டும் என்ற கனவு நிறைவேறவில்லை. காரணம் ஏழை எனக்கூற முடியாவிட்டாலும் ஏழ்மையான ஓர் குடும்பத்திற் பல சகோதர சகோதரிகளுடன் ஒரு சாதாரண ஆசிரியரின் மகனாய்ப் பிறந்தவன். அன்றைய SSC பரீட்சையிற் சித்தியடைந்ததும், ஆசிரியத் தொழிலில் ஈடுபட்டுச் சொந்த முயற்சியால் மேற்படிப்பைத் தொடர்ந்தவன். பணம் கொடுத்து ஒரு சட்டப்புத்தகம் தன்னும் வாங்கமுடியாத நிலையிற் சட்டக்கல்லூரி நூல் நிலையத்திலேயே என் படிப்புத் தங்கியிருந்தது. என்னை ஒரு சட்டத்தரணியாக்கிய பெருமை சட்டக்கல்லூரி நூல் நிலையத்தையே சாரும்.

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரும் அக்கட்சியின் முதன்மை வேட்பாளருமான வீ. ஆனந்தசங்கரி விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்த செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

என் மாணவ மணிகளை நான் கண்போற் காத்தேன். எனது ஓய்வுநேரம் முழுவதும் மாணவர்களுக்காகவே அர்ப்பணித்தேன். நான் கிளிநொச்சி மாவட்டத்தைப் பிரநிதித்துவப்படுத்தி நாடாளுமன்ற உறுப்பினனானதும் மிகவும் பின்தங்கியிருந்த மாணவர்களது கல்வியிலே அதிகம் கவனம் செலுத்தினேன்.

1983 ஆம் ஆண்டு ஒரு மாணவி பல்கலைக்கழகத்திற்கு தெரிவானார். அதுவும் போதிய ஆதாரங்களுடன் நான் பாராளுமன்றில் கிளிநொச்சியைத் தனி மாவட்டமாக்கக் கோரி ஓர் உருக்கமான உரையை முன்வைத்து கிளிநொச்சி தனி மாவட்டமாக்கப்பட்டதாலேயே கிடைக்கப் பெற்றது.

எனது இத் தனி மாவட்ட முயற்சிக்குப் பின் பல பட்டதாரிகள், வைத்தியர்கள், பொறியிலாளர்கள் எனப் பல ஆயிரம் கல்விமான்கள் உருவானார்கள். பல ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு, பாடசாலைகளின் தரம் உயர்த்தப்பட்டு பெரும் தொகைப் பணத்தை பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து ஒதுக்கியதன் விளைவாகவே கிளிநொச்சி மாவட்டம் புதிய வளர்ச்சியைக் கண்டது.இதற்கெல்லாம் காரணமாக அமைந்தது எனது கிளிநொச்சி தனி மாவட்டமாக்கல் கோரிக்கையின் வெற்றியே.

கல்வித்துறைக்கு நான் ஆற்றிய சேவையைப் பாராட்டி புனர்நிர்மாணம் செய்யப் பட்ட யாழ்.நூல் நிலையத்தினை திறந்து வைக்குமாறு யாழ்.மாநகராட்சி ஏகமனதாகத் தீர்மானித்து எனக்கு அழைப்பு விடுத்தது. அதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததில் முக்கிய பங்கு வகித்தவர்கள் அன்றைய யாழ். பல்கலைக்கழக மாணவர்கள். இன்று அவர்களது நிலை என்ன?


உங்கள் மத்தியில் இன்று அவர்களில் எவரும் இல்லை. இவர்களினாலேயே பல மோசடிகள் எனக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டன. 2004 ஆம் ஆண்டு தேர்தலில் என்னைத் தோற்கடித்தனர். பதிலாக அவர்களால் பாராளுமன்றம் அனுப்பப்பட்டவர்களால் நீங்கள் பெற்றது என்ன? பல பல்கலைக்கழக மாணவர்கள் கடத்தப்பட்டு காணாமற் போனார்கள். இன்னும் பல மாணவர்களின் உயிர் பறிக்கப்பட்டது. பல்கலைக்கழக சமூகம் அப்போது உங்களுக்காகக் குரல் கொடுத்ததா? உங்களால் அனுப்பப்பட்ட பாராளுமன்றப் பிரதிநிதிகள் என்ன செய்தார்கள்? ஏதாவது அவர்களால் செய்ய முடிந்ததா?

அப்பாவி மாணவர்களினைத் தூண்டி அவர்கள் எதிர்காலத்தை, உயிரை அழித்து சுய அரசியல் இலாபம் கண்டார்கள். இந்நிலையை உருவாக்கியவர்கள் தமது கல்வியைத் தன்னும் முழுமையாகக் கற்றார்களா? அதுவும் இல்லை. இவ்வாறானவர்கள் சுய இலாபங்களையும், கபடத்தனத்தையும் அறியாத கடந்தகால மாணவர்களின் பிழையினால் யாழ். பல்கலைக்கழகத்தின் மீதும், பல்கலைக்கழக மாணவர்கள் மீதும் இருந்த கௌரவமும் நன்மதிப்பும் எமது சமூகத்தின் மத்தியில் மட்டுமல்லாது சர்வதேச சமூகத்தின் மத்தியிலும் பெரிதும் வீழ்ச்சிகண்டது.

இன்று நீங்கள் அரசியலில் ஈடுபடுவதில்லை என்று எடுத்தமுடிவும், பெற்றோரின் அபிலாசைகளை நிறைவேற்ற வேண்டும் என்று எடுத்தமுடிவும் பாராட்டத் தக்கது. எனக்கு மிகவும் மகிழ்ச்சி. நீங்கள் அரசியலில் ஈடுபட வேண்டாம். உங்கள் கடந்த கால மாணவர்கள் செய்த தவறிற்கு, பரிகாரம் செய்ய வேண்டும் என்பதே என் வேண்டுகோள் .

ஆதலால் இம்முறை நியாயமான தேர்தலை நடாத்தவேண்டிய கடப்பாடு உங்களுக்கு உண்டு. உங்கள் வாக்குகள் மூலமாகவும், உங்கள் பெற்றோர், சகோதர சகோதரிகள், உறவினர்கள், நண்பர்கள் வாக்குகள் மூலமாகவும் இத் தேர்தலில் நியாயத்தையும், உண்மையையும் வெற்றிபெறச் செய் யுங்கள். கடந்த கால வரலாற்றுப் பிழைக ளை நீங்கள் செய்யமாட்டீர்கள் என நான் நம்புகின்றேன்.

உங்கள் எதிர்காலத்தை, சீர்குலைக்கவென மீண்டும் உங்கள் மத்தியில் சிலர் தலைதூக்கியுள்ளனர். கடமையை தக்க நேரத்தில் செய்யத் தவறியவர்கள் இன்று தங்களைப் புத்திஜீவிகள் என்பது வேடிக்கையானது. இவர்களால் பாதிக்கப்பட்ட உங்கள் பல்கலைக்கழக நண்பர்களுக்காக நீங்கள் மனப்பூர்வமாக வேதனைப்பட்டு, இவர்களால் பாதிக்கப்பட்ட உங்கள் பல்கலைக்கழக நண்பர்களுக்காக நீங்கள் மனப்பூர்வமாக வேதனைப்பட்டு, நியாயம் கிடைக்க வேண்டும் என நினைத்தால், கடந்த காலத்தைப் போன்ற தீயசக்திகளை உங்கள் மத்தியில் உருவாகவிடாது நியாயத்திற்கும் உண்மைக்கும் ஒட்டுமொத்தமாக, குரல்கொடுப்பீர்கள் என்று நம்புகின்றேன். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)






பொதுத் தேர்தல்-2010

# சிங்கள தேசம் சிங்களவருக்கு தமிழீழத் தேசம் தமிழருக்கு

## இதுவே தீர்வு என்கிறது ஈ.ரோஸ்



இரு சம அதிகாரம் கொண்ட தேசத்துவங்களின் ஐக்கியமாக இலங்கை இருப்பது தான் இனப்பிரச்சினைக்கு தீர்வு என ஈழவர் ஜனநாயக முன்னணியின் (ஈரோஸ்) தலைவர் அருளர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற கொள்கைப் பிரகடன வெளியீட்டின் போது கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

தேசியம், சுயநிர்ணயம் என்ற சொற்பதத்தை ஈழவர் ஜனநாயக முன்னணி நிராகரிக்கின்றது. இந்த வகையில் தமிழ் மக்களின் கோரிக்கை என்பதில் தமிழீழம் தமிழ் மக்களுக்கு சொந்தமானது. சிங்கள தேசம் சிங்கள மக்களுக்கு சொந்தமானது.

இலங்கை இலங்கை மக்களுக்கு சொந்தமானது. எல்லை அடிப்படையில் ஐக்கிய இலங்கைக் குள் தமிழீழ தேசத்துவ இறைமையாண் மையை இனப்பிரச்சினைக்கு தீர்வாகக் காணவேண்டும்.

சுயநிர்ணயம் என்பது மிகவும் குழப்பமான வரையறை சொல்லாகவே காணப்படுகின்றது. இதில் உள்ள குழப்பநிலை தமிழ் மக்கள் தங்களது உரிமையை வென்றெடுப்பதற்கு தடையாக இருப்பதாக ஈரோஸ் கருதுகின்றது.

தேசியம் என்பது வெறுமனே தமிழ் மக்களின் அடையாளத்தை வெளிப்படுத்துகின்ற சொல்லாகவே அமைகின்றது. நாங்கள் அடையாளத்தை மட்டும் வெளிப்படுத்தி தமிழ் மக்களின் கோரிக்கையாக முன்வைப்பது, தமிழ் மக்களின் அடிப்படைக் கோரிக்கையாக இருக்கக் கூடிய தேசத்துவ இறையாண்மையை பல்லினப்படுத்துவதாக அமையும்.

மத்திய அரசில் தமிழ் பேசும் மக்களின் பங்கை உறுதிசெய்வது தொடர்பாக இதுவரைக்கும் யாரும் கதைத்தது இல்லை. மத்திய அரசில் அதிகாரங்களுக்குட்பட்ட முறைகளில் தமிழர்களுக்கு சேரவேண்டிய மூன்றிலொரு பங்கை உறுதி செய்ய ஈரோஸ் நடவடிக்கை எடுக்கும்.

இன்று சமூகவாழ்வை உறுதி செய்வதென்பது வடகிழக்கின் பொருளாதார வாழ்வைபுத் துயிர் கொடுப்பதிலும் தழிழ் பேசும் மக்களுக்கு உரிய நஷ்டஈட்டைப் பெற்றுக்கொடுப்பதில் நாம் முன்னின்று செயற்படுவோம்.

இந்த வகையில் தமிழர் தாயகத்தில் வாழும் மக்களின் அன்றாட அவலங்கள், இன்னல்கள், இழப்புக்களை முடிவுக்குக் கொண்டு வந்து அவர் தம் பாதுகாப்பையும் அச்சமற்ற வாழ்க்கையையும் கௌரவத்தையும் உறுதிசெய்து மனித உரிமைகளைப் பேணுவதில் நாம் அடிபணியாது செயலாற்றுவோம். இவ்வாறு தெரிவிக்கப்பட்டது . (ந-7)

## நாடாளுமன்றப் பொதுத் தேர்தல்-2010

**இலங்கைத் தமிழரசுக் கட்சி**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு**



- முன்னைய இரண்டு பாராளுமன்றத் தேர்தல்களில் தெரிவு செய்யப்படாத போதும் தொடர்ந்தும் மக்களுக்காக குரல் கொடுத்தமையும் பொதுச் சேவைகளில் ஈடுபட்டமையும்.
- ஓய்வு பெற்று பதினைந்து வருடத்தின் பின்பும் மாநகரசபை ஆணையாளராக மீள்நியமனம் பெற்றமையும், பல வருடங்களாக நிரந்தர நியமனம் வழங்கப்படாது போராடிக்கொண்டிருந்த சுமார் இருநூறு பேர் வரை நிரந்தர நியமனம் வழங்கியதுடன், மாநகரசபையின் நிதிநிலையை சீர் செய்து ஸ்திரப்படுத்தியமை.

*எப்பொழுதும் மக்களுடன் இந்த மண்ணில்*

**சீ.வீ.கே.சிவஞானம்**

(முன்னாள் யாழ். மாநகரசபை ஆணையாளர், பட்டயச் செயலாளர்)

1 2 3 4 5 6 7 8 9 10 11 12

தமிழ்த் தேசிய தாயக தன்னாட்சி நோக்கிய பயணிப்பு


## மூன்றில் இரண்டு கோரிக்கைகளை அரசாங்கம் தளர்த்திக் கொண்டுள்ளது

## திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு

மூன்றில் இரண்டு கோரிக்கைகளை அரசாங்கம் தளர்த்திக் கொண்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

ஆரம்பத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்காக பிரசாரம் செய்து வந்த அரசாங்கம் தற்போது ஆட்சி அமைப்பதற்கான பெரும்பான்மையே மக்களிடம் கோரி நிற்கின்றது எனவும் மக்களின் மன நிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதனை அரசாங்கம் உணர்ந்து கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாரியளவு அமைச்சரவை ஒன்றை பேணுவது தொடர்பிலேயே அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்தியதாகவும் அப்பாவி மக்களுக்கு நிவாரணங்களை வழங்க அரசாங்கம் தவறியுள்ளதெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இம் மாதம் 8ஆம் திகதியுடன் இந்த நிலைமைக்கு முற்றுப் புள்ளி வைக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (6)

### அருள் ஒளி வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான வெளியீடான *அருள் ஒளி* மாதாந்த சஞ்சிகையின் மாசி மாத இதழ் வெளிவந்துள்ளது. (இ)

### தேர்தலின் பின்னர்

## எதிர்க்கட்சியிலிருந்து ஆளுங்கட்சிக்கு தாவும் எவரையும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை

### ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் முடிவடைந்த பின்னர் எதிர்க்கட்சியிலிருந்து ஆளும் கட்சிக்கு வரும் எவரையும் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

வவுனியாவில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க்கட்சி ஆசனத்தில் அமர்ந்து எவ்வித நடவடிக்கையும் எடுக்காத நபர்களுக்கு பெறுமதி வாய்ந்த வாக்குகளை அளிக்க வேண்டாம் என அவர் கோரியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலின் போது வன்னி மக்கள் தமக்கு அளித்த ஆதரவிற்கு நன்றி பாராட்டுவதாக குறிப்பிட்டதோடு கடந்த 30 ஆண்டுகளாக தமிழீழ விடுதலைப் புலிகளின் கோரப் பிடியில் சிக்கித் தவித்த அப்பாவி வன்னி மக்களுக்கு தேவையான சகல வசதிகளும் செய்து கொடுக்கப்படும் எனவும் அபிவிருத்தி பணிகள் துரிதப்படுத்தப்படும் எனவும் வாக்குறுதி அளித்துள்ளார். (6)


## நாடாளுமன்றத் தேர்தல் - 2010

**எங்கள் தெரிவு முதன்மை வேட்பாளர் மாவை சேனாதிராசா**



தமிழினத்தின் விடிவுக்கும், தமிழர் தேசத்தின் விடுதலைக்கும் 40 ஆண்டுகளுக்கும் மேலாக ஓயாது, தலை சாயாது, களம் பல புகுந்து, சிங்களச் சிறை பல சென்று, சித்திரவதைகளையும் தாங்கி, மரணத்தையும் வென்ற உண்மை, நேர்மை, அர்ப்பணிப்பு, தியாகம் நிறைந்த பாதையில் வந்த ஒரே தலைமகன்

**மாவை சேனாதிராசா**

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்திற்கு எதிரே புள்ளடியிட்டு மாவை சேனாதிராசாவின் இல 8 க்கும் மேலே புள்ளடியிட்டு வெற்றி படைப்போம் என எழுவோம்.

எங்கள் வாக்குகள் மாவைக்கே!


8

(அ-5073)

காங்கேசன்துறைத் தொகுதி மக்கள்

# சுயேட்சைக்குழுக்களை மக்கள் நிராகரிப்பதுடன் ஆட்சி மாற்றத்துக்கான ஆணையினை வழங்க வேண்டும்

## ஐ.தே.க. வேட்பாளர் எஸ்.ஸ்ரீகஜன் வலியுறுத்தல்



குடாநாட்டு மக்கள் அனுபவித்து வரும் துன்பதுயரங்கள் நீங்கவேண்டுமானால் ஆட்சி மாற்றம் என்பது அவசியமாகும். தென்பகுதியில் ஆட்சி மாற்றம் ஏற்படாவிடின் தமிழ் மக்களுக்கு விடிவு என்பது தற்போதைக்கு ஏற்படமாட்டாது. இது தான் உண்மை நிலையாகும். இதனை உணர்ந்து குடாநாட்டு மக்கள் வாக்களிக்க வேண்டும். இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட வேட்பாளரும் ஊடகவியலாருமான எஸ்.ஸ்ரீகஜன் தெரிவித்தார்.


மானிப்பாய் கட்டுடைப் பகுதியில் இடம் பெற்ற பிரசாரக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் கூறியதாவது,

தமிழ் மக்களுக்காக குறிப்பாக குடாநாட்டு மக்களுக்காக அமரர் மகேஸ்வரன் செய்த சேவைகள் அளப்பரியன. 2000 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் அவர் முதன் முதலில் யாழ் குடாநாட்டில் போட்டியிட்டிருந்த போது அவருடன் இணைந்து போட்டியிட்டவர்களில் நானும் ஒருவன்.

அன்று அவருக்கு அடுத்த படியான வாக்குகளை நான் பெற்றிருந்தேன். அன்று நாம் இங்கு போட்டியிட வந்தபோது எம்மைப் பார்த்து மூத்த அரசியல்வாதிகள் எள்ளி நகையாடினர்.

ஆனால் அவற்றையெல்லாம் கணக்கில் எடுக்காது நாம் தீவிரமாக செயற்பட்டு வெற்றி பெற்றோம். 2001 ஆம் ஆண்டு மகேஸ்வரன் வெற்றிபெற்றார். 2004 ஆம் ஆண்டு குடாநாட்டில் மகேஸ்வரன் போட்டியிட முடியாத நிலை ஏற்பட்டது. இதற்கு யார் காரணம் என்பதை நீங்கள் அறிவீர்கள். அரசியல் அகதியாக கொழும்புக்கு வந்த மகேஸ்வரன் அங்கும் வெற்றி பெற்றிருந்தார்.

மூன்று முறை தேர்தலில் வெற்றிபெற்றிருந்த அவர் 2008 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதி படுகொலை செய்யப்படும் வரை தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுத்தார். தமிழ் மக்கள் வகை தொகையின்றி கைது செய்யப்பட்ட போதும், கடத்தப்பட்ட போதும், காணாமல் போன போதும், கொழும்பிலுள்ள லொஜ்களிலிருந்து தமிழர்கள் விரட்டப்பட்ட போதும் பாராளுமன்றத்தை அவர் போர்க்களம் ஆக்கினார். பல போராட்டங்களையும் மேற்கொண்டார். தமிழ் மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்தியமையினாலேயே அவர் சிவதலத்தில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்.




### பொதுத் தேர்தல்-2010

மகேஸ்வரன் யாருக்காக மரணித்தார்? எதற்காக மரணித்தார். இவை குறித்து குடாநாட்டு மக்கள் சிந்திக்க வேண்டும். மகேஸ்வரனின் படுகொலைக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் குடாநாட்டு மக்கள் எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியால் மகேஸ்வரனின் அணி சார்பாக போட்டியிடும் எம்மை அமோகமாக ஆதரிக்க வேண்டும். இதன் மூலமே குடாநாட்டில் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களை அதிகரிக்கலாம். இதன் மூலமே ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்படும்.

மகேஸ்வரன் மேற்கொண்ட பணிகளை தொடர்ந்து முன்னெடுப்பதற்காகவே திருமதி. விஜயகலா மகேஸ்வரன் இந்த தேர்தலில் போட்டியிட முன்வந்துள்ளார். அவரை தேசிய பட்டியல் மூலம் பாராளுமனறத்துக்கு வருமாறு எமது கட்சியின் தலைமை அழைத்த போதிலும் அதனை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. சொந்த மண்ணில் சொந்த மக்களின் மத்தியில் போட்டியிட்டே வரவேண்டும் என்று அவர் விரும்பினார்.

எனவே அவரையும் அவரது அணியில் போட்டியிடும் என்னையும் எமது அணியில் போட்டியிடும் ஏனைய வேட்பாளர்களையும் வெற்றி பெறச் செய்து ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த வேண்டியது உங்களின் கடமையாகும்.

யுத்தத்தின் போது பல்லாயிரக்கணக்கான உயிரிழப்புக்களை சந்தித்த எமது மக்கள் இன்றும் பெரும் அவலங்களைச் சந்தித்து வருகின்றனர். இடம்பெயர்ந்த மக்கள் இன்னமும் முகாம்களில் வாடுகின்றனர். மீள்குடியேற்றம் என்ற பெயரில் குடியமர்த்தப்பட்ட மக்களும் அடிப்படை வசதிகளின்றி நடுத் தெருவில் நிற்கின்றனர்.

இதேபோல யுத்தத்தின் போதும் பின்னரும் படையினரிடம் சரணடைந்த மற்றும் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர், யுவதிகள் புனர்வாழ்வு என்ற பெயரில் அடைக்கப்பட்டுள்ளனர். தமது பிள்ளைகள் இருக் கின்றனரா? அல்லது இல்லையா? என்று தெரியாது பெருமளவாக பெற்றோர் செய் வதறியாது திகைத்து நிற்கின்றனர்.

இதனைவிட கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் தமது விடுதலைக்காக ஏங்கித் தவிக்கின்றனர். வலிகாமம் வடக்கு உட்பட அதியுயர் பாதுகாப்பு வலயங்களில் மீளக்குடியேற அனுமதிக்காமையினால் மக்கள் பெரும் துன்பங்களைச் சந்தித்து வருகின்றனர்.

எமது புதிய ஆட்சி அமைந்ததும் இந்த பிரச்சினைகளுக்கெல்லாம் உரிய தீர்வு காணப்படும். அவசரகாலச் சட்டம் நீக்கப் படும்.

தமிழ் மக்களின் போராட்டம் இன்று மௌனித்துள்ள நிலையில் இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வொன்றினைகாண வேண்டிய நிலை தோன்றியுள்ளது. தமிழர்களுக்கு உரிய தீர்வினை ஐக்கிய மக்கள் முன்னணி அரசாங்கம் வழங்கமாட்டாது என்பது தெட்டத் தெளிவான விடயமாகும். எனவே தமிழ் மக்களுக்கு தகுதியான தீர்வு வழங்கப்பட வேண்டுமானால் ஆட்சி மாற்றம் என்பது அவசியமாகும். எனவே குடாநாட்டு மக்கள் இதற்கான ஆணையினை வழங்க வேண்டும் என்றார். (ந)

# தென்பகுதி மக்களுக்கு தமிழ் மக்கள் கண்காட்சிப் பொருட்களா?

## துவாரகேஸ்வரன் கேள்வி

போர் முடிந்து விட்டதாகக் கூறப்படுகிறது. ஆனால் அந்த போருக்கான பிரதான காரணங்கள் எதுவும் இன்னமும் தீர்க்கப் படவில்லை. அதற்கான எந்த முயற்சிகளையும் இன்றைய அரசு எடுக்கப் போவதாகவும் தெரியவில்லை.

ஆனால் போர் வெற்றியை அரசியல் ஆதாயத்துக்காக பயன்படுத்தும் மூலோபாயங்களுக்கே இன்றைய மகிந்த சிந்தனை முக்கியத்துவம் கொடுத்து வருகிறது.

போரினால் சிதையுண்டு அழிந்த வடக்குக் கிழக்குப் பிரதேசங்களும் அந்தப் பகுதிகளில் வாழும் தமிழ் பேசும் பொதுமக்களும் கண்காட்சி பொருட்களாக்கப்பட்டு வருகின்றனர்.


தென்பகுதி சுற்றுலாப் பயணிகள் முன் ஏதிலிகளாக தமிழ் மக்கள் கூனிக்குறுகி முட் கம்பி வேலிக்குள்ளும் பிளாஸ்ரிக் கூடாரங்களுக்குள்ளும் இராணுவ வேலிக்குள்ளும் முடங்கிக்கிடப்பதை மேலாதிக்கப் பார்வையுடன் வேடிக்கை பார்த்துக்கொள்கின்றனர்..

தமிழ் பேசும் மக்கள் அடிப்படை வாழ்வியல் கலாசாரத் தொன்மைகளை புறந்தள்ளி அவமதிக்கும் -அவர்களின் தனித்துவத்தை சிதைக்கும் நடவடிக்கைகள் மிகவும் தந்திரோபாய ரீதியில் இயல்பான முறையில் மேற்கொள்ளப்படுகின்றன.

ஒரு இனத்தை அழிக்க வேண்டுமானால் அந்த இனத்தின் கலாசார அடித்தளத்தை இல்லாமல் செய்தால் போதுமானதாகும் என்ற அரசியல் மூலோபாயத்தையே இந்த அரசும் மேற்கொண்டு வருகின்றது என்பதை நன்றாக உணர்ந்து கொள்கின்றது.

இதனை தேர்தலை முன்னிட்டு நாம் கூறவில்லை. தேர்தலுக்கு அப்பாலும் நாம் செய்ய வேண்டிய தொடர்ந்து செய்ய விருக்கின்ற பணிகளின் அவசியத்தை உணர்ந்து கொண்டே கூறுகிறோம். மக்கள் தவறான சக்திகளுக்கு அங்கீகாரம் வழங்கினால் ஏற்படுகின்ற ஆபத்தை உணர்ந்து தொலை நோக்குடன் சிந்தித்து செயற்படவேண்டும் என்றே அறை கூவல் விடுக்கிறோம்.

உங்கள் கைதட்டலுக்காக வாக்குறுதிகளை அள்ளி வழங்குவோரை நம்பி ஏமாறாதீர்கள். சிந்தித்து வாக்களியுங்கள். அது உங்கள் வளமான வாழ்வுக்கு வழிகாட்டும் என்றார். (ந)



# தமிழ்த் தேசம் எனக் கூறி இணைந்தவர்கள் தங்களைத் தாங்களே தூற்றுகிறார்கள்

## யாழ்.மாவட்ட ஈ.பி.டி.பி அமைப்பாளர் உதயன் உரை

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டியது அவரவர் கடமையாகும் எனினும் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதை சிந்தித்து வாக்களிப்பதே எமது மக்கள் தங்களுக்கு செய்து கொள்ளும் பாரிய நன்மையாகும் என்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் சில்வேஸ்திரி அலென்ரின் உதயன் தெரிவித்துள்ளார்.


கோண்டாவில் கிழக்கு பகுதியில் இடம் பெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் தொடர்ந்து பேசுகையில்,

கூட்டமைப்பிற்கு கடந்த தேர்தலில் கிடைத்த 22 பாராளுமன்ற பிரதிநிதித்துவங்களை வைத்துக் கொண்டு அவர்கள் எமது மக்களுக்கு என்ன செய்தார்கள் என்பதை எமது மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

எமது மக்களின் வாக்குகளை அபகரித்து பாராளுமன்றம் சென்றவர்கள் எமது மக்களுக்கான அழிவுகளுக்கு மட்டுமே துணை போனார்களே அன்றி எமது மக்களின் ஆக்கத்திற்காக அவர்கள் அப்போதும் சரி, இப்போதும் சரி, எப்போதும் சரி உழைக்க முன்வருவதில்லை என்பதையே அவர்களது கருத்துக்களும் செயற்பாடுகளும் காட்டி நிற்கின் றன.

எமது அப்பாவி மக்களின் பிள்ளைகளை கொலைக்களத்திற்கு அனுப்புவதில் ஆர்வம் காட்டி அதையே நியாயப்படுத்தி தங்களது பிள்ளைகளுக்கு மாத்திரம் வெளிநாடுகளில் உயர்கல்வி வசதிகளைப் பெற்றுக்கொடுத்துக் கொண்டிருக்கும் இந்த சுயலாப அரசியல்வாதிகள் கடமை என்றும் பொறுப்பு என்றும் ஏதேதோ கூறி மீண்டும் எமது மக்களை அழிவுப் பாதைக்கே இட்டுச் செல்ல முனைகின் றனர்.

தமிழ்த் தேசியத்திற்காக ஒன்றிணைய வேண்டும் எனக் கூறியவர்கள் இன்று தங்களுக்குள்ளேயே பிளவுபட்ட நிலையில் சுயலாப நோக்கங்களை மட்டுமே முன்வைத்து தாங்கள் முன்செய்த தவறுகளையும் பாவங்களையும் இப்போது ஆளுக்காள், குழு விற்குக் குழு பட்டியலிட்டு கொண்டிருக்கிறார்கள். கூட்டமைப்பிற்குள் ஏற்பட்ட பிரச்சினைகளையே தீர்க்க வக்கில்லாததால் பிரிந்து நிற்கும் நிலையில் இவர்கள் எமது மக்களின் பிரச்சினைகளை எப்படித் தீர்ப்பார்கள் என்றும் உதயன் கேள்வி எழுப்பினார். (ந)



# இடம்பெயர் மக்களுக்கான மனிதாபிமான உதவிகளை வழங்குவதில் சிக்கல் நிலை

## தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் விசனம்

(கொழும்பு)

இடம்பெயர்ந்த மக்களுக்கான மனிதாபிமான உதவிகளை வழங்குவதில் சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளதாக சர்வதேச தன்னார்வதொண்டுநிறுவனங்கள் அறிவித்துள்ளன. நிதி வழங்கும் முறைமை தொடர்பில் இலங்கை அரசாங்கம் பின்பற்றும் புதிய நடை முறைகளினால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

இடம்பெயர் மக்களுக்கு நிதி உதவிகளை வழங்கி வரும் சர்வதேச தொண்டு நிறுவனங்களுக்கு அரசாங்கம் சில நிபந்தனைகளை விதித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த பல ஆண்டுகளாக ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான இணைப்புக் காரியாலயமே நிதி உதவிகளை நிர்வாகம் செய்து வந்தது.

எவ்வாறெனினும் கடந்த மார்ச் மாதம் முதல் ஜனாதிபதியின் சிரேஸ்ட ஆலோசகர் பசில் ராஜபக்ஷ தலைமையிலான ஜனாதிபதி விசேட செயலணியின் ஊடாக நிதி செலவிடப்பட வேண்டுமென உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் புதிய நிபந்தனைகளை சில உள்நாட்டு, வெளிநாட்டு தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் ஏற்றுக்கொள்ளத் தயார் இல்லை எனவும் இதனால் இடம்பெயர் மக்களுக்கு வழங்கப்பட்டு வந்த நிதி உதவிகளில் வீழ்ச்சி ஏற்படக் கூடுமெனவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

ஜனாதிபதி விசேட செயலணி செயற்திறனாகவும் வெளிப்படைத் தன்மையாகவும் செயற்படுமா என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக மாற்றுக் கொள்கைகளுக்கான கேந்திர நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பாக்டர் பாக்கியசோதி சரவணமுத்து தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திற்கும் தொண்டு நிறுவனங்களுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள இந்த முறுகல் நிலை முடிவுக்குக் கொண்டு வரப்படாவிட்டால் அப்பாவி இடம்பெயர் மக்கள் பாதிப்புக்களை எதிர்நோக்க நேரிடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (6)

# 1977ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கு நிகரான முடிவுகளை இம்முறை எதிர்பார்க்க முடியும்

## கருஜெயசூரிய தெரிவிப்பு

1977 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கு நிகரான முடிவுகளை இம்முறை பொதுத் தேர்தலில் எதிர்பார்க்க முடியும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார். குறிப்பாக சிறிமாவோ பண்டாரநாயக்காவின் கட்சிவலுவானநிலையில் காணப் பட்ட போது ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தன அமைதியான முறையில் தேர்தலில் வெற்றியீட்டினார் என சுட்டிக்காட்டியுள்ளார்.

இதே போன்றதொரு நிலைமையே இம்முறை தேர்தலிலும் ஏற்படும் என அவர் எதிர்வு கூறியுள்ளார்.

சுதந்திரமானதும், நியாயமானதுமான முறையில் தேர்தல் நடைபெறும் என்பதில் தமக்கு நம்பிக்கையில்லை எனவும் இந்த அரசாங்கம் மீது மக்கள் அதிருப்தி கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

தேர்தல் பிரசாரப் பணிகளுக்காக 300 மில்லியன் செலவிடப்படும் அதேவேளை மகரகம புற்றுநோய் வைத்தியசாலையில் மருந்துப் பொருட்கள் உரிய முறையில் விநியோகம் செய்யப்படுவதில்லை என சுட்டிக் காட்டியுள்ளார்.

நடப்பு அரசாங்கத்தின் மீது அதிருப்தி ஏற்பட்டுள்ள சில ஆளும் கட்சி உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைந்துகொள்ளத் திட்டமிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (6)


மாபெரும் மலிவு விற்பனை
சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு...
01.04.2010 - 10.04.2010 வரை
உயர்தரமான இறக்குமதி செய்யப்பட்ட தரை ஓடுகள் (Tiles), சுவர் ஓடுகள் மற்றும் அனைத்து விதமான குளியலறை சாதனங்கள் அனைத்தையும் **40% விலைக் கழிவுடன்** பொருட்களைப் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரேஇடம்,
TPS சர்வதேச தனியார் நிறுவனம்,
மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம்.
T.P.:0775702253, 0777578277
(991)





போரினால் சிதைக்கப்பட்ட தாயகத்தின் இயற்கை வளங்கள் அபிவிருத்தியின் பெயராலும் சூறையாடப்பட்டு வருகின்றது இந்நிலையில்,
தமிழ்த் தேசிய அரசியலில் ஒரு சூழலியலாளனும் தேவை!
பொ.ஐங்கரநேசன் MSc, PGDJMC
இலங்கைத் தமிழரசுக் கட்சி X 2
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
வாக்களிப்போம்! மற்றவர்களையும் வாக்களிக்க வைப்போம்!!
பழைய மாணவர்கள்-யூனிவேர்சல்
(தி-5075)





ஆட்கடத்தல், கொலை, அடாவழித்தனமற்ற...
அச்சமும் பீதியுமற்ற அமைதியான வாழ்வுக்கு...!

மண்ணையும் மக்களையும் மதித்து
மகேஸ்வரன் பாதையில் பயணிக்கும்
உங்கள் தொண்டன்...

தமிழர் வாழ்வில் இன்னல் அகற்றி
அமைதி ஒளியூட்ட.....!

வரலாற்றை மாற்ற வாக்களிக்க வேண்டும்
வரலாறாய் நிலைக்க வழி அதுவேயாகும்!

துணிச்சலின் வடிவம் துவாரகேஸ்வரன்
மகேஸ்வரன் தம்பி மறத்தமிழ் வீரன்
உங்களின் ஒரே தெரிவாகட்டும்.

X 1
(தி-5079)

மக்கள் துயர் துடைக்க மீண்டும் ஒரு தியாகராஜா மகேஸ்வரன்...
தியாகராஜா துவாரகேஸ்வரன்

# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல்–2010




சீ.கோபிதாசன்
(தொழிலதிபர்)




த.திருஞானசம்பந்தர்
(Rtd புகையிரதநிலைய அதிபர்)




ச.பத்மநாதன்
(விவசாயி)




செ.மகாலிங்கம்
(Rtd திட்டமிடல் பணிப்பாளர்)




செ.முத்துலிங்கம்
(ஆசிரியர்)




வீ.ஆனந்தசங்கரி
தலைவர், தமிழர் விடுதலைக் கூட்டணி
(சட்டத்தரணி)




வ.சண்முகராசா
(Rtd இலிகிதர்)




அ.முருகேசு
(Rtd அதிபர்)

**விடியலின் சின்னம் உதயசூரியன்!**

**வீழ்ந்த எம் மக்களுக்கு கரம் கொடுப்போம்**




இ.சாந்தசொருபன்
(பொறியியலாளர்)




இ.இரத்தினமணி
(சமாதான நீதவான்)




சு.இராஜஇராஜேஸ்வரி
(Rtd ஆசிரியை)




கு.சதாசிவமூர்த்தி
(Rtd அதிபர், பலாலி ஆசிரியர் கலாசாலை)

(சி-5035)

# தமிழர் விடுதலைக் கூட்டணி

X

(சி-5072)

சர்ச்சைக்குரிய ஆக்கங்கள் வெளியானதாகக்கூறி

# ஹிமால், தி எக்கனமிஸ்ட் சஞ்சிகைகளின் ஏப்ரல் மாத பிரசுரங்களுக்குத் தடை

(கொழும்பு)

உலகின் முன்னணி சஞ்சிகைகளின் பட்டியல் இடம்பெற்றுள்ள ஹிமால் மற்றும் தி எக்கனோமிஸ்ட் சஞ்சிகைகளின் மார்ச், ஏப்ரல் மாத பிரசுரங்களுக்கு தடை விதிக்கப் பட்டுள்ளதாக சண்டே லீடர் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த இரண்டு சஞ்சிகைகளிலும் வெளியாகியுள்ள ஆக்கங்கள் காரணமாக இந்த தடை விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஹிமால் சஞ்சிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தன ஆகியோர் பற்றிய ஆக்கமொன்று பிரசுரமாகியுள்ளதாகவும் தி எக்கனோமிஸ்ட் சஞ்சிகையில் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் நிதி ஒதுக்கீடு குறித்த கட்டுரையொன்று பிரசுரமாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் ஹிமால் சஞ்சிகையின் மார்ச் மாத வெளியீடும் தி எக்கனோமிஸ்ட் சஞ்சிகையின் ஏப்ரல் மாத வெளியீடும் இவ்வாறு சுங் கப் பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக குறித்த சஞ்சிகைகளை இறக்குமதி செய்யும் விஜித யாப்பா புத்தக உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

சர்ச்சைக்குரிய ஆக்கங்கள் வெளியிடப் பட்டுள்ளனவா என பரிசீலனை செய்யததன் பின்னர் இவ்வாறான சஞ்சிகைகள் நாட்டுக்குள் விநியோகம் செய்ய அனுமதிக்கப் படுவது வழமை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

(6)

# தேர்தல் விஞ்ஞாபனத்திலுள்ள சகல விடயங்களும் ஐந்து வருடங்களில் செயற்படுத்தப்படும் –ரணில்

(கொழும்பு)



தேர்தல் விஞ்ஞாபனத்திலுள்ள சகல விடயங்களையும் ஐந்து வருடங்களில் செயற் படுத்தி புதிய இலங்கையை கட்டி யெழுப்ப முடியாவிட்டால் அரசியலிருந்து விலகிக் கொள் வதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்தார்.

குருநகாகலில் சத்தியவாதி மைதானத் தில் வெள்ளிக் கிழமை நடைபெற்ற கூட்ட மொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு குறிப் பிட்டார்.

தன்னால் இயலுமான விடயங்களையே தான் பொறுப்பேற்று செயற்படுத்துவதாகவும் அதனால் தான் ***உங்களுக்கு நிவாரணம் நாட்டிற்கு அபிவிருத்தி*** என்ற தேர்தல் விஞ் ஞாபனத்தை சமர்ப்பித்துள்ளதாகவும் எதிர்க் கட்சித்தலைவர் கூறினார். தான் கூறும் விடயங்களை இரண்டு வருடங்களில் செயற்படுத்துவதாகவும் அவற்றைச் செயல்படுத்தி 3 வருடங்கள் சென்ற தும் பலாபலன்களை ஈட்டி புதிய இலங் கையை கட்டியெழுப் புவதாகவும் அவர் தெரி வித்தார்.

அதனைத் தன்னால் செய்ய முடியு மென்ற நம்பிக்கை இருப்பதாகவும் அதற் கான பலமும் சக்தியும் தன்னிடம் உள்ள தாகவும் குறிப்பிட்டார்.

இந்த ஐந்து வருடங்களில் அந்த விடயங் களை செய்ய தன்னால் முடியாவிட்டால் அரசியலிலிருந்து விலகிக்கொள்வதாகவும் பாராளுமன்றத்தில் தனக்கு அதிகளவிலான உறுப்பினர்களைப் பெற்றுத் தந்தால் ஏனைய விடயங்களை தான் பொறுப்பேற்று ஐந்து வருடங்களுக்கு முன்னரே அவற்றை நிறை வேற்றுவதாகவும் எதிர்க் கட்சித் தலைவர் கூறினார்.

(6-3)

# விலைக் கேள்விகளுக்கான கோருதல்

## கட்டடங்கள் திணைக்களம், வடக்கு மாகாணம், யாழ்ப்பாணம்.

1. தவிசாளர் , மாவட்ட பெறுகைக் குழு அவர்கள் கீழே அட்டவணைப்படுத்தப்பட்ட வேலைகளுக்காக தகவுடைய மற்றும் தகைமை பெற்ற கேள்விதாரர்களிடமிருந்து மூடிக் குறியீடு செய்யப்பட்ட கேள்விகளைக் கோருகிறார்.
2. கேள்வியானது தேசிய போட்டிக் கேள்வி நடைமுறைப்படி நடாத்தப்படும்.
3. ஒப்பந்த வழங்கலிற்கு தகுதி பெறுவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலிடப்படாதவராகவும், நிர்மாண, பயிற்சி மற்றும் அபிவிருத்திக்கான நிறுவகத்தில் கட்டட நிர்மாணத் துறையில் கீழே அட்டவணைப்படுத்தப்பட்ட வேலைகளுக்கான குறித்த பதிவை அல்லது அதற்கு மேற்பட்ட பதிவை உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
4. ஒப்பந்த வழங்கலிற்கான தகைமையைப் பெறுவதற்குத் தேவையான தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக் கேள்வி ஆவணத்தின் பகுதி 4 இலும் மேலதிக தகவல்கள் விலைக்கேள்வித் தரவிலும் (பகுதி 5) கொடுக்கப்பட்டுள்ளன.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை *பிரதம பொறியியலாளர், பிரதம பொறியியலாளர் அலு வலகம், கட்டடங்கள் திணைக்களம் (வமா), கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம் (தொ.பேசி, தொ.நகல் இல 021 222 2632)* இலிருந்து பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் விலைக்கேள்வி ஆவணங்களை மேற்கூறிய முகவரியில் காலை 9.00 மணியிலிருந்து மாலை 15.00 மணி வரை பார்வையிடலாம்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து மீளளிக்கப்படாத வைப்புப்பணம் ரூபா 1, 500.00 ஐ *பிரதம பொறியியலாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம் (வமா), கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணத்தில்* பணமாகச் செலுத்துவதன் மூலம் *05.04.2010ஆம் திகதியிலிருந்து 23.04.2010* ஆம் திகதி வரை காலை *9.00 மணியிலிருந்து மாலை 15.00* மணி வரை ஆங்கில மொழியிலான பூரண தொகுதி கேள்வி ஆவணம் ஒன்றைப் பெற்றுக்கொள்ளலாம்.
7. கேள்விகள் இரண்டு பிரதிகளில் *தவிசாளர், மாவட்ட பெறுகைக்குழு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் (பிரதம கணக்காளர் அறையில் உள்ள கேள்விப் பெட்டியில்) 26.04.2010* ஆம் திகதியன்று *15.00*மணி அல்லது அதற்கு முன்னராக பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ கையளிக்கப்படல் வேண்டும். காலந் தாழ்த்தி சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் நிராகரிக்கப்படும். பெறப்பட்ட கேள்விகள் உடனடியாகவே வருகைதர விரும்பும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது சமூகத்தில் திறக்கப்படும்.
8. கேள்வி தொடர்பான முன் ஆயத்த கூட்டம் 23.04.2010 அன்று பிரதம பொறியியலாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், வடக்கு மாகாணம், யாழ்ப்பாணத்தில் காலை 10.00 மணியளவில் நடைபெறும்.
9. கேள்விகள் கீழே உள்ள அட்டவணையில் உள்ளவாறு உரிய செல்லுபடியான கேள்விப்பிணையுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | ஒப்பந்த காலம் | தேவையான ICTAD தரம் (கட்டடங்கள்) | விலைக்கேள்வி பிணைப் பொறுப்பு | |
|---|---|---|---|---|---|
| | | | | பிணைத் தொகை | செல்லுபடியாகும் காலம் |
| JF/BD / GA/ DS/01/10 | பிரதேச செயலக கட்டடம் பூரணப்படுத்தல், உடுவில் | 05 மாதங்கள் | M5/C6 | 250,000.00 | 10.08.2010 |
| JF/BD / GA/ DS/02/10 | பிரதேச செயலக கட்டடம் பூரணப்படுத்தல், நல்லூர் | 05 மாதங்கள் | M5/C6 | 220,000.00 | 10.08.2010 |
| JF/BD / GA/ DS/03/10 | பிரதேச செயலக கட்டடம் பூரணப் படுத்தல், சண்டிலிப் பாய் | 04 மாதங்கள் | M6/C7 | 96,000.00 | 10.08.2010 |
| JF/BD / GA/ HS/04/10 | மகப்பேற்று விடுதி புனரமைத்தல் ஆதார வைத்தியசாலை, தெல் லிப்பளை | 04 மாதங்கள் | M5/C6 | 140,000.00 | 10.08.2010 |
| JF/BD / GA/ HS/05/10 | புனரமைப்பு வேலைகள் ஆதார வைத்தியசாலை,தெல்லிப்பளை (சமையலறை,களஞ்சிய அறை, வாகனத் தரிப்பிடம், மன நல சிகிச்சைப் பிரிவு) | 03 மாதங்கள் | M6/C7 | 82,000.00 | 10.08.2010 |

பிரதம பொறியியலாளர் அலுவலகம்,
கட்டடங்கள் திணைக்களம், வட மாகாணம்,
கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.
தொ.பேசி.இல.021 222 2632

க.கணேஷ்
தவிசாளர், மாவட்ட பெறுகைக் குழு/
மாவட்டச் செயலர்/ அரசாங்க அதிபர்
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்,

(சி/4976)

# வேட்பாளர்களின் பிரசாரப் பிரசுரங்கள் இன்று தபால்மூலம் விநியோகம்

(கொழும்பு)

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள், வாக்காளர்களிடம் ஆதரவு தேடி அவர்களுக்கு அனுப்பி வைப்பதற்காக பிரசாரப் பிரசுரங்கள் கொண்ட இருபது இலட்சம் கடிதங்கள் தபால் திணைக்களத் திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பிரதித் தபால்மா அதிபர் ஆர்.டி.சி. காமினி தெரிவித்துள்ளார்.

இந்தக் கடிதங்களை இன்று திங்கட்கிழமை விநியோகிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

(6)







கிருஷ்ணபிள்ளை
ஸ்ரீ சரவணபவான்
சட்டத்தரணி

இலங்கையை ஆசியாவின்
அதிசயம் ஆக்குவோம்

வளமான வாழ்வுக்கு
சமாதான சக வாழ்வு

பொதுத் தேர்தல்–2010
தேர்தல் மாவட்டம்–யாழ்ப்பாணம்

## பொதுத் தேர்தல் -2010 வன்னி மாவட்டம்

முல்லைத்தீவு தேர்தல் தொகுதி வாக்காளப் பெருமக்களே!



- இறந்தகாலத்தை மூடிவைப்போம்!
- நிகழ்காலத்தை புரிந்து கொள்வோம்!
- எதிர்காலத்தை மகிழ்வாக்குவோம்!
- வாழ்வும் வளமும் எமதாக்க

வெற்றிலைச் சின்னத்தைப் பலமாக்குவோம்!

**யாழ். நகரில் பரவலாக வாழும் முல்லைத்தீவு மக்கள்**

தேர்தலில் வாக்களிப்பதற்காக முல்லைத்தீவு சென்று வருவதற்கான இலவச ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு:
மு.தியாகராசா (ஓய்வு பெற்ற அதிபர்)
379 A, செங்குந்தா வீதி,
திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 077 9955546, 021 4902124

**சதாசிவம் கனகரத்தினம்**
(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், வன்னி)

எங்கள் பிரச்சினைகள் தீர
இடம்பெயர்ந்த மக்கள்
சொந்த இடங்களில் வாழ
இழந்த செல்வத்தை
திரும்பப் பெற
மகிந்தவின் கரத்தை பலப்படுத்துவோம்.

X 8

(அ-5084)

அன்றும் இன்றும் என்றும் உங்கள் சேவையில் சதாசிவம் கனகரத்தினம்

077 0742882, 024 222 4496


# மாலைதீவு கடற்படையினரால் 8 இலங்கை மீனவர்கள் கைது

(கொழும்பு)

மாலைதீவு கடற்பரப்புக்குள் நுழைந்த பேருவளையைச் சேர்ந்த மீனவர்கள் எட்டுப் பேரை அந்நாட்டுகடற்படையினர் கைதுசெய்த துடன் அவர்கள் பயணித்த இரு வள்ளங் களையும் கைப்பற்றியுள்ளதாக மீன் பிடித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட இவர்கள் தற்போது மாலைதீவு கடற்படையினரின் பொறுப்பில் உள்ளதாகத் தெரிவித்த அந்த அதிகாரி இவர் களை விடுவிப்பதற்கான ஏற்பாடுகள் செய் யப்பட்டு வருவதாகவும் கூறினார். (6)

# வளமான எதிர்காலம் உருவாக ஒன்று படுவோம்-ஜனாதிபதி

(கொழும்பு)

இலங்கை நாடு எமது தாய்நாடு. இந் நாட்டில் வாழும் அனைத்து இன மக்களும் ஒரு தாய் பெற்ற மக்களாக வாழுதல் வேண் டும். இந்த நாட்டில் இனிமேல் சிறுபான்மை என்று ஒன்றில்லை . எமது தேசத்தின் மீது அன்பு காட்டுகின்ற எல்லோரும் ஓரினமே என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி தலைமையில் இடம்பெற்ற பொதுக் கூட் டத்தில் ஜனாதிபதி மேலும் தெரிவித்தாவது,

இந்த நாட்டில் இனிமேல் இன, மத, குல பேதங்கள் இருக்கக் கூடாது. நீண்ட கால மாக இப்பகுதி மக்கள் பட்ட கஷ்டங்கள், துயரங் கள் எனக்குத் தெரியும். அப் பயங்கரவாத நிலை இனிமேல் இந்த நாட்டில் இல்லை. எல்லா இன மக்களும் இனி பாதுகாப்பாக வாழ முடியும். நாம் எல்லோரும் சகோதரர்கள்.

இன ரீதியான அரசியல் நோக்கம் தேவை யற்றது. மாறாக வளமான எதிர்காலம் உருவா கப் பாடுபட வேண்டும். நீங்கள் என்னை நம்பி னால் நான் உங்களை நம்புவேன். நாட்டு மக்க ளைப் பாதுகாக்க வேண்டியது எனது கடமை. போலி வாக்குறுதிகளைக் கொடுக்க மாட்டேன். சொல்வதைச் செய்வேன் என்றும் தெரிவித் தார். (6)

# ஐ.ம.சு.கூ. ஆதரவாளர்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் 10 பேர் காயம்

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆதரவாளர்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதல் சம்பவமொன்றில் 10 பேர் காயம டைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் கெக்கிராவை வைத்தி யசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அமைச்சர்களான துமிந்த திஸாநாயக்க மற்றும் எச்.எம்.சந்திரசேன ஆகியோரது ஆத ரவாளர்களுக்கு இடையில் தேர்தல் பிரசாரக் கூட்டமொன்று நிறைவடைந்து செல்லும் வழியில் இந்த மோதல் சம்பவம் ஏற்பட்டுள் ளது . விருப்பு வாக்குகளை முன்னிலைப் படுத்தி இந்த மோதல்கள் இடம்பெற்றதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (6)


## ஒரு புதிய அரசியற் பண்பாடு நோக்கி.

**2010 ஏப்ரல் 08**
**பாராளுமன்றத் தேர்தலில்**

**அன்புள்ள தமிழ்மக்களே!**

எமது சமூகத்தில் உண்மையை நிலைநாட்டி ஒற்றுமையை ஏற்படுத்த உழைப்பேன் என உறுதி சொல்கிறேன். பொங்குதமிழ் அனுபவம் எம்மிடம் உண்டு. மக்களிடையே உண்மையான வெளிப்பாடுகளைக் கொண்டுவந்து, ஒற்றுமையை ஏற்படுத்தி இலட்சக் கணக்கில் மக்களைத் திரளவைத்துப் பொங்குதமிழை நடத்தியிருக்கிறோம். 2002இல் யுத்தநிறுத்தம் ஏற்பட்டதற்குப் பொங்குதமிழும் ஒரு காரணம்.

**பாராளுமன்ற அதிகாரம்மூலம் நான்**
**நிறைவேற்ற விரும்பும் கடமைகள் சில...**

- தமிழ்மக்களின் உரிமைக்கான போராட்டம் காரணமாக தமிழ்ச்சமூகத்தில் ஏற்பட்ட சமூகமாற்றம் பெண்களும் அரசியலில் பங்குபற்றவேண்டும், அரசியல் அதிகாரத்தைப் பெறவேண்டும் என்ற சிந்தனைகளைத் தோற்றுவித்தன. 2004 தேர்தலில் யாழ்மாவட்டத்தில் முதலாவது பெண் பாராளுமன்ற உறுப்பினராக என்னை மக்கள் தெரிவு செய்தனர். அதைப் பாதுகாப்பதும் மேலும் பல பெண்களை அரசியல் அதிகாரம் பெற்றவர்களாக மாற்றுவதும் ஒரு முக்கிய கடமை.

- யுத்தத்தால் பாதிப்படைந்தவர்களைக் குறிப்பாக பெண்களையும் குழந்தைகளையும் அக்கறையோடு கவனித்து அவர்களின் வாழ்க்கையை மீட்டெடுத்து ஒரு நல்ல நிலைக்குக் கொண்டுவரவேண்டும்.

- ஒதுக்கப்பட்ட கிராமங்களில் முன்னேற்றத்தை ஏற்படுத்த வேண்டும். இத்தகைய கிராமங்களின் உள்ள எல்லாப்பிள்ளைகளையும் கல்வியில் முன்னேற்றிச் சாதனையாளர்களாக்க வேண்டும்.

- பெண்களின் வாழ்க்கையில் முன்னேற்றம் காணவேண்டும். குறிப்பாக இளம்பெண்கள் தமது வெட்கம், பயம் நீங்கி செயலாற்றல் வலிமை பெற்றவர்களாக மாற்றமடைந்து தொழில்முயற்சியாளர்களாக வளர்ச்சிபெறவைக்க வேண்டும்.

- எல்லாவற்றிற்கும் மேலாகத் தமிழ்ச்சமூகத்தின் விடுதலைக் கனவைத் தம் மனதில் சுமந்து எத்தனையோ பிள்ளைகள் தம் உயிரைத் தியாகம் செய்திருக்கிறார்கள். அதை நாங்கள் மறந்துவிடக்கூடாது. எனவே நாம் எப்படியும் தமிழ்ச்சமூகத்தின் விடிவைக்காண இருதேசங்கள் ஒருநாடு நோக்கி உழைக்கவேண்டும்.

அன்பார்ந்த தமிழ்மக்களே! வாருங்கள்; தமிழ்ச்சமூகத்தின் விடிவைக் காண்போம்.



**பத்மினி சிதம்பரநாதன்**
B.A(Hons),P.G.Dip.in.ed

தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி
அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்
X 3

இணையத் தேடலிற்கு
http!//spathmini.com
(இவரது பணிகள் பற்றிய படங்களைப் பார்வையிடலாம்)

(அ-5083)

# இலங்கை விவகாரங்களில் பான்கீமூன் தலையீடு செய்ய முடியாது

## விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவிப்பு

இலங்கை விவகாரங்களில் பான் கீ மூன் தலையீடு செய்ய முடியாது என நாடாளு மன்ற உறுப்பினர் விநாயகமூர்த்தி முரளித ரன் தெரிவித்துள்ளார். திவயின் பத்திரிகைக்கு வழங்கிய விசேட நேர்காணலின் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைப் பிரச்சினைகளை விடவும் உலக நாடுகளில் பாரிய பிரச்சினைகள் காணப் படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதர வான சில புலம்பெயர் சக்திகளே இலங்கைக்கு எதிராக செயற்பட்டு வருவதாகவும் தேர்தலில் வெற்றியீட்டும் நோக்கில் பிரித்தானிய வெளி விவகார அமைச்சர் டேவிட் மில்பாண்ட் புலம் பெயர் தமிழர்களுடன் கூடுதல் தொடர்பினைப் பேணி வருவதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக் களும் தமிழ் பேசும் முஸ்லிம்களும் ஜனாதி பதி மகிந்த ராஜபக்ஷவிற்கு அதிகளவு ஆதரவ ளிக்காத போதிலும் இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் நிலைமை மாற்றமடையும் என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த அரசாங்கம் வடக்கு- கிழக்கு மக்களுக்கு பாரியளவு சேவைகளை ஏற்கனவே வழங்கி வருவதாகவும் எதிர்காலத்தில் பாரிய அபி விருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படும் என வும் அவர் குறிப்பிட்டுள்ளார். (6)

# குளியாப்பிட்டியில்

## கூரிய ஆயுதத்தால் குத்தி ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்

(கொழும்பு)

குளியாப்பிட்டி நகரிலுள்ள உணவகம் ஒன்றில் ஏற்பட்ட தகராறின் போது கூரிய ஆயுதத்தால் குத்தி ஒருவர் கொலை செய் யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவத்தில் மேலும் மூவர் வெட் டுக் காயங்களுக்கு இலக்காகியுள்ளனர். குறிப்பிட்ட உணவகத்தில் மதுபானம் அருந் திக்கொண்டிருந்த நண்பர்களிடையே ஏற் பட்ட தகராறு முற்றியதால் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளதாக பொலிஸ், ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் பிரசாந்த ஜெயக் கொடி தெரிவித்தார்.

காயமடைந்தவர்கள் குளியாப்பிட்டி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் கொலையுடன் தொடர்புடைய வர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (6)

# தெஹிவளையில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் பலி

(கொழும்பு)

தெஹிவளை நகரில் நேற்று அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் பலியா னதோடு மேலும் ஐவர் காயமடைந்துள்ள னர்.

காலி வீதியில் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பொலிஸ் அத் தியட்சகர் பிரசாந்த ஜெயக்கொடி தெரிவித் தார்.

காரொன்று வீதியை விட்டு விலகி மின் கம்பம் ஒன்றில் மோதியதால் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

விபத்தில் காயமடைந்தவர்கள் களுபோ வில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளனர். (6)

# இடம்பெயர்ந்தோர் வாக்களிக்க வவுனியாவில் 48 வாக்குச் சாவடிகள்

(கொழும்பு)

மெனிக்பாம் நிவாரணக் கிராமம் உட்பட வவுனியா நகருக்குள் இடம்பெயர்ந்துள்ள வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு ஏதுவாக 48 வாக்குச் சாவடிகள் அமைக்கப் பட்டுள்ளது டன் முல்லைத்தீவு , மன்னார், கிளிநொச்சி பகுதிகளுக்குச் சென்று வாக்களிப்பதற்கு ஏது வாக 55 பஸ் வண்டிகளும் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளதாக வன்னி மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி திருமதி பீ. எம்.எஸ். சார்ள்ஸ் தெரி வித்தார்.

இடம்பெயர்ந்துள்ள வாக்காளர்களுக்கு வாக்களிக்க வசதிகள் செய்து கொடுப்பது தொடர்பாக தெரிவத்தாட்சி அதிகாரி தலைமை யில் நடைபெற்ற விசேட கூட்டத்தின் போதே இந்த முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு, கிளிநொச்சி,மன்னார் பகுதி களைச் சேர்ந்த வவுனியா நகரிலுள்ள இடம் பெயர்ந்துள்ள வாக்காளர்கள் அந்தந்த பகு திக்குச் சென்று வாக்களிப்பதற்காக தேர்தல் தினத்தன்று காலை 6.00 மணிக்கு காமினி மகா வித்தியாலயத்திலிருந்து புறப்படும் பஸ் வண்டிகளில் செல்ல முடியும் என அறிவித் தல் விடுக்கப்பட்டுள்ளது.

2008ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களாயின் அவர்கள் வாக்களிக்க வுள்ள வாக்குச் சாவடியின் விபரம் , இடம் பெயர்ந்த வாக்காளர்களாக பதிவு செய்ததற் கான ஆவணம் என்பவற்றுடன் பஸ் வண் டிகள் ஊடாக செல்ல முடியும் . ஒவ்வொரு பஸ் வண்டியிலும் தெரிவத்தாட்சி அதிகாரியி னால் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் செல்வார்.

வவுனியா நகருக்குள்ளும் இடம் பெயர்ந்த வாக்காளர்களை அழைத்துச் செல்வதற்கு கென 77 தனியார் பஸ் வண்டிகளை சேவை யிலீடுபடுத்த தெரிவத்தாட்சி அதிகாரி திட்டமிட் டுள்ளார்.

இடம்பெயர்ந்துள்ள வாக்காளர்களாக விண் ணப்பிக்குமாறு விடுத்த அறிவித்தலின் பின் னர் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்ட, விண் ணப்பிக்கத் தவறியவர்களுக்கும் மீண்டும் விண்ணப்பிக்க முடியும் என அறிவித்ததன் பின்னர் சுமார் 3700 பேர் இதுவரையில் மேலதிகமாக பதிவு செய்துகொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கென விசேட டோக்கன்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் வாக்களிக்கச் செல் லும் போது இந்த டோக்கன்களையும் எடுத் துச் செல்லலாம் எனவும் வாக்காளர் அட்டை கள் இதுவரை கிடைக்காதவர்கள் வவுனியா தபாலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என வும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இடம்பெயர்ந்துள்ள வாக்கா ளர்கள் குறிப்பாக மெனிக்பாம் மற்றும் வவு னியா நகரிலுள்ளவர்கள் வாக்களிப்பதற் காகத் தேர்தல் ஆணையாளரினால் அங்கீகா ரிக்கப்பட்ட ஏதாவதொரு ஆளடையாள அட்டை இல்லையெனில் பொலிஸாரினால் வழங்கப் பட்டுள்ள விசேட அடையாள அட்டையைப் பயன்படுத்தலாம் எனவும் குறிப்பாக 2009 பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி முதல் 2009 டிசம்பர் மாதம் 19 ஆம் திகதி வரையில் வழங் கப்பட்ட ஒரு இலட்சத்து 50 ஆயிரம் முதல் 2 இலட்சத்து 38 ஆயிரத்து 326 வரையிலான தொடரிலக்கம் கொண்ட பொலிஸாரினால் வழங்கப்பட்ட அடையாள அட்டையை வாக்க ளிப்புக்காக பயன்படுத்தலாம் எனவும் குறிப் பிடப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்துள்ள வாக்காளர்களுக்கு மெனிக்பாம் வலயம் -2 இல் சிறிமுருகன் வித் தியாலயத்தில் 16 வாக்குச்சாவடிகளும் , வவு னியா தமிழ் மகாவித்தியாலயத்தில் 32 வாக் குச்சாவடிகளும் அமைக்கப்பட்டுள்ளன. (6)


# ஓராமாண்டு நினைவலைகள்

தோற்றம்
18
05
1949



மறைவு
18
03
2009

## வயிரமுத்து வாரித்தம்பி

*திதி - 2010.04.05*

தாயாக தாலாட்டி
தந்தையாக தலைமேல் சீர்தூக்கி
குடும்பம் எனும் குலவிளக்கிற்கு வியர்வையாகி
திரி கொண்டு நெய்யாகிய போது சிறப்புற்றோம்
கால நதி ஓட்டத்தில் கரைபுரண்டு
கற்பக விளக்காகி எமை வாழவைத்து
சிறப்புடனே சீர்களையும் தேடித்தந்து
பிள்ளைகள் மருமக்கள் பேரர்கள் என
பார்த்து மகிழ்ந்திருந்த பாதி வழியிலே....
ஈனரவர் இரைக்கு இலக்காகினீர்களப்பா !

எமது தந்தையின் முதலாம் ஆண்டு நினைவு நிகழ்வு 05.04.2010 இன்று எமது தற்காலிக இல்லத்தில் இடம்பெறவுள்ளதால் அனைவரையும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன விருந்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நிரந்தர முகவரி:
யோகேஸ்வீதி, ஆழியவளை,
தாளையடி.

தற்காலிக முகவரி:
'சிவ இல்லம்'
வேதவனம் ஒழுங்கை, தும்பளை வீதி,
பருத்தித்துறை.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(சி/1106)



# மரண அறிவித்தல்

## சபாபதிப்பிள்ளை கயிலாசபிள்ளை



(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர்,
மாவட்டக் கல்வித் திணைக்களம், மாகாணப் பொது நிர்வாக அமைச்சு,
ஓய்வூதியப் பிரிவு - திருகோணமலை)

அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும், திருகோணமலையை வதிவிட மாகவும் தற்போது அராலி தெற்கில் வசித்தவருமாகிய சபாபதிப்பிள்ளை கயிலாசபிள்ளை அவர்கள் 03.04.2010 சனிக்கிழமை அன்று சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலம் சென்றவர்களான சபாபதிப்பிள்ளை சின்னத்தங்கம் தம்பதியினரின் அன்பு மகனும், காலம் சென்றவர்களான முத்துக்குமாரு அன்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும், காலம் சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும்,


விஜயகுமார் (அதிபர்,யா நவாலி ஸ்தான அ.மி.த.க. பாடசாலை), அமரர் சறோஜினிதேவி (ஆசிரியர்), பாலகுமார் (தொழில் நுட்பவியலாளர், ஜேர்மனி), நந்தகுமார் (இணைப்பாளர், வடமாகாணக் கல்வி அமைச்சு), கலாதேவி (ஆசிரியர் யாழ் மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சீவரத்தினம் (அவுஸ்திரேலியா) அவர்களின் அன்புச் சகோதரனும், கௌரிமனோகரி (ஆசிரியர் அராலி கிழக்கு அ.மி.த.க.பாடசாலை), குலநாயகம் (செயலாளர், பிரதேச சபை, கரவெட்டி), பவானி (ஜேர்மன்),சிரோமினி (ஆசிரியர், உயரப்புலம் மெ.மி.த.க. பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும்,காலம்சென்ற முருகமூர்த்தியின் அன்பு மைத்துனரும், விதுரன், குபேரன், ரயிலதா, அபிதாரணி, அனித்தா, றூபினி, வேதாசினி, வர்ணவி ஆகியோரின் பாசமிகு பேர னுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 05.04.2010 திங்கட்கிழமை இன்று காலை 10 மணிய ளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரிகைகளுக்காக அராலி தெற்கு பூனா வோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உப தபாற் கந்தோர் வீதி,
அராலி தெற்கு ,
வட்டுக்கோட்டை.

தகவல்
பிள்ளைகள்
விஜயகுமார், பாலகுமார்,
நந்தகுமார், கலாதேவி

இ



புத்தூர் ஸ்ரீ பஞ்சுசிக வித்தியாலயத்தின் இல்லமெய்வல்லுநர் போட்டி நிகழ்வில் அதிபர் கு.ரவீந்திரன் மங்கல விளக்கேற்றுவதையும், கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.சித்திரவடிவேல் உரையாற்றுவதையும், மாணவர்களின் உடற்பயிற்சி நிகழ்வையும் படங்களில் காணலாம்.

# தேர்தல் பிரசாரப் பணிகள் யாவும் இன்று நள்ளிரவுடன் முடிவு

(கொழும்பு)

பொதுத் தேர்தலுக்கான சகல பிரசார நடவடிக்கைகளும் நள்ளிரவுடன் நிறைவு பெறுகின்றன.

அத்துடன் தேர்தல் முடிவடைந்து ஏழு நாட்களுக்கு ஊர்வலங்கள், பேரணிகள், ஆர்ப்பாட்டங்கள் நடத்துவது தடைசெய்யப் பட்டுள்ளதாக தேர்தல்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி நவரட்ன தெரி வித்தார்.

இன்று நள்ளிரவு முதல் பாதுகாப்பு மற்றும் தீவிர கண்காணிப்புப் பணி களுக்கென நியமிக்கப்பட்டுள்ள 2584 நடமாடும் பாதுகாப்பு பிரிவுகளும் செயற்பட ஆரம்பிக்கவுள்ளன.

இதேவேளை தபால்மூலம் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தும் இதுவரை வாக்காளிக் காதவர்கள் இருப்பின் தவறாது உடனடியாக வாக்களிக்குமாறும் எதிர்வரும் எட்டாம் திகதி மாலை 4 மணிக்கு வாக்குச் சீட்டுக்கள் யாவும் வாக்கெண்ணும் நிலையங்களுக்குக் கொண்டு செல்லப்பட வேண்டும் என்றும் தேர்தல் ஆணையாளர் கேட்டுக்கொண்டுள் ளார்.

வாக்குச்சாவடிகள், வாக்கெண்ணும் நிலையங்கள், வாக்குப்பெட்டிகள் எடுத்துச் செல்லும் வாகனங்கள் என்பவற்றுக்கும் பாதுகாப்பு வழங்கப்படுகிறது. வாக்காளர் அட்டைகள் இதுவரை கிடைக்காதவர்கள் தபாலகங்களில் வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலை விட பொதுத் தேர்தலுக்கு பாதுகாப்பு நடவடிக்கை கள் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் நாட்டில் 413 பொலிஸ் பிரிவுகளும் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

வேட்பாளர்கள் தாம் வாக்களிக்கும் வாக்குச் சாவடியைத் தவிர வேறு வாக்குச் சாவடிக்கு செல்வதாயின் வேட்பாளருக்குரிய ஆளடையாள அட்டையுடன் மட்டுமே செல்ல முடியும் என்றும் தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது. (6)




# வீதி புனரமைப்பு

(பொன்னாலை)

உலக உணவு இலகு வேலைத் திட்டத்தின் கீழ் உரும்பிராய் கிழக்கு கந்தன் வீதி முதலாம் ஒழுங்கை தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றது.

உரும்பிராய் கிழக்கு சென்மைக்கேல் சனசமூக நிலைய மக்கள் அவர்களுக்கு பங்களிப்பு வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. மேலும் இவ்வீதி பல காலமாக திருத்தப்படாதமை குறிப்பிடத்தக்கது. (6-49)

# அதிகாரப் பகிர்வு அவசியமற்றது சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு

(கொழும்பு)

அதிகாரப் பகிர்வு தீர்வுத் திட்டங்கள் அவசியமற்றது எனவும் இன ரீதியா அதிகாரப் பகிர்வு மேற்கொள்ள வேண்டுமென சில தமிழ் பிரிவினைவாத சக்திகள் முயற்சி மேற் கொண்டதாகவும் ஜாதிக ஹெல உறுமய கொழும்பு மாவட்ட வேட்பாளரும் சுற்றாடல் அமைச்சருமான சம்பிக்க ரணவக்க தெரி வித்துள்ளார்.

ஜன சபா மற்றும் கிராம சேவகர் பிரிவு ஆகிய அலகுகளின் ஊடாக அதிகாரப் பகிர்வு மேற்கொள்ளப்பட்டு அபிவிருத்தி திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென குறிப்பிட் டுள்ளார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு அளித்த விசேட செவ்வியின் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சிங்கள மக்களே பிரச்சினைகளை எதிர் நோக்கி வருவதாகவும் குறிப்பாக வடக்கு-கிழக்கில் சிங்கள மக்கள் வாழ முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள் ளார். (6)

# அமைச்சுப் பொறுப்புக்கள் தொடர்பில் கடுமையான நிபந்தனைகள் பின்பற்றப்படும்

## ஜனாதிபதி செயலகம் அறிவிப்பு

எதிர்வரும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்ட மைப்பு ஆட்சியில் பதவிகளை பொறுப்பேற் றுக் கொள்ளும் அமைச்சர்களுக்கு கடுமை யான நிபந்தனைகள் விதிக்கப்படும் என அறிவிக் கப்பட்டுள்ளது.

குறிப்பாக நிர்ணயிக்கப்பட்ட கால எல்லைக்குள் வழங்கப்பட்ட இலக்குகளை பூர்த்தி செய்யாத அமைச்சர்களின் பதவி வேறு நாடாளுமன்ற உறுப்பினரிடம் ஒப்ப டைக்கப்படும் என ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

விருப்பு வாக்குகளைக் கருத்திற் கொள் ளாது கடந்த காலங்களில் ஆற்றிய சேவை யின் அடிப்படையில் பதவிகள் வழங்கப்பட வுள்ளது.

திணைக்களங்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்களின் உயர் பதவிகளுக்கான நியமனங்களின் போதும் சேவை மூப்பை விடவும் திறமைக்கு முன்னுரிமை அளிக்கப் படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (6)

**நாடாளுமன்றத் தேர்தல் - 2010**

**எஸ்.எக்ஸ். குலநாயகம்**





இவர் எங்கள் வீட்டுப்பிள்ளை.
அவரது எப்பணியிலும் தமிழ்த்தேசியம் முந்தி நிற்கும்.
தந்தை செல்வா முதல் அனைவராலும்
அரவணைத்து வளர்க்கப்பெற்றவர்.

**எங்கள் பிரதிநிதியாக**

**எஸ். எக்ஸ். குலநாயகம்**

இம்முறை நாடாளுமன்றத்திற்கு தெரிவுசெய்யப் பெறவேண்டும்.

யாழ். நல்லூர் தொகுதி வாக்காளர்கள்




**இலங்கைத் தமிழரசுக் கட்சி** X

(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு) 12

**எஸ். எக்ஸ். குலநாயகம்**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | | | | | | | | |



மாதகல் பாணாகவெட்டி புவனேஸ்வரி அம்பாள் ஆலய தேர்த்திருவிழா உற்சவத்தில் சுவாமி தேரில் ஆரோகணிப்பதற்காக எழுந்தருளி வருவதையும் தேரில் ஆரோகணிப்பதையும் நிகழ்ச்சிகளை ஒலிபரப்புச் செய்த வாரணம் F. M. அறிவிப்பாளர்கள், பணிப்பாளர் எஸ்.குணசீலன் ஆகியோரையும் படங்களில் காணலாம்.

# சரத் பொன்சேகாவுக்கு தினமும் விசேட வைத்திய நிபுணர்களின் சேவை வழங்கப்படும்

## இராணுவத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப் பட்டுள்ள ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு நாள் தோறும் விசேட வைத்திய நிபுணர்களின் சேவை வழங்கப்படும் என இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

பொன்சேகாவை பரிசோதனை செய்ய கடற்படை விசேட நிபுணத்துவ வைத்தியர்களை நியமித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது சரத் பொன்சேகாவிற்கு சிகிச்சை அளித்து வரும் சாதாரண வைத்தியர்களுக்கு மேலதிகமாக விசேட நிபுணத்துவ வைத்தியர்களும் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

விசேட நிபுணத்துவ வைத்தியர்களை கடமையில் ஈடுபடுத்துமாறு சரத் பொன்சேகாவின் பாரியார் அண்மையில் எழுத்து மூலம் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6)

# ஐ.தே.மு. வேட்பாளர் சுசில் கிதெலபிட்டிய 16ஆம் திகதி வரை விளக்கமறியலில்

(கொழும்பு)

கொலை அச்சுறுத்தல் விடுத்தமை, ஆயுதம் வைத்திருந்தமை தொடர்பில் பொலிஸாரால் கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் வைத்துக் கைது செய்யப்பட்ட ஐக்கிய தேசிய முன்னணியின் வேட்பாளரான சுசில் கிதெலபிட்டிய எதிர்வரும் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

வெலிக்கடை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இவர் நேற்று முன்தினம் காலை கோட்டை நீதவான் ஈ.எஸ்.கே. ரணசிங்க முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோதே அவர் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

சுசில் கிதெலப்பிட்டியவைக் கைது செய்த போது அவரிடமிருந்து இரு கைத்துப்பாக்கிகளும் கைப்பற்றப்பட்டன. பெண்ணொருவருக்குக் கொலை அச்சுறுத்தல் விடுத்தமை தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டையடுத்து இவரைக் கைது செய்தபோது அவரது வாகனத்திலிருந்தே இந்த இரு கைத்துப்பாக்கிகளும் கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவரது வாகனத்தைச் செலுத்தியவர் கடற்படையிலிருந்து தப்பிச் சென்ற ஒருவரென்றும் அவரும் கைது செய்யப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (6)

# நிர்வாண புகைப்படங்கள், வீடியோக்காட்சிகள் வெளியிட்டமை தொடர்பில் இருவர் கைது

(கொழும்பு)

பெண்களின் நிர்வாண புகைப்படங்கள் மற்றும் வீடியோ காட்சிகளை வெளியிட்டமை தொடர்பாக இருவர் கைது செய்யப்பட்டுள் ளனர்.

திவலப்பிட்டிய மற்றும் வத்தளை பகுதிகளில் இவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் தெரிவித்துள்ளது.

சிறுவர் மற்றும் மகளிர் பணியகம் தெரிவித்துள்ளது.

இந்த சந்தேக நபர்கள் தமது காதலிகளை ஏமாற்றி அவர்களின் நிர்வாண படக்காட்சிகளை படம் பிடித்துள்ளமை விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

கடந்த வாரத்தில் இது தொடர்பாக 5 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதாக பொலிஸ், சிறுவர் மற்றும் மகளிர் பணியகம் குறிப்பிட்டது . இத்தகைய செயலில் ஈடுபடுவோரை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை தொடர்ந்தும் மேற்கொண்டு வருவதாக பணியத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (6)

# கிளிநொச்சி மாவட்ட தெங்கு, பனம் பொருள் உற்பத்தியாளர்கள் அமைச்சரிடம் கோரிக்கை

தெங்கு, பனம் பொருள் உற்பத்தியாளர்களான எங்களுடைய வாழ்வாதாரம் இன்று முடக்கப்பட்டு விட்டது. மீள் குடியமர்ந்து மூன்று மாதங்கள் முடிந்த நிலையிலும் எம்மால் தொழில் செய்ய முடியவில்லை. கலால் திணைக்களச் சட்டம், பொலிஸ் சட்டம் மற்றும் விற்பனை நிலையங்கள் செயற்படுத்தப்படாமை போன்ற காரணங்களால் எமது வாழ்வாதாரத் தொழில் முடக்கப்பட்டு நாம் அன்றாட உணவுக்கே அல்லல் படும் நிலைமை ஏற்பட்டுள்ளது என கிளிநொச்சி மாவட்ட பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் ம.இராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி பனை, தென்னை வள உற்பத்தியாளர்களுடன் யாழ். மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற வேட்பாளருமான மு.சந்திரகுமார் கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அக் கூட்டத்தில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், இன்று கிளிநொச்சி மாவட்டத்தில் சுமார் 2 ஆயிரம் தெங்கு, பனம் பொருள் உற்பத்தியாளர்கள் தொழில் செய்ய முடியாது தமது வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர் எனத் தெரிவித்ததுடன் , பல்வேறு சட்ட நெருக்கடிகளாலும் உற்பத்திகளுக்கான மூலதனமில்லாமையாலும் பாதிக்கப்பட்டுள்ள இந்த தொழிலாளர்களின் வாழ்வாதாரத்துக்குரிய வழி வகைகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நிவர்த்தி செய்துதர வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

இதன்போது தற்போது ஆறுமாதத்திற்கு மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ள உலக உணவுத்திட்ட உலருணவு நிவாரணத்தை ஒரு வருடத்துக்காக வழங்க ஆவண செய்ய வேண்டும் என்பதுடன் தடுப்பு முகாம்களில் உள்ள தமது பிள்ளைகள் மீட்டுத்தர வேண்டும் எனவும் தமது தொழில்களை ஆரம்பிப்பதற்கு உற்பத்தியாளர் ஒருவருக்கு 10 ஆயிரம் ரூபா வீதம் ஆரம்ப முதலீட்டு உதவி வழங்கப்பட வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. (6)

# கிழக்குமாகாணத்தில் மீள்குடியேற்றப்பட்ட மக்களில் பலருக்கு வாக்களிக்க முடியாத நிலை

(கொழும்பு)

வன்னியிலிருந்து மீள் குடியேற்றத்திற்கு என கிழக்கு மாகாணத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட குடும்பங்கள் பலவற்றுக்கு இம்மறை நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிக்க முடியாத நிலை உள்ளதாக கூறப்படுகிறது.

வடக்கில் யுத்தம் முடிவடைந்த பின்னர் ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பஙற்கள் மீள் குடியேற்றத்திற்காக கிழக்கு மாகாணத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு 6 மாதங்கள் கடந்த விட்ட போதிலும் அவர்களின் வாழ்க்கை நிலை இன்னமும் வழமைக்கு திரும்பாததே இதற்கு காரணமாக உள்ளது.

இந்தக் குடும்பங்களைப் பொறுத்தவரை ஒரு பகுதியினரின் வாக்குகள் வன்னியிலும் மற்றுமொரு பகுதியினரின் வாக்குகள் கிழக்கு மாகாணத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை வேட்பாளர்கள் வாக்குகளைப் பெறுவதில் ஆர்வம் காட்டுகிறார்களே தவிர தமது அடிப்படை தேவைகளை தீர்ப்பது பற்றி அக்கறை செலுத்துவதாக தெரியவில்லை என இந்த மக்கள் கூறுகின்றர்.

தமக்கு இருக்கக்கூடிய வாக்குரிமையை பயன்படுத்தி பொருத்தமான தமிழ்த் தலைமை ஒன்றை தேர்ந்தெடுக்க முடியாதுள்ளமை காரணமாக கவலையடைவதாகவும் அவர்கள் தெரிவிக்கிறார்கள்.




பாராளுமன்றத் தேர்தல்-2010
தமிழ் தேசியத்திற்கான மக்கள் முன்னணி
பிரான்சிஸ் வின்சென்டீபோல்
அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர், பருத்தித்துறை நகரசபை முன்னாள் உப தலைவர், வடமராட்சி வடக்கு கிராம அபிவிருத்தி சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசத் தலைவர்
பிரான்சிஸ் வின்சென்டீபோல்
அவர்களை பெருவெற்றி பெறச் செய்வோம்
அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்
வடமராட்சி மக்கள்
6
(சி-5085)

# தமிழ் மக்கள் சம உரிமை பெற்று சுதந்திர பிரஜைகளாக வாழும் காலத்தை உருவாக்கும் பாதையை நோக்கி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்களை அழைத்துச் செல்வோம்

தேர்தல் பிரச்சார கூட்டத்தில் பங்கு பற்றுவதற்காக யாழ்ப்பாணத்திற்கான விஜயத்தினை மேற்கொண்டிருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அவர்களின் முன்னிலையிலும், பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்கள் முன்னிலையிலும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தமிழ் மக்களின் அரசியல் மற்றும் வாழ்வாதார உரிமைகள் குறித்து பகிரங்கமாகவே தமிழ் மக்களுக்கு உறுதி வழங்கியுள்ளார்.

01.04.2010இல் யாழ் துரையப்பா விளையாட்டு அரங்கில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வெற்றிலை சின்னத்துக்கு ஆதரவு கோரி நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் உரை நிகழ்த்தும்போதே இப் பகிரங்க உறுதி மொழியினை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் வழங்கியிருந்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், ஜனாதிபதி அவர்களின் வருகை இந்த மண்ணுக்கு மகிழ்ச்சியையும், உயர்ச்சியையும் தரவேண்டும் என்ற எதிர்பார்ப்பே எமது மக்களுக்கு இருக்கின்றது.



இந்த மண்ணில் தமிழ் மக்கள் சம உரிமை பெற்ற சுதந்திர பிரஜைகளாக வாழும் காலத்தை உருவாக்கும் பாதையை நோக்கி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்களை நாம் தொடர்ந்தும் அழைத்துச் செல்வோம் என்பது எமது உறுதியான நம்பிக்கையாகும். அதற்கென நாம் விரும்பி எமது மக்கள் நலன் சார்ந்து எடுத்த பாதையே எமது இணக்க அரசியல் நிலைப்பாடாகும்.

தமிழ் மக்களின் நிரந்தரமான மகிழ்ச்சிக்காக நடைமுறைச்சாத்தியமான பாதையில் பயணித்துக்கொண்டிருக்கும் அதேவேளையில், எமது மக்கள் முகம் கொடுத்து வருகின்ற சமகாலப் பிரச்சினைகளுக்கும் அவசரமான தீர்வு காணவேண்டியது எமது கட்டாய கடமையாகும்.

பாதுகாப்பு காரணங்களுக்காக உருவாக்கப்பட்ட உயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்தும் யுத்தம் நடந்த பிரதேசங்களில் இருந்தும் இடம்பெயர்ந்த மக்களை சகல வசதிகளுடனும் மறுபடியும் குடியேற்றி அவர்களுக்கான மீள் கட்டுமானப் பணிகளை முன்னெடுக்க வேண்டும். இவற்றை காலம் தாமதிக்காமல் செய்து முடிப்பதற்காக எஞ்சியுள்ள பகுதிகளிலும் காணப்படும் கண்ணி வெடிகளைத் துரிதமாக அகற்றி எமது மக்களுக்கான மீள்குடியேற்றம் விரைவுபடுத்தப்படும்.

நடந்து முடிந்த யுத்த சூழலின்போது சரணடைந்தோர், தடுத்து வைக்கப்பட்டோர் மற்றும் அரசியல் காரணங்களுக்காகக் கைதுசெய்யப்பட்டோர் அனைவருக்கும் பொது மன்னிப்பு வழங்கி அவர்களுக்கான வாழ்வாதார உதவிகளை செய்து கொடுத்து அவர்கள் பொது வாழ்வில் ஈடுபடுவதற்கான சகல ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்.

கைது செய்யப்பட்டிருப்போர் அல்லது சரணடைந்திருப்போர், தடுத்து வைக்கப்பட்டிருப்பொர் மாணவர்களாக இருக்கும் பட்சத்தில் அவர்களுக்கான கல்வியை தொடர்வதற்கான நடவடிக்கைகள் விரைவாக முன்னெடுக்கப்படும்.

வன்னியில் இருந்து உடமைகளை கைவிட்டு ஓடிவந்த எம் உறவுகளின் உடமைகளை மறுபடியும் அவர்களுக்கு உரிய முறையில் பெற்றுக்கொடுக்க வேண்டும். அதே வேளையில் இழந்து போன அவர்களது உடமைகளை மீளப்பெற முடியாத பட்சத்தில் அதற்கான நஷ்ட ஈட்டினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

யாழ்.குடாநாட்டின் நீர்வளத்தைப் பெருக்கி விவசாயிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும், அனைத்து மக்களின் குடிநீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும் உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென நாம் விரும்புகின்றோம். அதற்காக இரணைமடு அணைக்கட்டை உயர்த்தி மேலும் அதிகமான நீரை தேக்கிவைப்பதோடு, அங்கிருந்து நீரை யாழ் நோக்கி திசை திருப்புவோம். சம காலத்தில் மகாவலி கங்கையை இரணைமடுவுடன் இணைக்கும் திட்டத்தையும் நடைமுறைப்படுத்த நாம் தீர்மானித்துள்ளோம். இதனால் கிளிநொச்சி மற்றும் யாழ் விவசாயிகள் உட்பட அனைத்து மக்களும் சம அளவிலான நன்மைகளைப் பெறமுடியும் என்பதை நாம் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றோம்.

கேரதீவு, சங்குப்பிட்டி பாதையைத் திறந்து விடுவதன் மூலம் எமது மக்களின் சுலபமான போக்குவரத்து மற்றும் வியாபார தொடர்புகளுக்கானத் தேவைகள் பூர்த்தி செய்யப்படும்.

வேலையற்ற பட்டதாரிகள் அனைவருக்கும் விசேட ஏற்பாட்டில் வேலைவாய்ப்பு வழங்குவதோடு வறிய மாணவர்களுக்கான கல்வி வசதிகளையும், உதவிகளும் வழங்கப்படும். அத்தோடு பாடசாலைகளை தரமுயர்த்தி அங்கே தேவையான ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

வெளிநாடுகளில் மற்றும் புலம்பெயர்ந்து வாழும் எம் உறவுகளின் முதலீடுகள் ஊடாகவும் எமது வாழ்விடங்கள் தோறும் பாரிய அபிவிருத்திப் பணிகளையும், தொழிற்துறைகளையும் ஆரம்பித்து எமது மக்களின் அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்யும் நடவடிக்கையில் உடனடியாகவே ஈடுபடுவோம்.

இலங்கை முதலீட்டுச் சபையின் யாழ்.கிளை அலுவலகத்தை திறந்து அதனூடாக உடனடியாகவே 03 பாரிய ஆடைத் தொழிற்சாலைகளை அமைத்து யாழ்.மாவட்டத்திலுள்ள 5,000ற்கும் அதிகமான இளைஞர், யுவதிகளுக்கு முதற்கட்டமாக உடனடி வேலைவாய்ப்புக்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும்.

முன்பள்ளி ஆசிரியைகளுக்கான மாதாந்த உதவித்தொகையினை வழங்கி வருகின்ற நாம் அவர்களுக்கான நிரந்தர நியமனங்களை விரைவில் வழங்குவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளோம். நிரந்தர நியமனம் கிடைக்கும்வரை அவர்களுக்கான உதவித்தொகை தொடர்ந்தும் வழங்கப்படும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகின்றோம்.

யாழ் குடாநாட்டிலுள்ள தொண்டர் ஆசிரியர்களுக்கு நாம் ஆசிரிய உதவியாளர்களாக நியமனம் பெற்றுக் கொடுத்து இருக்கிறோம். இவர்களை தொடர்ந்தும் நிரந்தரமாக ஆசிரியர்களாக நியமிக்கவும் உரிய நடவடிக்கைகளை நாம் எடுத்து இருக்கின்ற அதேவேளை, யுத்தம் நடந்த பிரதேசங்களில் இருந்து செயற்பட்டுவந்த வன்னி தொண்டர் ஆசிரியர்களையு[ம்] ஆசிரிய உதவியாளர்களாகவும் அதன் தொடர்ச்சியாக ஆசிரியர்களாகவும் நியமிப்பதற்கான நடவடிக்கைகளை நாம் முன்னெடுத்து வருகின்றோம்.

மகிந்த சிந்தனை என்பது வடபகுதி தமிழ் மக்களின் வறுமையில் இருண்டு போன வாழ்க்கை மீதும் அதிகமான கவனத்தைச் செலுத்தவேண்டும். அனைத்து இளைஞர் யுவதிகளுக்கும் வேலைவாய்ப்புக்களை வழங்கி தொழிற்துறைகளை ஊக்குவித்து சுயதொழி[ல்] வாய்ப்புக்களை ஏற்படுத்தி தமிழ் மக்களின் வாழ்விடங்கள் தோறும் இல்லாமை என்பது இல்லாதொழிக்கப்படும்.

'யுத்தத்தினால் சிதைந்துபோன எமது வாழ்விடங்களை யுத்தம் நடந்த மண் என்ற அடையாளங்களே இன்றி மறுபடியும் தூக்கி நிறுத்தி எமது தேசத்தை வளமிகு தேசமாக அழகுபடுத்துவோம்.

இரண்டாம் உலகப் போரில் ஹிட்லரின் தவறான வழிநடத்தலினால் ஜேர்மன் தேசம் அழிந்து போகவேண்டிய துயரங்கள் நிகழ்ந்தன. ஆனாலும், ஹிட்லரின் அழிவுக்குப் பின்ன[ர்] புதிதாக வந்த ஜேர்மன் அரசு ஜேர்மனியை ஹிட்லரிடம் இருந்து மீட்பதற்கான நடவடிக்கையி[ல்] ஈடுபட்டிருந்த அதே அமெரிக்கா, பிரித்தானியாவோடு உறவுகளைப் புதுப்பித்தது. ஹிட்லரின் தவறுகளுக்காக ஜேர்மன் மக்களைப் பழிவாங்கவேண்டாம் என அமெரிக்காவிடமும், பிரித்தானியாவிடமும் வேண்டுகோள் விடுத்தது. ஜேர்மனியில் நடந்த அழிவுகளுக்கும் சிதைவுகளுக்கும் ஜேர்மனியை ஹிட்லரிடம் இருந்து மீட்டு எடுத்த அதே அமெரிக்காவும், பிரித்தானியாவும் அதற்கான பொறுப்புணர்ச்சியோடு ஜேர்மன் தேசத்தை மறுபடியும் கட்டியெழுப்புவதற்கு காரணமாக இருந்தன.

இதே அணுகுமுறையையே நாமும் இலங்கை அரசாங்கத்துடன் கடைப்பிடிக்க விரும்புகிறோம். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் ஆட்சிக்கு வந்தபோது தாம் சமாதானப் பேச்சையே விரும்புவதாகவும் யுத்தத்தை விரும்பவில்லை என்றும் பகிரங்கமாக தெரிவித்திருந்த வரலாற்று நிகழ்வை நினைவில் நிறுத்தி அழிந்துபோன எமது தேசத்தை வெளிநாட்டு உதவிகளுடனும் இலங்கை அரசாங்கத்தின் ஊடாகவும் மறுபடியும் தூக்கி நிறுத்தும் பணியில் நாம் ஈடுபட்டு வருகின்றோம்.

தென்னிலங்கை மக்கள் அனுபவிக்கின்ற உரிமைகள் தங்கம் என்றும் தமிழ் மக்கள் அனுபவிக்கின்ற உரிமைகள் தகரம் என்றும் ஏற்றத்தாழ்வுகள் இன்றி கிடைக்கின்ற உரிமைகள் அனைத்து மக்களுக்கும் சமமானவை என்பதை நாம் நடைமுறையில் உறுதிப்படுத்துவதற்காக உறுதியுடன் உழைப்போம்.

13 ஆவது திருத்தச் சட்டத்தில் ஆரம்பித்து மாகாணசபைகளுக்கு கட்டம் கட்டமாக அதிக அதிகாரங்களை வழங்கி எமது அரசியல் உரிமைப் பிரச்சினைக்கான இறுதி இலக்கை நோக்கி நாம் நடைமுறைச்சாத்தியமான பாதையில் பயணிப்போம்.

வன்முறைகள் அற்றதும் ஜனநாயகம் நிறைந்ததுமான புதியதொரு சமுதாயத்தை நோக்கி நாம் விரைவாக முன்னேறுவோம். அதேநேரத்தில், நீண்ட இடைவெளிக்குப் பின்ன[ர்] எம்மை தேடிவந்திருக்கின்ற தேர்தலொன்று மாறுபட்ட ஒரு ஜனநாயகச் சூழலில் நிகழப்போகின்றது.

ஆனாலும் இந்த மகிழ்ச்சிக்குத் தடையாக சில தீய சக்திகள் இருந்து வருவதையும் மக்களாகிய நீங்கள் அறிவீர்கள். மக்கள் மத்தியில் ஆதரவுத்தளம் இல்லாத சில சக்திகள் கொழும்பில் இருந்து கூலிக் குண்டர்களை அழைத்துவந்து எமது தேர்தல் களத்தை வன்முறைக் களமாக மாற்றும் திட்டங்களை அரங்கேற்றி வருகின்றன.

இந்த வன்முறைகளுக்கு எதிராகவும் வன்முறைகளை ஆதரிக்கும் தீய சக்திகளுக்கு எதிராகவும் மக்களாகிய நீங்கள் மாபெரும் சக்தியாக எழவேண்டும் என்றும் நான் உங்களிட[ம்] கேட்டுக்கொள்கின்றேன்.

இவ்வாறு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அவர்கள் முன்பாகவும், பல்லாயிரக்கணக்கான மக்கள் முன்பாகவும் இந்தப் பகிரங்க உறுதிமொழியை வழங்கினார்.

X 9

**ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு**

**ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)**

(சு-5088)

# நாடாளுமன்றத் தேர்தல்-2010
## யாழ்ப்பாண மாவட்டம்

**அன்பு உள்ளம் கொண்ட வடமராட்சி மக்களே!**

மாண்புமிகு அமைச்சர் உயர்திரு கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்கள் குடா நாட்டு கடற்றொழிலாளர்கள் கடந்த கொடிய யுத்தத்தால் தமது தொழில்களை மேற் கொள்ள முடியாமல் இடம்பெயர்ந்து நிர்க்கதியாக இருந்த சமயத்தில் எமது கஷ்டங்களை தீர்த்து வைப்பதற்காக அரும்பாடுபட்டு கடற்தொழில் தடைகளை நீக்கி எமது சமூகம் சுதந்திரமாக இரவு பகல் என தொழில் செய்ய வழி அமைத்து தந்துள்ளார். எமது உற்பத்திப் பொருட்களை தென் பகுதிக்கு எடுத்துச் செல்வதற்கு வழி வகுத்துள்ளார். எமது சமாசம் இடம் பெயர்ந்து வன்னியில் வளங்களை இழந்திருந்த நிலையில், எமக்குச் சொந்தமான குளிரூட்டி வாகனங்களை எடுத்து வருவதற்கு உதவியுள்ளார்.

எமது மக்களின் நலன்களில் தீவிர அக்கறை கொண்டு செயற்படும் டக்ளஸ் தேவானந்தா அவர்கள், நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் வடம ராட்சி பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் திரு.ஐயாத்துரை ஶ்ரீரங்கேஸ் வரன் அவர்களை தேர்தலில் வேட்பாளராக நிறுத்தியுள்ளார்.

எனவே டக்ளஸ் தேவானந்தா அவர்களின் கரத்தைப் பலப்படுத்த வெற்றிலைச் சின்னத்துக்கு வாக்களித்து, வடமராட்சி கிழக்கின் மைந்தன் ஜயாத்துரை ஶ்ரீரங்கேஸ்வரன் அவர்களைஅதிகப்படியான விருப்புவாக்குகளால் வெற்றி பெறச் செய்ய, இடம்பெயர்ந்து குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நலன்புரி நிலையங்களில் வாழும் எமது மக்கள் சிரமங்கள் பாராது, வாக்களிப்பு நிலையத்திற்கு தவறாது வருகை தந்து வாக்களித்து ஶ்ரீரங்கேஸ்வரன் (ரங்கன்) அவர்களை வெற்றி பெறவைப்போம்.

(அ-5087)



3 ஶ்ரீரங்கன் | 9 K.N.டக்ளஸ் தேவானந்தா | 11 ஶ்ரீபதி.

வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், மருதங்கேணி

# மக்கள் நலன்சார் அமைப்புக்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

மக்கள் நலன்சார் அமைப்புக்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா நிதியுதவிகளை வழங்கினார்.

அத்துடன் சுயதொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு கடற் தொழில் உபகரணங்கள் மற்றும் தையல் இயந்திரங்களையும் அமைச்சர் பொது அமைப்பு களுக்கு வழங்கினார்.

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து தற்போது கைதடி நவில்ட் பாடசாலையில் தற்காலிகமாக தங்கியிருக்கும் விழிப்புலன், செவிப்புலன் இழந்த மாணவர்களைத் தமது யாழ். அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடிய அமைச்சர் அவர்களது கல்வி வளர்ச்சிக்காக இரண்டு இலட்சம் ரூபாவை விழிப்புலனற்ற பல்கலைக்கழக மாணவர்களிடம் வழங்கியுள்ளார்.

இந்நிதியை விழிப்புலன், செவிப்புலன் இழந்த மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குப் பயன்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டதுடன் இம் மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளைத் தொடர்வதற்குப் பிரத்தியேக இடமொன்றை ஏற்பாடு செய்து தருவதாகவும் உறுதியளித்துள்ளார்.

அளவெட்டி கிராம அபிவிருத்தி மகளிர் சங்கத்திற்கு தையல் இயந்திரம் ஒன்றையும் ஒரு இலசட்ம் ரூபாவிற்கான காசோலையையும் வழங்கிய அமைச்சர் இந்த நிதியை சுழற்சி முறையில் கடன் அடிப்படையில் அப்பகுதி மகளிரின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துமாறு கேட்டுக்கொண்டார்.

இதற்கிடையே அளவெட்டி தெற்கு கலைவாணி சனசமூக நிலையம், கலைவாணி விளையாட்டுக்கழகம் என்பவற்றுக்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளார்.

அத்துடன் உடுவில் கிராமிய வலுப்படுத்தல் இணையத்திற்கு இரண்டு இலட்சம் ரூபாவையும் நவாலி மகாவித்தியாலத்திற்கு இரண்டு இலட்சம் ரூபாவையும் வேலணை துறையூர் கிராமத்தைச் சேர்ந்த 144 கடற்றொழிலாளர்களுக்கு மீன்பிடி வலைகளையும் யாழ். மாவட்ட முன்பள்ளி ஆசிரியர்களின் ஒன்றியத்திற்கு ஒரு இலட்சம் ரூபாவையும் வழங்கியுள்ளதோடு எழுவைதீவு புனித தோமையார் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு உள் இணைப்பு இயந்திரம் மற்றும் ஒலிபெருக்கி உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக நான்கு இலட்சம் ரூபாவையும் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)


# ஆளும் கட்சி வேட்பாளர்களின் ஆதரவாளர்கள் மோதல்

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளர்களின் ஆதரவாளர்களுக்கு இடையில் நேற்றுக் காலை இடம்பெற்ற மோதலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அம்பாறை நகர சபையின் பிரதி மேஜர் சமன் மொறயஸ் காயமடைந்துள்ளார்.

அத்துடன் இந்த மோதலில் மேலும் பலர் காயமடைந்துள்ளனர். பேரியல் அஸ்ரப் மற்றும் சரத்வீரசேகர ஆகியோரின் ஆதரவாளர்களுக்கு இடையிலேயே இந்த மோதல் இடம் பெற்றுள்ளது. (6)

# பாராளுமன்றப் பொதுத் தேர்தல் 2010



இந்திய வெளியுறவுச் செயலர் நிருபமாராவை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வரவேற்பதைப் படத்தில் காணலாம்.

நாடு கடந்த தமிழீழ அரசு அமைய முன் இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு இந்தியாவின் திட்டம் இது என்கிறது லங்காதீப

இச் செய்தி 08/03/2010 வலம்புரி தலைப்புச் செய்தி

X 9



கே.என்.டக்ளஸ் தேவானந்தா


**இந்தியாவின் அனுசரணையோடு தமிழினத்தின் வாழ்வை மேம்படுத்த அரசியல் தீர்வொன்றை காண்பதற்காக ஆளும் தரப்போடு இணைந்து இணக்கப்பாட்டு அரசியல் நடத்தும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் EPDP கட்சியை வெல்லச் செய்வோம்.**

**ஐயாத்துரை ஶ்ரீரங்கேஸ்வரன்**

(தோழர் ரங்கன்)

வடமராட்சி வலய அமைப்பாளர்

3




**அலெக்ஸாண்டர் சூசைமுத்து**

(தோழர் சார்ல்ஸ்)

தென்மராட்சி வலய அமைப்பாளர்

4



**தென்மராட்சி மக்கள்**

(1021)

# சுற்றாடலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வேட்பாளர்கள்

தேர்தல் பிரசாரத்திற்கான கால எல்லை முடிவடையவுள்ள நிலையில் சில வேட்பாளர்கள் தேர்தல் சட்டங்களை அதிகளவு மீறும் வகையில் செயற்படுவதாக தேர்தல் கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சில வேட்பாளர்கள் சுற்றாடலுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் பிரசாரங்களை மேற்கொள்வதாக சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்களமைப்பின் (கபே) ஊடகப் பேச்சாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

குருநாகல் மாவட்டத்தில் ஹெலிகொப்டர்களை பயன்படுத்தியும் மாத்தறையில் குதிரைகள் மற்றும் அதிக சத்தத்தை வெளிப்படுத்தும் மோட்டார் சைக்கிளிள்களை பயன்படுத்தியும் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் மேற்கொண்டமை குறித்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இத்தகைய நடவடிக்கைகள் காரணமாக சுற்றாடலுக்கு பாதிப்பு ஏற்படுவதாகவும் மக்கள் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவித்துள்ளார்.

தேர்தல் சட்டம் உரியமுறையில் கடைப்பிடிக்கப்படுவதை உறுதி செய்ய முடியாதுள்ள நிலையில் இத்தகைய பிரசார நடவடிக்கைகளை பொலிஸாரால் தடுக்க முடியாதுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை கடந்த சில தினங்களாக தேர்தல் சட்டத்தை மீறும் வகையிலான பிரசார நடவடிக்கைகள் அதிகரித்துள்ளதாக தேசிய தேர்தல் கண்காணிப்பு மத்திய நிலையத்தின் தேசிய இணைப்பதிகாரி சட்டத்தரணி ரசாங்க அரிச்சந்த தெரிவித்துள்ளார்.

பெரும் எண்ணிக்கையான வாகனங்களை பயன்படுத்தி சில வேட்பாளர்கள் ஊர்வலங்களை நடத்தி வருவதாகவும் அது தேர்தல் சட்டத்தை நேரடியாக மீறும் செயல் எனவும் அவர் கூறியுள்ளார்.

இத்தகைய ஊர்வலங்களை ஏற்பாடு செய்பவர்களை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதன் மூலம் ஒரு மாத காலத்திற்கு விளக்கமறியலில் வைப்பதற்கோ அபராதம் விதிப்பதற்கோ சந்தர்ப்பம் உள்ளதென ரசாங்க அரிசந்த குறிப்பிட்டார். (6)


மக்லியோட் வைத்தியசாலை, இணுவில்
ஸ்தாபிதம் 1898

அதிநவீன இயந்திரத்தின் ஊடாக மருத்துவ பரிசோதனைகள்

இணுவில் மக்லியோட் வைத்தியசாலையின் மருத்துவ ஆய்வுகூடப் பிரிவுக்கு அண்மையில் புதிதாக அதிநவீன Eliza Bio Chemistry analyzer வந்து சேர்ந்தது. இந்த இயந்திரத்தின் ஊடாக அநேக hormone, Cholesterol போன்ற மருத்துவ பரிசோதனைகள் செய்து கொடுக்கப்படுகின்றன என்பதை இத்தால் அறியத் தருகின்றேன். இதனால் நோயாளிகள் பயனடையலாம்.

மருத்துவ மேலதிகாரி,
Medical Superintendent,
Mc.Leod Hospital,
Inuvil.

Telephone
021 222 7669

(1120)



யாழ்.அத்தியடி பிள்ளையார் கோயில்
பெருந்திருவிழா




கொடியேற்றம் –06.04.2010 (செவ்வாய்) பகல் 12.00
சப்பறம் – 13.04.2010 (செவ்வாய்) மாலை 6.00
தேர் – சித்திரை வருடப்பிறப்பு அன்று (14.04.2010) காலை 9.00
தீர்த்தம் – 15.04.2010 (வியாழன்) காலை 10.00

பெருந்திருவிழாவை பிரம்மஸ்ரீ நா.யோகேஸ்வரக் குருக்கள் அவர்களின் நல்லாசியுடன் பிரம்மஸ்ரீ யோ. பிரபாகரக் குருக்கள் அவர்கள் நடாத்தி வைப்பார்கள்.

கோயில் நிர்வாகம்

விளம்பர அனுசரணை:-
T.P-222 7902
89V, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (C-4977)



நெடுந்தீவிற்கான உதயதாரகை பயணிகள் படகுச்சேவை ஆரம்ப நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா படகுச் சேவையை ஆரம்பித்து வைப்பதையும், படகு புறப்படுவதற்கு தயாராவதையும் படங்களில் காணலாம்.


நாடாளுமன்றத் தேர்தல் 2010

- யாழ். மாவட்டத்திலிருந்து மக்கள் வன்னி சென்ற வேளையும் வன்னியிலிருந்து மக்கள் மீளக்குடியமரக் கப்பலில் வந்தவேளையும் அவர்களின் போக்குவரத்து, தங்குமிடவசதி, உணவு மற்றும் அத்தியாவசிய தேவைகளை உடனுக்குடன் நேரில் நின்று இரவு பகலாக செயற்படுத்தியவர்.
- கடும் சண்டை நடந்து கொண்டிருந்த கிளாலியில் மக்கள் நீர், உணவின்றி தவித்தவேளை ICRC, SLRC முன் அனுமதி பெற்று செல்ல முடியாத நிலையில், துணிந்து அவர்களுக்கான அத்தியாவசிய உணவுப் பொருட்களை இரண்டு லொறிகளில் எடுத்துச் சென்று வழங்கியவர்.
- மாவட்டத்தின் மீள்குடியேற்றப் பணிகளை முன்னின்று செயற்படுத்திய அனுபவம் பெற்றவர். தற்போதைய மீள்குடியேற்றப் பணிகளைத் திட்டமிட்ட முறையில் முன்னெடுத்து நடைமுறைப்படுத்தும் ஆற்றல் பெற்றவர், ஆர்வம் உள்ளவர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி




திரு. வீ.ஆனந்தசங்கரி




திரு.செ.மகாலிங்கம்
(முன்னாள் திட்டமிடல் பணிப்பாளர் P.D )

(1022)

X


# பிரி. அரசியல் கட்சிகளின் பட்டியலிலிருந்து விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி நீக்கம்

(கொழும்பு)

பிரிட்டனில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி என்ற பெயரில் பதிவுசெய்யப்பட்ட அரசியல் கட்சியை பிரித்தானியா தேர்தல் ஆணையகம் தனது பதிவுகளிலிருந்து தற்காலிகமாக நீக்கியுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் இக்கட்சிக்கு தொடர்பிருப்பதே இதற்குக் காரணம் எனவும் இதுகுறித்து பிரித்தானியா தேர்தல் ஆணையகம் மேலதிக விசாரணைகளை நடத்திவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இக்கட்சியை ஆரம்பித்தவர் கைது செய்யப்படும் நிலையை எதிர்நோக்குவதாக பிரிட்டனின் குரோய்டன் கார்டியன் பத்திரிகை தெரிவித்துள்ளது.

இக்கட்சித் தலைவரான 69 வயதான நடராஜா பாலசுப்ரமணியம் எதிர்வரும் தேசிய மற்றும் உள்ளூராட்சி தேர்தல்களில் வேட்பாளர்களை நிறுத்துவதற்குத் திட்டமிட்டிருந்தார்.

பிரிட்டனில் அரசியல் கட்சிகளைப் பதிவு செய்தவதற்குப் பொறுப்பான தேர்தல் ஆணையகத்தின் பேச்சாளர் ஒருவர் இக்கட்சி தொடர்பாக கூறுகையில், விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி இவ்வருடம் பெப்ரவரி 10 ஆம் திகதி அரசியல் கட்சியாக பதிவு செய்யப் பட்டது.

மார்ச் 19 ஆம் திகதி இக்கட்சி தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையது என்பது ஊடகங்கள் மூலம் எமக்குத் தெரிய வந்தது.

நாம் இது தொடர்பாக விசாரணை நடத்தி வரும் நிலையில் இக்கட்சியை பதிவிலிருந்து தற்காலிகமாக நீக்கியுள்ளோம் எனத் தெரிவித்துள்ளார். (6)

## குழுப்படம் எடுத்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக பட்டப்பின் கல்வி டிப்ளோமா பகுதிநேர கற்கைநெறியைப் பூர்த்திசெய்த 2006/2008 கல்வியாண்டு மாணவர்களின் குழுப்படம் எடுக்கும் நிகழ்வு எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெறும் இந் நிகழ்விற்கு அனைத்து மாணவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. (6)

கெட்ட செய்திகளுக்கு இறக்கைகள் உண்டு. நல்ல செய்திகளுக்கு கால்கள் கூடக் கிடையாது. - அப்துல் ரஹீம்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## ஊடகங்களுக்கு ஆபத்து ஊடகங்களால் ஆபத்து

1992ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் கலை வாரத்தின் நிகழ்வாக பட்டிமன்றம் நடைபெற்றது.

'பெண்ணாதிக்கத்திற்கு எதிராக ஆண்கள் போராட வேண்டிய காலம் வந்துவிட்டது' என்பதே அந்த பட்டிமன்றத்தின் விடயப்பொருள்.

வாதிட்டவர்களில் ஒரு தரப்பு மாணவர்கள் இன்னமும் ஆண் ஆதிக்கம் மேலோங்கி இருக்கும் போது இந்தத் தலைப்பை நடுவர் நிராகரித்து தீர்ப்பளிக்க வேண்டும் என்றனர்.

மறுதரப்போ பெண்ணாதிக்கம் தான் மேலோங்கியுள்ளது, பாவம் ஆண்கள். அவர்கள் தான் ஆணடிமைத்தனத்திற்காகப் போராட வேண்டியவர்கள் என வாதிட்டனர்.

கைலாசபதி கலையரங்கில் சுடுபறந்த இப்பட்டி மன்றத்தில் தீர்ப்பு வழங்கிய நடுவர், தனது தீர்ப்புரையில், இதுவரை பெண்ணடிமை பற்றி சிந்தித்து பழகிப்போன எமக்கு ஆணடிமைத் தனம் பற்றி சிந்திக்க முடியவில்லை.

இவ்விதம் சிந்திக்க விடாமல் தடுத்தமை கூட பெண்களின் திறன்தான் காரணமாக இருந்திருக்க வேண்டும்.

தன் அடிமைத்தனம் பற்றியே சிந்திக்க முடியாத ஆணினத்தின் எதிர்காலத்தை நினைக்கும் போது நெஞ்சம் நடுங்குகிறது என்றார்.

1992ஆம் ஆண்டில் நடந்த பட்டிமன்றத்தைக் கூறி ஏனையா எங்கள் நேரத்தை வீணாக்குகிறீர்கள் என்று நீங்கள் முணுமுணுப்பதும் தெரியாமல் இல்லை. இங்கு தான் ஒரு விடயம் உண்டு.

அதாவது இலங்கைத் திருநாட்டில் ஊடகங்களுக்கு-பத்திரிகைகளுக்கு அச்சுறுத்தல் உண்டு என்பதே பேசுபடுபொருளாக இருக்கின்றது.

உதாரணமாக பெண்ணாதிக்கம் போல ஊடகங்களுக்கான அச்சுறுத்தல் பற்றியே பரவலான பேச்சும் அறிக்கையும் ஆகும்.

ஆனால் 'ஊடகங்களால் அச்சுறுத்தல்' என்ற விடயம் பற்றியும் சிந்திக்க வேண்டியவர்களாகப் பொதுமக்கள் உள்ளனர்.

ஊடகங்களுக்கே இந்த நாட்டில் அச்சுறுத்தலும் ஆபத்தும் என்ற நினைப்பில் பழகிப் போன மக்கள், ஊடகங்களால் ஏற்படுகின்ற-ஏற்படப் போகின்ற அச்சுறுத்தல்கள் பற்றி இம்மியும் சிந்திக்க வில்லை.

இவ்விதம் சிந்திக்காமல் தடுத்ததில் ஊடகங்களுக்கே பெரும் பங்குண்டு. ஜனநாயகத்தில் நான்கு தூண்களில் ஒன்று ஊடகம் எனில், அந்த ஊடகங்கள் உயர் நீதிமன்றங்களுக்கு இணையான நீதியை-நடுநிலையைப் பேண வேண்டும்.

சிலவேளைகளில் சட்டங்களில் இருக்கக் கூடிய ஓட்டைகளினால் நீதிமன்றங்கள் கூட தவறான தீர்ப்பைத் தந்து விடலாம்.

ஆனால் பத்திரிகைகள் உள்ளிட்ட ஊடகங்கள் அந்தத் தவறைக் கூட செய்தல் ஆகாது. பத்திரிகைகள் எப்போதும்-எந்தத் துன்பம் வந்தாலும் நடுநிலை நின்று விலகாமல் இருக்கும் போதே மக்களை நல்வழிப்படுத்த முடியும்.

இதைவிடுத்துத் தனிப்பட்ட, விருப்பு வெறுப்புகளுக்கு இடம் கொடுத்தால் அங்குதான் பொது மக்கள் ஊடகங்களை வெறுக்க ஆரம்பிப்பர்.

ஊடகம் என்ற உயர்பெறுமான பதத்தை யார் பழுதாக்கினாலும் அது ஜனநாயகத்தைச் சிதைக்கும்.

ஆக, ஊடகங்கள் மக்களைத் தவறாக நடத்த முற்படுவதை மக்கள் இனங்கண்டு முளையிலேயே நுள்ள வேண்டும்.

# பௌத்த கலாசாரத்திற்கு தொன்மையான வரலாறு இருப்பது போல் இந்து கலாசாரத்திற்கும் உண்டு

## பேராசிரியர் சுதர்சன் செனிவிரட்ணா

(கொழும்பு)

பல்லினப் பண்பாடு கொண்ட எமது நாட்டில் குறிப்பிட்ட ஒரு இனம் அல்லது குறிப்பிட்ட ஒருமொழி பேசிய மக்கள் மட்டும் வாழ்ந்ததாகக் கூறுவதற்கு ஆதாரமில்லை. இங்கு பௌத்த கலாசாரத்திற்குத் தொன் மையான வரலாறு இருப்பது போல் இந்து கலாசாரத்திற்கும் தொன்மையான வரலாறு உண்டு. இதற்கு வரலாற்று ஏடுகளில் காணப் படும் ஐந்து பழமை வாய்ந்த சிவாலயங்களே சான்றாக உள்ளன என பேராசிரியர் சுதர்சன் செனிவிரட்ணா தெரிவித்துள்ளார்.

இலங்கைக் கலாசார அமைச்சின் கீழ் இயங்கும் மத்திய கலாச்சார நிதி நிறுவனத்தின் பணிப்பாளரான பேராசிரியர் சுதர்சன் செனி விரட்ணா அண்மையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறையினருடன் இணைந்து நடாத்திய இருநாள் கருத்தரங் கின் போதே மேற்கண்டவாறு தெரிவித் துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் ,

கல்வியறிவு மிக்க யாழ்ப்பாணத்தில் பெறுமதி மிக்க இயற்கைக் கனிமங்களும், தொன்மை மிக்க பண்பாட்டுச் சின்னங்களும் இருப்பதை நாம் அறிவோம். கடந்த காலங்களில் தென்னிலங்கையில் நாம் மேற் கொண்ட தொல்லியற் பணிகளால் பல பண்பாட்டு மையங்களை அடையாளம் கண்டு அவற்றைப் பாதுகாத்து வருகி றோம். அதற்கு வேண்டிய நிதியினை யுனெஸ்கோ நிறுவனம் வழங்கி வருகிறது.

ஆனால் அப் பணிகளையெல்லாம் கடந்த காலங்களில் வட இலங்கையில் மேற் கொள்ள வேண்டிய எதிர்காலத்தில் இப் பணிகளை உங்கள் பல்கலைக்கழ வரலாற்றுத்துறையினருடன் இணைந்து மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளோம். எமது பூர்வீக மக்களது தொல்லியல் மையங்களையும், பண்பாட்டுச் சின்னங்களையும் அழிந்து போகாது பாதுகாக்க நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். அது நாம் எமது சந்ததியினருக்கு செய்யும் நன்றிக்கடனாகும் என்றார்.

உலக நாடுகளிடையே காணப்படும் வரலாற்றுப் பெறுமதியுடைய தொன்மை யான தொல்லியல், பண்பாட்டுச் சின்னங்களைப் பாதுகாப்பதற்கு நிதியுதவி அளித்து வரும் யுனெஸ்கோ நிறுவனம் இலங்கையில் உள்ள ஏழு இடங்களை உலகத் தொல் லியற் சுற்றுலா மையங்களாக அடையாளம் கண்டு அவற்றைப் பராமரித்து வரு கிறது.

அவற்றின் தொடர்ச்சியாகத் தமிழர் பிராந்தியங்களில் உள்ள தொல்லியல், பண்பாட்டு மையங்களைப் பராம ரிக்கும் நோக்கில் கடந்த மாதம் 17 ஆம் திகதி யாழ். பல்கலைக் கழகத்தில் கருத்தரங்கு ஒன் றினை ஒழுங்கு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (6)

# இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள வெளிநாட்டவர்கள் முன்வரவேண்டும்

## இலங்கை முதலீட்டுச் சபைத் தலைவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதன் மூலம் தொழிற்சாலைகள் பலவற்றை நிறுவி தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுக்க வெளிநாட்டவர்கள் முன்னின்று செயற்படவேண்டும் என்று இலங்கை முதலீட்டுச் சபையின் தலைவர் தம்மிக்க பெரேரா தெரிவித்துள்ளார்.

இலங்கை முதலீட்டுச்சபையின் யாழ். காரியாலய திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

முதலீடுகளை மேற்கொள்வதற்கு ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில், சிறந்த நாடாக இலங்கை காணப்படுகின்றது. இங்கு முதலீடுகளை அதிகரிப்பதன் மூலம் தொழிற்சாலைகள் பலவற்றை நிறுவ முடியும்.

நாம் தென்னிலங்கையில் உள்ள கொழும்பு ,கம்பஹா ஆகிய இடங்களில் தொழிற்சாலைகளை நிறுவினால் தூர இடங்களில் இருந்தே தொழிலாளர்களை அழைத்துவர வேண்டியுள்ளது. ஆனால் இவற்றை யாழ்ப்பாணத்தில் நிறுவும் போது குறுகிய தூரங்களில் (20 கிலோ மீற்றர்) இருந்தே நிறைந்த அளவில் தொழிலாளர்களை பெறமுடியும்.

தொழிற்சாலைகளைத் தொடங்க வெளிநாட்டவர்கள் முதலீடுகள் செய்ய முன் வரவேண்டும். இன்னமும் பழைய தீய பரப்புரைகளுக்கு ஆளாகாமல் முதலீட்டினை விருத்தி செய்வதற்கு அவர்களின் பங்களிப்பு அவசியம் எனவும் பணிப்பாளர் மேலும் கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து இங்கு உரை நிகழ்த்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்ப் பாணம் வருகை தந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் இலங்கை முதலீட்டுச்சபை தலைவர் தம்மிக்க பெரேரா சந்தித்து கலந்துரையாடிய போது இங்கு 3 ஆடைத் தொழிற்சாலைகளை நிறுவவும் 5ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்புகளை வழங்கவும் குடாநாட்டின் முதலீட்டுத் துறையை மேம்படுத்தவும் இணக்கம் காணப்பட்டதாக கூறினார்.

முதலீட்டுச் சபையின் சிரேஸ்ட பிரதிப்பணிப்பாளர் எ.ஜெயமனோன் கூறியது போல் யாழ். குடாநாட்டின் முதலீட்டு வாய்ப்புக்களை இனங்களண்டு உள்நாட்டு வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவித்து வர்த்தக சமூகத்தினரின் முதலீட் டுச் சேவைகளையும் புதிய தொழில் முயற்சிகளையும் ஏற்படுத்துவதற்கு முதலீட்டுச் சபை திட்டமிட்டுள்ளது.

30 வருடத்தின் பின்னரான *வடக்கின் வசந்தம்* வேலைத் திட்டத்தின் கீழ் யாழ். குடாநாட்டினை முதலீட்டு கேந்திர நிலையமாக மாற்ற யாழ். காரியாலயம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதன்கீழ் தகவல் ,தொழில்நுட்பம்,அவை சார்ந்த துறைகள், உயர் கல்வி ,மீன் பிடித்துறை ,விவசாயம் சார் தொழில்நுட்பத்துறைகள் என்பவற்றை இனங்கண்டு முதலீடு , வேலை வாய்ப்பு என்பன ஊக்குவிக்கப்படவுள்ளதுடன் இலங்கையின் ஏனைய பிரதேசங்களுக்கு வழங்கப்படும் வரிச்சலுகைகளுக்கு மேலதிகமாக 15 முதல் 20 வருடம் வரையிலான வருமான வரி விலக்கு , தொழில் முயற்சிகளுக்கு இறக்குமதி செய்யப்படும் மூலதனப்பண்டங்களுக்கு சுங்கத்தீர்வை விலக்கு என்பன ஊக்குவிப்பாக அமையும் என்றார்.(6-30)

## உலங்கு வானூர்தியில் தேர்தல் பிரசாரம்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வேட்பாளர் ஒருவர், விமானப்படையின் உலங்கு வானூர்த்தியைப் பயன் படுத்தி, தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளார்.

கட்சியின் குருநாகல் மாவட்ட வேட்பாளரும், பிரதி சுகாதார அமைச்சருமான ஜயந்த ஹேரத் இந்த செயலை மேற்கொண்டுள்ளார். உலங்கு வானூர்தி மூலம் தமது பிரசார கையேடுகளை விநியோகித் துள்ளார். இதற்காக இலங்கை விமானப் படையின் பெல் 212 வகை உலங்கு வானூர்த்தியை வாடகைக்கு பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனை இரண்டு மணித்தியாலங்களுக்கு அவர் வாடகைக்குப் பெற்றுக் கொண்டுள்ளார். இதற்காக இவரிடம் இருந்து ஒரு மணித்தியாலயத்துக்கான வாடகைப்பணமாக 2 ஆயித்து 150 டொலர்கள் அறவிடப்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-5)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



### மதமும் ஒழுக்கமும்

ஒரு மனிதன் மிகவும் அருமையான நடையில் சிறந்த கருத்துக்களைப் பற்றிப் பேசுபவனாக இருக்கலாம். ஆனால் அது மக்களைக் கவருவதாக இருக்காது. மற்றொருவன் பேச்சில் அழகிய மொழி , கருத்து என்னும் இவற்றுள் எதுவும் இல்லாமலிருக்கலாம். ஆனால் அவனுடைய சொற்கள் கேட்பவர்களின் உள்ளங்களைக் கவர்கின்றன. அவனுடைய ஒவ்வொரு செயலும் சக்தி வாய்ந்ததாக இருக்கிறது. இந்தச் சக்தி ஓஜஸ்ஸினால் வருவதாகும்.... கற்பொழுக்கம் உடைய ஆண்களும் பெண்களும் மட்டுமே ஓஜஸ்ஸை மேலே எழுப்பி மூளையில் சேமித்து வைக்க முடியும்.

ஆகையால்தான் பிரம்மச்சரியம் எப்போதும் மிகவும் உயர்ந்த ஒழுக்கமாகக் கருதப்பட்டு வருகிறது. ஒருவன் பிரம்மச்சரியத்திலிருந்து தான் வழுவியதாக உணர்ந்தால் ஆன்மீகச் சக்தி அவனிடமிருந்து போய்விடுகிறது.



தண்ணீருக்குள் 24 மணிநேரம் நீர் மூழ்கி உடையுடன் தங்கி இருந்ததே இதுவரை கின்னஸ் சாதனையாக இருந்தது. அதை முறியடித்து 36 மணி நேரம் நீருக்குள் மூழ்கி புதிய கின்னஸ் சாதனை படைக்கும் முயற்சியில் அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் இருவர் ஈடுபடவுள்ளனர்.

# பாகிஸ்தானில் இடம்பெற்ற மோதலில் 25 பயங்கரவாதிகள் பலி

(பெஷாவர்)

பாகிஸ்தானில் ஆப்கான் எல்லையை ஒட்டிய ஒராக்சாய் பழங்குடியினப் பகுதியில் தலிபான்களுக்கு எதிராக நடத்தப்பட்ட பெரியளவிலான தாக்குதலில் 25 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர் என அந்நாட்டு பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுகுறித்து பாக். பாதுகாப்புப் படை அதிகாரிகள் கூறியதாவது,

ஒராக்சாய் பழங்குடியினப் பகுதியில் குவாண்டாரோ மற்றும் கோயீன் நகரங்களில் பாதுகாப்பு படையினர் மற்றும் பயங்கரவாதிகள் இடையே சண்டை நடைபெற்றது. இதில் பாதுகாப்பு அதிகாரிகள் இருவரும் பயங்கரவாதிகள் பலரும் காயமடைந்தனர்.

இதன் பின் இரண்டு நகரங்களையும் தங்கள் கட்டுப்பாட்டில் கெண்டு வந்த பாதுகாப்புப் படையினர் சுல்தான்சல் மற்றும் உத்மான் கெல் ஆகிய பகுதிகளில் ஹெலிகொப்டர் மூலம் தாக்குதல் நடத்தினர். இவ்வாறு அவர்கள் கூறினர்.

இதேபோல் பெஷாவர் மற்றும் கைபர் பழங்குடியினப் பகுதிக்கு இடையில் அமைந்திருக்கும் ஷல்கான் கிராமத்தில் பொலிஸார் மற்றும் பயங்கரவாதிகள் இடையே துப்பாக்கிச் சூடு நடைபெற்றது.

இதில் ரியாஸ் கான் மிர் கலாம் என்ற இரண்டு பொலிஸ் அதிகாரிகள், காவலர்கள் இருவர், எட்டு பயங்கரவாதிகள் உயிரிழந்தனர்.

மூன்று பொலிஸார் மற்றும் துணை இராணுவப் படையினர் காயமடைந்ததாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.


## மலேசியாவில் விரைவில் தமிழ் பாடசாலை

மலேசியாவின் புகித் கதில் நகரில் அடுத்த பொதுத் தேர்தலுக்கு முன்பாக தமிழ்ப் பாடசாலை திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி மலாகா மாநில முதல்வர் டாதக் செரி முகமது அலி ரஸ்தம் கூறியதாவது, உள்ளூர் மக்களின் பிரச்சினைகளை தீர்க்க முடியாமல் எதிர்க்கட்சியில் பலர் ராஜினாமா செய்துள்ளனர். அவர்கள் பொய் வாக்குறுதி தரக்கூடாது .அடுத்த தேர்தலுக்கு புகித் கதில் நகரில் தமிழ்ப் பாடசாலை திறக்கப்படும் . அதற்காக பதூபெரண்டம் விமான நிலையம் அருகே நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது என்றார்.

# புளூட்டோ கிரகம் பிரகாசமாக மாறுகிறது

## நாசா தெரிவிப்பு



புளூட்டோகிரகம் பிரகாசமாக மாறிவருவதாக அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி மையமான நாசா தெரிவித்துள்ளது. புளூட்டோ கிரகம் சூரியனைக் கடந்து 248 ஆண்டுகளாக சுற்றி வருகிறது.

இந்நிலையில் அது பிரகாசமாக மாறிவருவதாகத் தெரிவித்துள்ள நாசா விண்வெளியைச் சுற்றிவரும் கப்பில் தொலைக்காட்டி எடுத்த படங்களின் அடிப்படையிலேயே இக்கருத்தை வெளியிடுவதாகக் கூறியுள்ளது.

இதற்கு முன்பு கடந்த 1994 ஆம் ஆண்டு ஐரோப்பிய விண்வெளி நிறுவனம் எடுத்து அனுப்பிய படங்களை விட தற்போது எடுக்கப்பட்டுள்ள படத்தில் புளூட்டோவின் மேற்பரப்பு மிக தெளிவாகவும் பிரகாசமாகவும் இருப்பதாக நாசா தெரிவித்துள்ளது.

புளூட்டோ கிரகத்தில் சூரிய ஒளி படும் துருவத்தின் மேற்பரப்பில் உள்ள பனிக்கட்டி உருகுவதாலும், அதன் எதிர் துருவம் உறைவதாலும் இந்த மாற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் அது மேலும் கூறியுள்ளது.



உ.பி.மாநிலம் லக்னோவில் பிரின்ஸ் என்ற புகழ்பெற்ற நடனக்குழு சார்பில் நடைபெற்ற கலைநிகழ்ச்சியில் பங்கேற்ற கலைஞர் கிருஷ்ணாவதார காட்சியை தத்ரூபமாக விளக்கியது பார்வையாளர்களை பெரிதும் கவர்ந்தது.

# பின்லாந்து பேராசிரியருக்கு ‘கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது’

பின்லாந்து நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் அஸ்கோ பார்ப்போலாவுக்கு செம்மொழி தமிழ்விருது வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த விருதுடன் ரூ10 இலட்சம் பொற்கிழி மதிப்புச்சான்றிதழ் நினைவுப்பரிசு வழங்கப்படவுள்ளது.

செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்துக்கு கலைஞர் மு.கருணாநிதி செம்மொழி அறக்கட்டளை சார்பில் ரூ.1கோடியை வழங்கினார். இந்த நிதியை கொண்டு தமிழ்பண்பாடு நாகரிகம் பற்றிய புதிய கருத்துகளை ஆராய்ந்து செம்மொழி தமிழுக்கு பங்காற்றிவரும் அறிஞர் அல்லது நிறுவனத்துக்கு கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது வழங்க முடிவு செய்யப்பட்டது.

இவ்விருதுக்கு தகுதியானவரை தேர்வு செய்ய செம்மொழி தமிழ் ஆய்வு மத்திய நிறுவனத்தலைவர் கருணாநிதி தலைமையில் முன்னாள் துணைவேந்தர் வா.செ. குழந்தைசாமி, நீதிபதி எஸ்.மோகன், செக்கோஸ்லோவாகியா நாட்டு தமிழறிஞர் பேராசிரியர் ஜரோஸ்லாவ் வாசெக், கல்வெட்டியல் அறிஞர் ஐராவதம் மகாதேவன், கவிஞர் அப்துல் ரகுமான் ஆகியோர் அடங்கிய குழு கூட்டம் நடைபெற்றது.

இதில் சிந்து சமவெளி நாகரிக எழுத்துச் சிக்கலைத் தீர்க்க அரும்பாடுபட்டு வருபவரும் சிந்துவெளி பண்பாடும் எழுத்தும் திராவிட குடும்பத்தை சேர்ந்தவை என்று 1968 முதல் வலியுறுத்தி வருபவருமான அஸ்கோ பார்ப்போலாவுக்கு இந்த ஆண்டுக்கான கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது அளிப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

இந்த விருது கோவையில் எதிர்வரும் ஜுன் 23 முதல் ஜுன் 27 வரை நடைபெறவுள்ள உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் வழங்கப்படும் என்று செம்மொழி தமிழாய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

# பக்தாத்தில் 3 இடங்களில் இடம்பெற்ற குண்டு வெடிப்புகளில் 20 பேர் பலி

(பக்தாத்)

பக்தாத்தில் 3 இடங்களில் நிகழ்ந்த குண்டு வெடிப்புகளில் 20 பேர் உயிரிழந்ததாக ஈராக் உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பல்வேறு வெளிநாட்டுத் தூதரகங்கள் அமைந்துள்ள மன்சூர் பகுதிக்கு அருகே மேற்கு பக்தாத்தில் இரண்டு இடங்களில் கார்களில் வைக்கப்பட்டிருந்த குண்டுகள் வெடித்தன. மூன்றாவதாக ஈராக்கின் மையப் பகுதியில் ஈரான் தூதரகத்துக்கு அருகே ஒரு குண்டு வெடித்தது.

இக்குண்டு வெடிப்புகளில் 20 பேர் உயிரிழந்திருப்பதாகவும் 45 க்கும் மேற்பட்டோர் காயமடைந்திருப்பதாகவும் ஈராக் உள்துறை அமைச்சக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு 7 வீரர்களுடன் இன்று டிஸ்கவரி விண்கலம் புறப்படுகிறது. இதற்காக அமெரிக்காவில் கென்னடி விண்வெளி மையத்திற்கு பயிற்சிக்காக வந்த விண்வெளி வீரர்கள், வீராங்கனைகள்.

# பெருநாட்டில் இடம்பெற்ற மண்சரிவில் 20 பேர் பலி

பெரு நாட்டின் வட கிழக்குப்பிரதேசத்தில் இடம்பெற்ற மண்சரிவில் 20 பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடுமையான மழை காரணமாக சிறிய கிராமமொன்றில் இந்தமண் சரிவு ஏற்பட்டுள்ளது.

இந்த மண் சரிவில் பாதிக்கப்பட்ட 25 பேரை காணவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

கிராமத்தில் உள்ள 120 வீடுகள் மண் சரிவினால் பாதிக்கப்பட்டுள்ளது.

மீட்புப் பணியாளர்கள் குறித்த பிரதேசங்களுக்கு விரைந்துள்ளதாகவும் இருப்பிடங்களை இழந்தவர்களுக்கு தேவையான நிவாரணங்கள் வழங்கப்பட்டு வருவதாகவும் அந்நாட்டு அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது.

இந்த மண் சரிவில் குறைந்த பட்சம் ஐம்பது பேர் காயமடைந்திருக்கலாம் எனவும் எவ்வாறெனினும், உயரிழந்த மற்றும் காணாமல் போனவர்களின் எண்ணிக்கை மேலும் உயர்வடையக் கூடுமென சர்வதேச ஊடகங்கள் அச்சம் வெளியிட்டுள்ளன.

# ஈரான் மீது தடைவிதிக்க இந்தியாவின் உதவியைக் கோரும் அமெரிக்கா

ஐநா.பாதுகாப்பு சபை மூலமாக ஈரான் மீது தடைவிதிக்க வளர்ந்து வரும் நாடுகள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என அமெரிக்கா கேட்டுக் கொண்டுள்ளது.

ஈரான் அணு ஆயுதம் தயாரிக்கிறது எனக் கூறி அதன் மீது பொருளாதார தடை விதிப்பதற்கான முயற்சிகளை அமெரிக்கா மேற்கொண்டுள்ளது. இதற்கு சீனா ஒத்துழைப்பு அளிக்க வேண்டுமென வலியுறுத்திய அமெரிக்கா தற்போது இந்தியாவின் ஒத்துழைப்பையும் கேட்டுள்ளது.

ஈரான்-பாகிஸ்தான்-இந்தியா இடையிலான பல கோடி ரூபாய் மதிப்புள்ள எரிவாயு பைப்லைன் தொடர்பான பேச்சுவார்த்தையை மீண்டும் இந்தியா ஆரம்பிக்கவுள்ளது. குறித்த கேள்விக்கு பதிலளித்த அமெரிக்க பொது விவகாரங்கள் துறை துணை அமைச்சர் பி.ஜே. கிரவுளி நிருபர்களுக்கு அளித்த பேட்டியில்,

ஈரான் விவகாரத்தில் ஒவ்வொரு நாடும் குறிப்பாக வளர்ந்து வரும் நாடுகள் முக்கிய பங்கு வகிக்க வேண்டும். இம் முயற்சிக்கு சர்வதேச அளவில் அனைவரும் ஒத்துழைப்பு அளித்து ஈரான் மீது விதிக்கப்படும் தடைக்கு கீழ்ப்படிய அந் நாட்டை வற்புறுத்தவேண்டும். இந்தியா உட்பட பல நாடுகள் ஈரானுடன் பொருளாதார உறவுகள் ஏற்படுத்திக் கொள்வது கவலையளிக்கிறது. அவ்வாறான உறவுகளைப் பின்பற்ற இது சரியான தருணம் அல்ல என்று கூறினார்.

# சதமடித்து அசத்தினார் மஹேல ஜெயவர்த்தனா; இரண்டாவது வெற்றியைப் பெற்றது பஞ்சாப்

(கொல்கத்தா)


மஹேல ஜெயவர்தனாவின் அதிரடி சதத்தின் மூலம் கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணி 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியை வெற்றி கொண்டது.

இதன் மூலம் கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணி தொடரில் தான் விளையாடிய 9 ஆவது போட்டியில் இரண்டாவது வெற்றியைப் பெற்றது.

இந்தியாவில் நடைபெற்று வரும் இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) அமைப்பின் மூன்றாவது இருபது-20 கிரிக்கெட் தொடரில் நேற்று கொல்கத்தாவில் நடந்த லீக் சுற்றின் 34 ஆவது போட்டியில் கங்குலி தலைமையிலான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும் சங்கக்கார தலைமையிலான கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணியும் மோதின.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி கிறிஸ் ஹயிலின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் 20 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுக்களையிழந்து 200 ஓட்டங்களை எடுத்தது.

இதில் கிறிஸ் ஹயில் 42 பந்துகளில் (6 பவுண்டரிகள், 8 சிக்ஸர்கள் அடங்கலாக) 88 ஓட்டங்களையும் அணித்தலைவர் சௌரப் கங்குலி 31 பந்துகளில் (5 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 36 ஓட்டங்களையும் மனோஜ் திவாரி 32 பந்துகளில் (2 பவுண்டரிகள் அடங்கலாக) 35 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்துவீச்சில் இர்பான் பதான், திரோன், பொப்ரா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.



பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணி மஹேல ஜெயவர்த்தனாவின் அதிரடி சதத்தின் மூலம் 18.2 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 204 ஓட்டங்களைக்குவித்து 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இதில் மஹேல ஜெயவர்த்தனா ஆட்டமிழக்காமல் 59 பந்துகளில் (14 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் அடங்கலாக) 110 ஓட்டங்களையும் அணித்தலைவர் குமார் சங்கக்கார 22 பந்துகளில் (2 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 38 ஓட்டங்களையும் யுவராஜ் சிங் ஆட்டமிழக்காமல் 16 பந்துகளில் (2 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் அடங்கலாக) 33 ஓட்டங்களையும் குவித்தனர். பந்துவீச்சில் ஷேன் பொன்ட், முரளி கார்த்திக் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இப் போட்டியில் சதமடித்து கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணியின் வெற்றிக்கு திருப்புமுனையமைத்த மஹேல ஜெயவர்த்தனா ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இவ் வெற்றியின் மூலம் கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணி தொடரில் தான் விளையாடிய 9ஆவது போட்டியில் 2ஆவது வெற்றியைப் பதிவு செய்து 4 புள்ளிகளுடன் உள்ளது.

அத்துடன் இறுதியாக விளையாடிய 4 போட்டிகளில் தொடர்ச்சியான தோல்வியைச் சந்தித்த கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணி இவ் வெற்றியின் மூலம் மீண்டது. ஊனினும் அரையிறுதி வாய்ப்பைபெற வேண்டு மாணால் அடுத்து வரும் 5 போட்டிகளிலும் வெற்றி பெற்றாக வேண்டிய கட்டாயத்திலுள்ளது. இதேவேளை கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி தான் விளையாடிய 9 ஆவது போட்டியில் 5 ஆவது தோல்வியைச்சந்தித்தது.

# கொலின்வூட், சங்வான் ஜொலிப்பு; பெங்களூர் அணியை வீழ்த்தியது டில்லி

(டில்லி)

கொலின்வூட், சங்வானின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் டில்லி டேர்டேவில்ஸ் அணி 37 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணியை வீழ்த்தியது.

ஐ.பி.எல். தொடரில் நேற்று டில்லியில் நடைபெற்ற லீக் சுற்றின் 35ஆவது போட்டியில் காம்பீர் தலைமையிலான டில்லி டேர்டேவில்ஸ் அணியும் கும்ளே தலைமையிலான பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணியும் மோதின.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய டில்லி டேர் டேவில்ஸ் அணி ஹொலின்வூட்டின் அதிரடியான ஆட்டத்தின் மூலம் 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களையிழந்து 184 ஓட்டங்களைக் குவித்தது.

இதில் ஹொலின்வூட் ஆட்டமிழக்காமல் 46 பந்துகளில் (3 பவுண்டரிகள், 7 சிக்ஸர்கள் அடங்கலாக) 75 ஓட்டங்களையும் வீரேந்திர சேவாக் 22 பந்துகளில் (5 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 35 ஓட்டங்களையும் வோர்னர் 22 பந்துகளில் (3 பவுண்டரி, 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 33 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் அணித்தலைவர் அனில் கும்ளே, மிதுன், அப்பண்ணா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 185 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி சங்வானின் துல்லியமான பந்துவீச்சில் முன்னணி வீரர்களை இழந்து 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை பறிகொடுத்து 147 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 37 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் ஜக் கலிஸ் 42 பந்துகளில் (5 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 54 ஓட்டங்களையும் ரோஸ் ரெய்லர் 10 பந்துகளில் (3 பவுண்டரிகள் அடங்கலாக) 22 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் சங்வான் 4 ஓவர்கள் பந்துவீசி 22 ஓட்டங்களைமாத்திரம் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் அமித் மிர்ஷா 3 விக்கெட்டுக்களையும் மகரூப், விக்போரி, பாத்தியா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

இவ்வெற்றியின் மூலம் டில்லி டேர்டேவில்ஸ் அணி தான் விளையாடிய 9 போட்டியில் 6 ஆவது வெற்றியைப் பெற்று 12 புள்ளிகளுடன் மூன்றாமிடத்திலிருந்து 2ஆவது இடத்துக்கு முன்னேறியது.

இதேவேளை பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி தான் விளையாடிய 9 ஆவது போட்டியில 4ஆவது தோல்வியைச் சந்தித்தது.

# பஞ்சத்தில் பஞ்ஜாப்

ஐ.பி.எல். அமைப்பின் மூன்றாவது இருபது-20 கிரிக்கெட் தொடரில் நேற்று முடிபடைந்த லீக் சுற்றின் 35ஆவது போட்டி வரை மும்பை இந்தியன்ஸ் அணி 14 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் உள்ளது. அத்துடன் கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணி நேற்றுவரை விளையாடிய 9 போட்டிகளில் 2 போட்டிகளில் மாத்திரம் வெற்றி பெற்று 4 புள்ளிகளுடன் 8ஆவது அணியாக பின்தங்கியுள்ளது. தொடரில் நேற்று முடிபடைந்த 35ஆவது லீக் போட்டிவரை புள்ளிகள் பட்டியல் வருமாறு,

| DLF INDIAN PREMIER LEAGUE அணிகள் | போட்டிகள் | வெற்றி | தோல்வி | சமநிலை | புள்ளிகள் | ஓட்டவிகித சராசரி |
|---|---|---|---|---|---|---|
| மும்பை இந்தியன்ஸ் | 8 | 7 | 1 | 0 | 14 | + 1.412 |
| டில்லி டேர்டேவில்ஸ் | 9 | 6 | 3 | 0 | 12 | + 0.397 |
| பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் | 9 | 5 | 4 | 0 | 10 | + 0.428 |
| சென்னை சுப்பர் கிங்ஸ் | 9 | 4 | 5 | 0 | 8 | + 0.042 |
| கொல்கத்தா நைட் ரைடர்ஸ் | 9 | 4 | 5 | 0 | 8 | - 0.444 |
| ராஜஸ்தான் றோயல்ஸ் | 9 | 4 | 5 | 0 | 8 | - 0.455 |
| டெக்கான் சார்ஜர்ஸ் | 8 | 3 | 5 | 0 | 6 | - 0.825 |
| கிங்ஸ் லெவின் பஞ்சாப் | 9 | 2 | 7 | 0 | 4 | - 0.504 |





காரைநகரில் நேற்றிரவு இடம்பெற்ற ஐ.தே. கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்துக்குச் சென்ற வேட்பாளர்கள் அழைத்துச் செல்லப்படுவதையும், பிரமுகர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

## சட்ட விரோத...

வதனை வேட்பாளர்கள் மற்றும் கட்சித் தலைவர்கள் தடுக்க வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

சட்டவிரோத ஆயுதங்கள் மற்றும் வெடி பொருள் பாவனை தொடர்பில் தங்களுக்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் வன்முறைகள் தொடர்பில் இது வரையில் 274 முறைப்பாடுகள் பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் இந்தச் சம்பவங்கள் தொடர்பில் இதுவரையில் 244 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

## முகாம்களுக்கு...

காண்பதற்காகவே இந்தத் தேர்தலில் போட்டியிடுவதாக வேட்பாளர்கள் கூறுகின்றார்கள்.

ஆயினும் இடம்பெயர்ந்த வாழ்க்கைக்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டுச் சொந்தக் கிராமங்களில் இயல்பான சூழலில் தமது வாழ்க்கையை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் விரைந்து செய்யப்பட வேண்டும் என்பதே வன்னி மாவட்ட வாக்காளர்களின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது என அவர்கள் மேலும் தெரிவித்தனர். (ச-5)

# பொதுத் தேர்தல் வன்முறைகளில்...

இலங்கையில் எதிர்வரும் பொதுத் தேர்தலை முன்னிட்டு கடந்த வாரத்தில் அதிகளவு வன்முறைகள் பதிவாகியுள்ளதாக கபே அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

இது குறித்து அவ் அமைப்பின் கீர்த்தி தென்னக்கோன் கருத்துத் தெரிவிக்கையில்,

பொதுத் தேர்தலின் எதிரொலியாக கட்சிகளுக்கிடையிலான வன்முறைகளும் உட்கட்சி மோதல்களும் வரையறையின்றி இடம்பெற்றுள்ளது.

இவ் வன்முறைகளால் பலர் கொல்லப்பட்டும் காயமடைந்தும் உள்ளனர். அம்பாறை மாவட்டத்தில் நேற்று ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வேறுபட்ட வேட்பாளர்களின் ஆதரவாளர்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலில் கூட்டமைப்பின் அம்பாறை நகர சபையின் பிரதி மேயரும் ஆதரவாளர்கள் சிலரும் காயமடைந்துள்ளனர்.

பேரியல் அஷ்ரப், சரத் வீரசூரிய ஆகிய ஒரே கட்சி ஆதரவாளர்களுக்கிடையில் இந்த மோதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.. பிறிதொரு சம்பவத்தில் கூட்டமைப்பின் இரு ஆதரவாளர்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலில் குருநாகல் பிரதேச சபைத் தலைவர் காயமடைந்துள்ளார். இதுவரை கிடைக்கப் பெற்ற தேர்தல் வன்முறைச் சம்பவங்களிலும் பார்க்க சென்றவார இறுதியில் இடம்பெற்ற சம்பவம் பாரதூரமாகக் காணப்படுகின்றது.

தென்னிலங்கையில் அனைத்து மாவட்டங்களிலும் இவ் வன்முறைகள் இடம்பெற்றுள்ளமையை அவதானிக்க முடிகின்றது. வடக்கில் யாழ்ப்பாணத்தில் வன்முறைச் சம்பவம் பெரிதாக இல்லை என்றாலும் வன்னி மாவட்டம் மன்னார் தேர்தல் தொகுதியில் அதிகளவான வன்முறைச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் அனைத்தும் தேர்தல் சட்டவிதிகளை மீறியதாகக் காணப்படுகின்றது என அவ் அமைப்பு மேலும் தெரிவித்தது. (ச-9)

## ஆறு இலங்...

பவானிசாகர் ஆகிய முகாம்களிலிருந்து கடந்த மார்ச் 31 ஆம் திகதி வெளியேறி இராமேஸ்வரத்திலிருந்து இலங்கைக்குத் தப்பிச் செல்ல முயற்சித்துள்ளனர்.

படகுகளில் இவர்களைக் கொண்டு வந்தவர்கள் நான்காவது மண் பகுதியில் இறக்கி இதுதான் தலைமன்னார் எனக் கூறிச்சென்றார்கள் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். (ச-5)

## பௌத்த...

இதேவேளை நேற்று முன்தினமிரவு நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பேரில் பௌத்த மத குருமார்கள் தங்கியிருந்து உண்ணாவிரதம் மேற்கொள்வதற்காக தற்காலிகமாக அமைக்கப்பட்ட கூடாரங்களைப் பொலிஸார் அகற்றியுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது. (ச-5)

## ஐ.நா...

குழுவை அமைப்பதற்கு அவசரப்படுகின்றது. ஆனால் ஈராக் போரில் பிரித்தானியாவின் பங்கு கொள்ளலைப் பற்றி ஆராய்வதற்கான குழுவை நியமிப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபைக்கு ஒன்பது வருடங்கள் எடுத்திருந்ததையும் நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம் எனத் தெரிவித்தார்.

எனினும் திட்டமிட்டபடி எந்தவித காலதாமதமும் இன்றி குறிப்பிட்ட நிபுணர் குழு அமைக்கப்படும் எனப் பான் கீ மூன் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## இராணுவ...

நீதிமன்ற விசாரணைக்காக மூன்று புதிய சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நியமித்துள்ளார்.

ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு எதிரான இரண்டாவது இராணுவ நீதிமன்ற விசாரணை மீண்டும் இடம்பெறவிருப்பதாக குறிப்பிடப் படுகின்றது.

ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு எதிரான இரண்டாவது இராணுவ நீதிமன்ற விசாரணை கடந்த மார்ச் மாதம் 17 ஆம் திகதி நடைபெற்றிருக்கின்றது. இதேவேளை ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு எதிரான முதலாவது இராணுவ நீதிமன்ற விசாரணை நாளை மீண்டும் நடைபெறவுள் ளது. (ச-5)


பாராளுமன்றப் பொதுத் தேர்தல் -2010
யாழ். மாவட்டம்



- அசைக்க முடியாத தமிழ்ப் பற்றும்
- சமச்சீரான சமூக நோக்கும்
- எவருக்கும் அடிமைப்படாத மன உறுதியும்
- அப்பழுக்கற்ற அயராத சேவையும் கொண்ட

ஆ.ந.இராசேந்திரன்
Dip.in Accy, APFA, AMA, FMAAT
(சிரேஷ்ட கணக்காளர், முன்னைநாள் தலைவர்-யாழ்.மாவட்ட அபிவிருத்திச் சபை)

அவர்களைப் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்வோம்.

இலங்கை தமிழரசுக் கட்சி
(தமிழ் தேசியக் கூட்டமைப்பு)
X 4
யாழ்ப்பாணத் தொகுதி வாக்காளர்கள்
(சி-5096)



தமிழ் இனத்தின் விடிவிற்காய் நாம் ஒன்று சேர வேண்டும்.
தமிழீழ விடுதலையை என் கண்கள் காண வேண்டும்
அயராது உழைக்கின்ற ஏழை மக்கள் கூட - இவ்
அகிலத்தில் உயர்ந்தவராய் உலகு போற்ற வேண்டும்.
-மாமனிதர் கிட்டினன் சிவநேசன் -

மாமனிதர் சிவநேசன் தமிழ்த் தேசிய விடுதலைக்காக தன்னுயிரை தியாகம் செய்தவர்

முள்ளிவாய்க்கால் போரழிவிற்கு பின்னரும் இன்னமும் தமிழ்த் தேசிய கொள்கைகளில் உறுதியாக நிற்கின்ற.....

இத்தேர்தலில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் சைக்கிள் சின்னத்தில் களம் இறங்கியுள்ள.....

தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணிக்கு முழு ஆதரவினையும் வழங்குமாறு மாமனிதர் சிவநேசனின் ஆதரவாளர்கள் மற்றும் நண்பர்களை கேட்டுக்கொள்கின்றோம்.

தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி
பாராளுமன்றப் பொது தேர்தல் 2010
அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்
X
(சி-5098)

தமிழ்த் தேசிய கொள்கைகளில் உறுதியாகவுள்ள மாமனிதர் கிட்டினன் சிவநேசனின் ஆதரவாளர்கள்
கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.

தமிழ்க் காங்கிரஸ்



X
10
(சி-510)
S.வரதராஜன்
(முதன்மை வேட்பாளர்)
பிரபல பொருளியல் ஆசிரியர்

தமிழர் விடுதலைக் கூட்டணி



வீ.ஆனந்தசங்கரி
X 1

X
வெற்றுக் கோசங்கள் வேண்டாம்
வீழ்ந்த மக்களுக்கு கரம் கொடுப்போம்



ஏழாலை த.திருஞானசம்பந்தர் J.P
(Ret. Station Master)
X 3
(சி-5097)

பாராளுமன்ற பொதுத் தேர்தல் 2010
தமிழ் தேசியக் கூட்டமைப்பு



யாழ்மாவட்டம்
X
இலங்கைத் தமிழரசுக் கட்சி

எமது அன்பான தமிழ் உறவுகளே!
உங்கள் வாக்குகள்
தமிழரின் வலுவைக் கூட்டட்டும்
உரிமைக்குரலுக்கு வலுச் சேர்க்கட்டும்
அரசியல் தீர்வுக்கு வழியமைக்கட்டும்
அழிவுகளிலிருந்து மீண்டெழ அனுசரணையாகட்டும்

X 7   X 10



கந்தையா அருந்தவபாலன்
B.A(HONS), M.Ed, PGDE, PGDEM,
அதிபர், யா/டிறிபேக்கல்லூரி, சாவகச்சேரி
(சி-5094)

சிவஞானம சிறீதரன்
B.A, M.Ed, PGDE, SP.Tr.(Ag), SLPS
அதிபர் , கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலயம்

மண்பற்றுள்ள கல்வியியலாளர்க்கு வாக்களியுங்கள்


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3.2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.04.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.